

11

கலை இலக்கிய இதழ்

மின்னல் வெளியீட்டகம் - ஒலுவில்

350/-
விலை ரூபா :

ISSN: 9 773030 717002

Since 2001

Issue 11 | July - September

**பிரதம ஆசிரியர் :**
**அஸீஸ் எம் பாயிஸ்**

**பிரதம ஆலோசகர்கள் :**
**பேராசிரியர் எஸ் எம் அய்யூப்**
**உலகக் கவிஞர் சோலைக்கிளி**

**தளக்கோலம், அட்டைவடிவமைப்பு :**
**சாஜித் அலி**

**அலுவலகம் :**
**இல. 59/2, பழைய தபாலக வீதி,**
**ஒலுவில் -07 (கி.மா)**
**த.கு.எண் : 32360**
**இலங்கை.**

**தொடர்புகள் : +94776619949**

**படைப்புகளை அனுப்ப வேண்டிய**
**வாட்ஸ்அப் இலக்கம் : +94758238199**

**சஞ்சிகை ISSN இலக்கம் :**
**9 773030 717002**



**விலை : ரூபா. 350/-**

**வெளியீடு :**
**மின்னல் வெளியீட்டகம்,**
**ஒலுவில் (கி.மா.)**
**இலங்கை.**

**இனி வரும் இதழ்களில் கீறல் விளம்பரங்களையும் சேர்த்துக் கொள்ள திட்டமிட்டுள்ளது.**



**கறுப்பு வெள்ளை அல்லது வர்ணகளிலான உங்கள் விளம்பரங்களுக்காக பக்கங்களை ஒதுக்கிக் கொள்ள அழையுங்கள் - 0776619949**

# The Editorial

கீறலின் மீள் எழுச்சியின் பின்னர் வெளி வரும் மூன்றாவது இதழ் இது. கடந்த இரண்டு இதழ்களின் தளவடிவமைப்பினை நானே செய்திருந்தேன். கடந்த கீறல் வெளியீட்டோடு எம்மோடு வந்து இணைந்து கொண்ட முன்னட்டை மற்றும் தளவடிவமைப்பாளர் சகோதரர் சாஜித் அலி இம்முறை கீறல் 11 இன் முழுமையான வடிவமைப்பு பொறுப்பை அவரே ஏற்றுக் கொண்டு வடிவமைத்து தந்துள்ளார். மிக அழகாகவும் நேர்தியாகவும் இருக்கிறதென்பதில் வாசகர்களாகிய நீங்கள் திருப்தியுறுவீர்கள் என்று நம்புகிறேன்.

இலக்கிய இதழாக தனது பயணத்தை தொடரும் கீறலும் பல்சுவைக்காக பல்வேறு விடயங்களை பரந்துபட்ட வெளியில் பேச முனைகிறது. காத்திரமான உங்களது படைப்புக்களையும் கீறலின் வெளியில் நீங்களும் வரைந்து கொள்ளலாம். இலக்கியம் வெறும் முகநூலோடு முடங்கி, நலிந்து வாசிப்பற்ற புதிய எழுத்தாளர் படையின் படைப்புக்களால் தரமற்று போகும் ஒரு துர்அதிஷ்டமான நிலைக்கு தள்ளப்பட்டு செல்வதை இன்று அவதானிக்கக் கிடைப்பது கவலை தருகிறது.

மாசமான பெண் வாந்தியெடுப்பது போல் தினமும் விரும்பிய பொழுதெல்லாம் கவிதை என்ற பெயரில் வாந்திகளால் நிரம்பி வழிகிறது முகநூல்கள். இந்த நிலை மாற இளைய படைப்பாளிகள் கட்டாயம் தங்களை நல்ல இலக்கியத்தை தேடிப்படித்து தன்னை வளப்படுத்திக் கொள்ளாத வரை இந்த வாந்திகள் நிற்கப்போவதில்லை.

படைப்பிலக்கியத்துறையில் இருக்கும் படைப்பாளிகளை வாசிக்கத் தூண்டி அவர்களுக்கும் களம் கொடுத்து அவர்களையும் நல்ல படைப்பாளிகளாக மாற்றுவதே கீறலின் தொடர்பயணத்தில் நோக்கம்.

வாசிப்போம்...
வாசிப்போம்...
வாசிப்போம்...
வாசிப்பு ஒன்றே நம்மை பூரணப்படுத்தும்.

அன்புடன்
**அஸீஸ் எம் பாயிஸ்**
பிரதம ஆசிரியர்

இதழ் -11

# வாசல்

**மொழிபெயர்ப்புக் கவிதை**


• ஜலீலா முஸம்மில் -02


**கவிதைகள்**


• மருதூர் ஜமால்தீன் - 07
• முல்லை அமுதன் - 08
• அஸீஸ் எம் பாயிஸ் - 11
• கம்மல்துறை இக்பால் - 12
• ஸஹ்னால் பேகம் - புத்தளம் - 16
• மக்கொணையூராள் - 21
• ஜனதா லத்தீப் - 25
• நஸ்மியா ஏ.கரீம்-போருதொட்ட - 25
• ஹிம்சானா - 31


**முற்றமும் பொறவளவும் - கவிதைப்பக்கம்**


• சோலைக்கிளி -36
• பானு ஜிஃப்ரி-சாய்ந்தமருது -44
• ஹுமைரா அல் அமீன் -44
• அஸ்ரபா நூர்தீன்-பாலையூற்று -52
• ஸஞ்சிதா முஜீபுர்ரகுமான் -53
• மருதமுனை முனாஸ் -53
• வசந்ததீபன் (இந்தியா) -54
• பௌசான் முகைதீன் -59
• ஹிஜாஸ் அகமட்-சாய்ந்தமருது -59
• மென்பனி -60
• ஒலுவில் எஸ்.முஸம்மில் -60
• காத்தான்குடி றுஷ்தா -63
• கீறலுக்கு வாழ்த்து-ஜனதா லத்தீப் -64
• முர்ஷிதா ஷிரீன் - சம்மாந்துறை -65
• பாத்திமா சில்மியா-மாவனெல்ல -66
• ரோஷான் ஏ. ஜிஃப்ரி -66
• வை. ஜெஸ்மின் - ஹப்புதளை -71
• லத்தீப் நிஸ்மியா - ஒலுவில் -72


**சிறுகதைகள்**


• ஷிபானா பதா - பதுளை -13
• கஸ்ஸாலி அஸ் ஸம்ஸ் -அட்டுளுகம -17
• மிஸ்ரியா அமீன் - கிண்ணியா -38
• சம்மாந்துறை மஷூறா -22


**குறுங்கதைகள்**


• ஹாரிஸ் முகம்மட் - ஓட்டமாவடி -30
• ஜெனீரா தௌபீக் - கிண்ணியா -32


**கட்டுரைகள்**


• பேராசிரியர் எஸ்.எம்.அய்யூப் -03
• அபூஸைத் பாரிக் -09
• அகமட் பிஸ்தாமி -54
• முபர்ரிஜ் நயீம் -28
• றிஸான் சுபைதீன் -45
• பிரமி -49
• நப்லா அன்புடீன் -67


**அறிவியல் தகவல்**


• அஸீஸ் எம் பாயிஸ் -26


**முன்னட்டை வடிவமைப்பாளர் அறிமுகம்**


• அபூ ஹாமித் -34


**அனுபவப் பகிர்வு**


• ஆஷிக் ஹுசைன் -58
• தௌபீக் எம் நவீத் -61


**உளவியல் கட்டுரை**


• ஸைபா கானம் -62



# மௌலானா ரூமியின் கவிதை

எனது மருட்சியில்
என் பேரன்பின் மலர்த்தோட்டம்
காண்கிறேன்
எனது தலைச்சுற்றலில்
எனது கிறுகிறுப்பில்
எனது மெல்லிய மதுமயக்கத்தில்
சுற்றும் ராட்டினம் போல
சுழன்று கொண்டிருந்தேன்
திவ்விய நர்த்தனம்
புரிந்துகொண்டிருந்தேன்

அவ்வேளையில்
என்னிருப்பை உணர்த்தும்
மூலஸ்தானமாய்
என்னையே கண்டேன்
ஆதியின் ஆரம்பத்தில்
அங்குதானிருந்தேன்
நேசத்தின் ஆன்மாவாக
விரிந்து கிடந்தேன்
ஆனால்
இப்போது நான் ஒரு
போதையின்றிய நிதானி
என்னுள்ளே அதன் மீத்தங்களோடு
நேசத்தின் நினைவுகளும்
இன்னும் சில துயரங்களும்
மட்டுமே
ஆனந்தமே என் ஏக்கம்
எனக்கோர் உபகாரம் புரிக..
நான் வேண்டுவது கருணைதான்
எனது நேசம் கூறுவதைக் கேட்பீராக:
"என்னை நோக்கு
என் பால் செவி கொடு
ஏனெனில் அதற்காகவே
நானிங்கிருக்கிறேன்"

நானே உன் நிலவும் நிலவொளியும்
நானே உன் பூந்தோட்டமும் நீரோட்டமும்
உன் பாலுள்ள ஈர்ப்பில் இவ்வழியில்
நான்
ஆனால்
பாதணிகளின்றி
போர்வையுமின்றி

உன் துயரம் யாவும் களை
உன்னை நேசிக்க
உன்னைப் போஷிக்க
நீ புன்னகைக்க வேண்டுமென்பது
என்னுவப்பு
ஓ.. இனிமையின் கசப்பே..
உன்னை நான் ஆற்றுப்படுத்துவேன்
குணப்படுத்துவேன்

நானாகிறவன் முட்கள் சூடினும்,
உனக்காக ரோஜாக்களைக் கொண்டு
வருவேன்

---

ஆங்கிலம் வழித் தமிழாக்கம்:
**Dr. ஜலீலா முஸம்மில் - ஏறாவூர்.**

# ஜெமீலின் கவிதைகளில் உள்ள குழந்தைகள் உலகம்

**பேராசிரியர் எஸ்.எம்.அய்யூப்**



1990களிலிருந்து எழுதத் தொடங்கியவர் கவிஞர்ஜெமீல். சுமார் பத்து கவிதை நூல்களை இலக்கியப் புலத்திற்கு தந்திருக்கின்றார் அவர். ஏறத்தாழ அவருடைய எல்லா கவிதை நூல்களிலும் விசித்திரமான குழந்தை உலகம் பற்றிய காட்சிப் படுத்தல்கள், படிமங்கள் மற்றும் குறியீடுகள் வந்தே போகின்றன. ‘‘ஆயத்’’ எனும் அவரது நூலில் உள்ள கவிதைகள் சிலவற்றில் காணப்படும் குழந்தை உலகம் பற்றிய சித்தரிப்புகளை இக் கட்டுரை விபரிக்கின்றது.

கம்பிக் கூட்டினுள் அடைக்கப் பட்டு ஆகாயத்தை இழந்து நிற்கும் பறவையொன்று ஒரு குழந்தையின் கன்னத்தில் முத்தமிடுவதன் மூலம் இழந்து போன தன் ஆகாயத்தை பெற்றுக் கொள்வதாக ஜெமீலின் கவிதை குறிப்பிடுகின்றது.

நானும் ஹயாவுமாக
பறவைகள் காட்சி சாலைக்குச்
செல்கிறோம்

அங்கு விதம் விதமான பறவைகள்
வளர்க்கப்படுகின்றன
அதன் கண்களில் தெரிகிறது
இழந்து போன ஆகாயம்
பறவைகளை கண்ட பேரானந்தத்தில்
பட்டாம்பூச்சியென
சிறகடித்துப் பறந்தாள் ஹயா

அதிலொரு பறவை
அவளை தலையசைத்து அழைக்கிறது

உடன் அதனருகில் சென்றதும்
அவள் பட்டுக் கன்னத்தில்
இதழ் பதிந்த முத்தமொன்றை
கம்பி இடுவலினூடாக பரிசளிக்கிறது

ஈரம் உலர்வதற்கிடையில்
முத்தத்தின் ஸ்பரிசத்தை உணர்ந்தவள்
திட்டமிட்டு பறிக்கப்பட்ட
அதன் எல்லையற்ற ஆகாயம்
தனது கன்னக் குழியில்
விரிவதாக சொல்கிறாள் ஹயா

குழந்தைக்கும் ஆகாயத்திற்கும் தொடர்பிருக்கின்றது. குழந்தையை தொடுவதும் ஆகாயத்தைத் தொடு

வதும் குழந்தையை இழப்பதும் ஆகாயத்தை இழப்பதும் ஒன்றாகும்.

ஒரு குழந்தையை சீண்டும் போது முழு ஆகாயமுமே அதிர்ந்து போகின்றது. ஒரு குழந்தையை அடிக்கும் போது முழு வான் மண்டலமுமே நொறுங்கிப் போகின்றது. ஒரு குழந்தையை துஷ்பிரயோகம் செய்யும் போது முழு பிரபஞ்சமுமே சிதிலமாகிப் போகின்றது.

குழந்தையும் ஆகாயமும் இந்த பிரபஞ்சத்தின் அங்கங்கள். குழந்தையின் கன்னச் சிவப்பு செவ்வானத்தில் தெரிகின்றது. சூரியன் மறையும் போது தோன்றும் இருள் குழந்தை கண்களை மூடும் போது வருகின்றது. குழந்தையின் சிரிப்பில் சூரிய வெளிச்சம் பிரகாசிக்கின்றது. பௌர்ணமியும் அமாவாசையும் குழந்தையின் மகிழ்விலும் கவலையிலும் ஒழிந்திருக்கின்றன. மழை என்பது குழந்தையின் அழுகை, சுட்டரிக்கும் வெயில் என்பது கோபம். இரவையும் பகலையும் குழந்தையின் கண்களின் கருவிழியிலும் வெண்விழியிலும் காணலாம்.

குழந்தையின் முகத்தில் முழு ஆகாயமுமே ஒளிந்திருப்பதனால் குழந்தையை தொடுவதன் மூலம் இழந்து போன தன் ஆகாயத்தை மீட்டிக் கொள்கின்றது பறவை. மனிதர்களுக்கு தெரியாத இந்த ஞானத்தை பறவை தெரிந்திருக்கின்றது. பறவை ஒரு ஞானி. கூண்டுகளை விட்டு வெளியே வந்தால் ஞானம் கிடைக்கும் என்கின்றார்கள். இங்கே கூண்டுக்குள் இருக்கும் பறவைக்கும் ஞானம் கிடைத்திருக்கின்றது.

வீட்டினுள் இருக்கும் இருளை விரட்டி ஒளியை கொண்டு வருவதற்காக மின்மினிகளை போத்தலினுள் அடைத்து வைக்கின்றார் தந்தை. மூச்சு திணறி இறந்துவிடும் என அஞ்சி போத்தலில் இருந்து திறந்து விடுகின்றது குழந்தை. இதனால்,

அறையெங்கும் விண்மீன்களென
பறந்து திரியும் மின்மினிகளோடு
அவளும் ஒரு மின்மினியென
அலாதியாகப் பறந்து திரிந்தாள்

சந்தோஷத்தின் உச்சத்தில்
அவள் இதழ் வழிந்த சிரிப்பு
அறையெங்கும் ஒளியெனப் பெருகி
மின்மினிகளின் வனமானது வீடு

இந்த ஜெமிலின் கவிதை குழந்தையின் சிரிப்பை இருளை விரட்டும் ஒளியென வர்ணிக்கின்றது.

பல பொழுதுகளில் இருண்டு கிடக்கும் வாழ்வை வெளிச்சமாக்குவதும் பல்வேறு கோணங்களிலிருந்து பாய்ந்து வரும் இருட்டை பெற்றோரின் உள்ளத்தில் இருந்து அகற்றுவதும் குழந்தையின் சிரிப்புத்தான்.

குழந்தைகள் சிரிப்பதற்கான வாய்ப்புகளை வரையறுக்கும் போது வீட்டின் சுவர்களுக்குள்ளும், அதற்கு வெளியேயும் இருட்டுகள் ஒரு வௌவாலைப் போல் வந்து தொங்கிக் கொள்ள ஆரம்பிக் கின்றன.

குழந்தையின் சிரிப்புச் சத்தத்தில்தான் இருட்டுகள் தறிகெட்டு ஓடுகின்றன.

தூக்கணாங்குருவி தன் கூட்டுக்குள் இருக்கும் இருட்டை விரட்டியடிப்பதற்கு மின்மினிகளை கூட்டுக்குள் ஒட்டுவது மாதிரி வீட்டுக்குள் இருக்கும் இருட்டை விலக்குவதற்கு குழந்தையின் சிரிப்புச் சத்தம் தேவைப்படுகின்றது.

நடக்கும் நிகழ்வுகளை எல்லாம் நேர்மறையாகப் பார்க்கும் மனோநிலை (Positive Mind) மனிதன் பெற்றுக் கொண்ட மிகப்பெரிய அருளாகும்.

நடுக்கடலில் சூறாவளிக்குள்ளும் அனர்த்தங்களுக்குள்ளும் மாட்டிக் கொண்ட ஒருவன் அச்சப்படுவதை விடுத்து 'நடுக்கடலில் ஒரு திடுக்கிடும்' இரவு எனும் கட்டுரைக்கு குறிப்பு கிடைத்துள்ளதாக களிப்படைய வேண்டும் எனவும் விறகு வெட்டும் போது விரலை தொலைத்தவன் 'நகம் வெட்டும் நேரம் மிச்சம்' என எண்ணிக்கொள்ள வேண்டும் எனவும் கவிஞர் வைரமுத்து கூறுகின்றார்.

ஒரு ஜப்பானிய ஹைக்கூ கவிஞன் எரிந்து போன தன் வீட்டுக் கூரையைப் பார்த்து 'இனி உதிக்கும் நிலாவை இங்கிருந்தே பார்க்கலாம்' எனக் கூறுவதாக கவிக்கோ அப்துல் ரஹ்மான் குறிப்பிடுகின்றார்.

கஷ்டமான சூழலை கூட களிப்பாக மாற்றி நேர்மறை மனதை விருத்தியாக்குவதற்கான உத்திகள் தான் இவை.

'சூரியனின் அஸ்தமனத்திற்காக அழுது கொண்டிருந்தால் உன்னால் நட்சத்திரங்களையும் ரசிக்க முடியாமல் போய்விடும்' என ரவீந்திரநாத் தாகூர் எச்சரிப்பதும், 'தேய்பிறையே உனக்குள்தான் பூரண சந்திரன் புதைந்து கிடக்கின்றான்' என அல்லாமா இக்பால் நம்பிக்கையூட்டியதும் இந்த நேர்மறை மனதைப் பற்றித்தான்.

இந்த நேர்மறை மனதை குழந்தைகள் பெற்றுள்ள விதம் பற்றி ஜெமீல் இப்படி விபரிக்கின்றார்.

வெளியேறிச் செல்ல
சிறு துவாரமுமின்றி
வீட்டு முன்றலில் தேங்கி நிற்கிறது
பின்னிரவு பெய்த
அடை மழையின் தாரைகள்

வாசல் தோறும் பரவி நிற்கும் நீரை
அடித்து துரத்தி விட
எல்லைச் சுவரில் துவாரமொன்றை
துளையிடத் துவங்கினேன்

அக்கணங்களினிடை

ஒரு கப்பலைச் செய்து
அதில் ஓடவிட்டு
தேங்கி கிடந்த மழை நீரை
கடலாக்கினாள் சிறுமி

அவளின் கடலை
சிதைத்து விட மனமின்றி
நானும் சிறுமியோடு சேர்ந்து
கப்பலில் பயணம் செய்தேன்

குழந்தைகள் உலகம் விசித்திதரங்களால் நிறைந்தவை. அவர்களது உலகம் கனவுகள், கற்பனைகள், களிப்புகள், ஆசைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் கொண்டு நிரப்பப் பட்டவை. அங்கே கற்கள் உயிர் பெற்று உலவுகின்றன. கால்நடைகள் சிறகு முளைத்துப் பறக்கின்றன. மரங்களும் மலைகளும் அவர்களோடு கைகோர்த்து நடக்கின்றன. சடப் பொருட்கள் பேசுகின்றன. சுவரில் வரையப்பட்ட மரங்கள் கூட நிஜ மரங்களாக மாறிவிடுகின்றன.

வாழ்க்கைச் சுமைகள் கழுத்தையும் இதயத்தையும் அழுத்தி சிலுவையில் அறைவதற்கு முன்னால் உள்ள இந்த பிள்ளைப் பருவம் ரசிக்கத்தக்கவை மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டவை.

இங்கே ஒரு சிறுவனின் கையில் ஆகாயத்தில் இருக்கும் வானம் அகப்படும் விதம் பற்றி ஜெமீலின் கவிதை காட்சிப்படுத்துகின்றது.

நதியில் விழுந்து
வெண்ணிற கம்பளமென
மிதக்கிறது வானம்
தான் அநேக தடவைகள்
தொட நினைத்த வானம்
காலடியில் மிதப்பது கண்டு
வியந்து பார்க்கிறான் சிறுவன்

உடன் உள்ளங் கைகளுக்குள்
வானத்தை அள்ளி எடுத்து
வீட்டுக்கு எடுத்துச் செல்கிறான்

செல்லும் வழி நெடுகிலும்
அவனை அறியாமல்
துளித் துளியாக சிந்துகிறது வானம்

இருந்தும் சிறுவனின்
கைகளில் எஞ்சி இருக்கும்
கடைசித் துளியிலும்
மிதந்திருக்கக் கூடும் வானம்

பெரியவர்கள் எப்போதும் வயிற்றையே பார்த்துக் கொண்டிருப்பதால் வானம் அவர்களுக்கு வசப்படுவதில்லை. இந்தத் தொகுப்பில் உள்ள ஏராளமான கவிதைகள் குழந்தைகளின் விசித்திரமான உலகம் பற்றி மட்டும் பேசாது அவர்கள் நாளாந்த வாழ்வில் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார, மற்றும் உளவியல்சார் பிரச்சினைகள் குறித்தும் பேசுகின்றன.

புலமைத்துவ மரபில் நின்று குழந்தைகள் உலகம் பற்றிப் பேசுவதற்கான அனேக கவிதைகளை பொதுவாக அவரது கவிதைகளும் இந்த ‘ஆயத்’ எனும் கவிதை நூலும் கொண்டிருக்கின்றன.

# பெருந்தொல்லை

விடியும் பொழுதுகளில்
வினைகளே பரிசாக
முடிவிலாத் தொடர்கிறது
முடிக்கும் கரமின்றித்

தொல்லையடா தொல்லை
பெருந் தொல்லையடா தொல்லை

கற்பழிப்பும் கழுத்தறுப்பும்
கடிக்கும் வெறிநாயாய்
தற்கால மனிதரில்
தலையெடுத்த செயலதுவாய்

வீடுடைத்துக் களவெடுத்து
வீதிகளில் பறித்தெடுத்து
காட்டிலுடல் புதைக்கும்
காமுக மனிதரினால்

பெண் தனி சென்றாலோ
பேயாய்ப் பாய்ந்தவளின்
கண் போன்ற மானத்தைக்
கசக்கிடத்துடிப்போரால்
போதையே தொழிலாக்கி
பாலகரை மாணவரை
பேதையெனக்கெடுத்து
பேதையென ஆக்குவோரால்

நீதிகளும் நேர்மையதும்
நீசர்கள் கரங்களிலே
சோதிமறை நெறியற்ற
சுரணையற்ற கயவரினால்

வேதங்களைப் பகையாக்கி
வெறிமனதாலொற்றுமையை
பாதகராய்ச் சிதைத்து லாபம்
பெற்றிடமுயல்வோரால்

இந்நிலைகள் மாறாது
இந்நாடு சிறப்புறுமா
நொந்தோர் ஏங்குகிறார்
நல்லோர் வரவின்றேல்

தொல்லையடா தொல்லை
பெருந் தொல்லையடா தொல்லை

**கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்**

# அம்மாவின் தேனீர்



முல்லை அமுதன்

அம்மாவைப் போலவே
முயன்று தோற்றுப்போனாலும்
ஓரளவிற்கு
வரும் விருந்தினர்கள்
நன்றி என பாராட்டுகையில்
அம்மாதான் தோன்றுவள்.

அம்மாவின் தேநீருக்கு ஈடில்லை..
அப்பா உறிஞ்சி, ரசித்துக் குடிப்பார்.

அப்பா எப்போதும்
அந்த தேநீருக்காகவே
அம்மாவிடம் சரணடைந்திருந்தார்
என்றே சொல்லவேண்டும்.

நேற்று வந்திருந்த விருந்தினரில்
ஒருத்தி
மனைவியிடம்
தேநீரைப் புகழந்ததில் மனைவிக்கு
கொஞ்சம் வருத்தம்தான்.

'நீயும் போடேன்' என்றாள்
தேநீர் தயாரிப்பது
என் வேலையுமாயிற்று..
மகள் மட்டும் தேநீரை வெறுத்தாள்..
அப்பா கோப்பையைச் சரியாகக்
கழுவுவதில்லையே என்பது வருத்தம்..

எப்போது போலத்தான்..
இன்றும் தயாரான தேநீரில்
வந்த விருந்தினர் சிறிய தலைமுடியைக்
கையிலெடுத்தார்..
தேநீர் என்னுடன் வெளிநடப்புச்
செய்கிறது..

# கிரிக்கட்டினூடே விடுதலை தேடும் தேசம் ஆப்கானிஸ்தான்

**அபூ ஸைத் Bபாரிக்**

ஒரு தேசத்தின் மீதான முழு பிம்பத்தையும் மாற்றியமைக்கும் திறன் விளையாட்டிற்கு இருக்கின்றது என்பதனை நிரூபித்துள்ளது ஆப்கான் கிரிக்கட் அணி. சோவியத் ரஷ்யாவின் படையெடுப்பு முதல் அமெரிக்கா ஆக்கிரமிப்பு வரையான வல்லரசுகளின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு பலிக்கடாவாக்கப்பட்ட நாடுகளில் ஆப்கானும் ஒன்று.

அல்காயிதா, தாலிபான்கள், பாகிஸ்தான், இந்தியாவின் உழவுப் பிரிவுகள் என்று பல முனை இராஜதந்திர காய்நகர்த்தல்கள் காபூலினை வெடிச்சத்தங்களுக்கும், பிணவாடைகளுக்கும், பிரபல்யப்படுத்திவிட்டது. ஆனாலும், இன்று ஆப்கான் தாலிபான்களுக்கு பிரபல்யம் என்பதனைவிட கிரிக்கட்டினால் பிரபல்யம் அடைந்த நாடாக உருமாற்றம் கண்டுள்ளது.

2015ஆம் ஆண்டு முதன் முதலில் ஒரு நாள் போட்டிகளிற்கான அங்கீகாரம் சர்வதேச கிரிக்கட் சபையினால் வழங்கப்பட்டது. அதே ஆண்டு நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் வங்கதேசத்திடம் தோல்வி அடைந்த ஆப்கானிஸ்தான் அணிக்கும் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளின் பின்னர் இன்று இருக்கும் ஆப்கான் அணிக்கும் வித்தியாசங்களாக நிறையவே காணப்படுகின்றன.

உண்மையில் ஆரம்பத்தில் ஆப்கானிற்கும் கிரிக்கட்டிற்கும் எந்த சம்மந்தமும் இருக்கவில்லை. அங்கு கிரிக்கட் என்பது அறிமுகமான விளையாட்டுமல்ல. ஆனால் இன்று கிரிக்கட்டை தெரிந்தவர்களுக்கு ஆப்கானை தெரியாமல் போகாது எனும் அளவு புகழடைந்துள்ளது.

பாகிஸ்தானில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்த ஆப்கானியர்களுக்கு பொழுதுபோக்கு விளையாட்டாக அறிமுகமானதுதான் கிரிக்கட். பெஷாவர் பிரதேசத்தின் முகாம்களுக் குள் விழையாடிய விழையாட்டு பின்னர் அவர்களை கழக மட்டம், உள்ளூர் போட்டிகள் என்று படிப் படியாக வளர வைத்தது. கிரிக்கட்டின் ஆரம்ப தலைமுறையினர் பாகிஸ் தானிலே



திறன்களை வளர்த்துக் கொண்டாலும் அந்த உறவினில் பாரிய விரிசல் இப்போது இரு நாடுகளுக்குள்ளும் காணப்படுவதன் காரணம் பலதாக வும் இருக்கலாம்.

சர்வதேச தரம் வாய்ந்த கிரிக்கட் மைதானமோ, பயிற்சிக்கான வசதி வாய்ப்புக்களோ இல்லாமல் கிரிக் கட்டில் ஜாம்பவான்களாக நிலைத் திருக்கும் அவுஸ்திரேலியா, நியுஸி லாந்து, பாகிஸ்தான், வங்களாதேசம் போன்ற நாடுகளை இம்முறை உலக கிண்ண 20ற்கு இருபது கிரிக்கட் போட்டிகளில் மண்கௌவச் செய்தி ருந்தவர்கள் ஆப்கானியர்கள்.

ஆப்கான் தரைத்தோற்ற அடிப்ப டையில் அதிக மலைப்பாங்கான நாடு என்பதனாலும் கோத்திர அமைப்புக் கொண்டது என்பதனாலும் அவர்கள் குழுக்களாகவே வாழ்ப வர்கள். முழு தேசத்தையும் இணைக் கும் நெடுந்தெருக்கள்கூட அங்கு இல்லை. தற்போது அமெரிக்கா தனது இராணுவத்தேவைக்காக அமைத்த நீண்ட பாதைகள்தான் பெரும்பாலான நகரங்களை இணைக்கும் மார்க்கங் களாக தொழிற்படுகின்றன.

1960 களிலும் அதற்கு பின் வந்த காலங்களில் ஐரோப்பாவில் குத்துச் சண்டை ஒடுக்கப்பட்ட கறுப்பின மக் களின் போர்க்களமாக மாற்றம் காண ஆரம்பித்தது. மிக மோசமான நாகரீ கமற்ற நடத்துகைக்கு கறுப்பினத்த வர்கள் உட்படுத்தப்பட்டு வந்திருந்த பரம ஆத்திரத்தினை அவர்கள் குத்துச்சண்டை கயிற்றுக்குள் தீர்த்துக் கொண்டனர். பொது வாழ்வின் எங்கும் வெள்ளையர்களை எதிர்த்து தாக்க முடியாத கறுப்பினத்தவர்கள், விளையாட்டு என்ற லேபலின் பின்னால் சக வெள்ளைக்கார போட்டி யாளரைத் தாக்குவதனை பெரும் மனத்திருப்தியாக கருதியிருந்தனர். அவர்கள் குத்துச்சண்டையின் ஊடே தங்களின் நிஜ வாழ்க்கையில் அனு பவித்த அடக்குமுறையை எதிர்த்து ஓரளவேனும் போராட முடிந்தி ருந்தது.

இதே போன்ற மனோ நிலை மேற் கிந்திய தீவுகள் கிரிக்கட் அணியில் ஒரு கட்டத்தில் பிரதிபலித்தது. அவுஸ்திரேலிய இங்கிலாந்து கிரிக் கட் வீரர்களை தங்களது வேகமான பந்துவீச்சுக்களால் காயப்படுத்துவத னையும் திணறடிப்பதனையும் அவர் கள் ரசித்தார்கள். காரணம் வெள்ளைக் காரர்களை தோற்கடிப்பதற்கான ஒரு களமாக கிரிக்கட் அப்போது அவர் களுக்கு இருந்தது.

அதனை ஒத்த மனோ நிலை அடக்கு முறையிலிருந்து வெளிவரத் துடிக்கும் உண்மையான மக்களின் சுதந்திர வேட்கை ஆப்கானிஸ்தான் கிரிக்கட்டில் பிரதிபலிக்கின்றது. தங் கள் தேசத்தை சிதறடித்தவர்களை அல்லது அதனை ஒத்த பெரிய நாடு களை கிரிக்கட்டில் தோற்கடிப்பது அவர்களுக்கும் தேசத்திற்கும் விடு தலை உணர்வை நிச்சயம் வழங்கும்.

(தொடர் பக் 11)

# பத்துத்தலை முளைத்த ரகசியம்



தனக்குள் வைத்திருக்க முடியாத
ரகசியமொன்றை
பூமியின் காதுகளுக்குள்
புதைத்தாள் அவள்.

பூமி
பூக்களாலும்
இலைகளாலும்
மூங்கிலின் வழி பாடல்களாலும்
பொங்கியெழும் நீரூற்றாலும்
ஓடும் நதிகளிலும்
பாயும் அருவியிலுமென
அது பரகசியமாக்கிக் கொண்டிருந்தது
தனக்குள் புதைந்த ரகசியத்தை.

இப்போது காற்று
தன் காதுகளில் மூங்கில் சொன்ன
அந்தப் பரகசியப் பாடலைச் சுமந்து
வேறோர் தேசம் தாண்டிச் சென்றது.

மாலைகளாகிய பூக்களும்
ஓலைகளாகிய இலைகளும்
கிளைகளில் உட்கார்ந்து பறந்த
பறவைகளும் தான்
அதை பேசிக் கொண்டன
ஏற்கனவே பத்துத் தலை முளைத்த
அந்த பரகசியமான
ரகசியத்தின்
ஒவ்வோர் தலையும்
அலங்காரமிடப்பட்டு இப்போது
ஜொலிக்க ஆரம்பித்து விட்டது

**- அஸீஸ் எம். பாயிஸ்**

**கிரிக்கட்டினூடே விடுதலை..**

பல தசாப்தங்கள் கடந்த யுத்தங்களினாலும், உள்நாட்டு கலவரங்களாலும் சோர்வடைந்திருந்த மக்களின் உள்ளார்ந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பணியினை கிரிக்கட் செய்கின்றது.

கோத்திரங்களாய் பிரிந்திருந்த மக்களை கிரிக்கட் ஒன்றிணைக்கின்றது. ஆப்கானிஸ்தான் கிரிக்கட் அணியின் கட்டுக்கோப்பு, அர்ப்பணிப்பு, நேர்த்தி, சுய ஒழுக்கம் என்பன பலரையும் கவர்ந்துள்ள அம்சங்களாகும். சர்வதேச அங்கீகாரத்தையும், புதிய நம்பிக்கையையும் கிரிக்கட்டினால் அந்த தேச மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் என்பதற்கு கிரிக்கட் அம்மக்களில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றம் சான்றாகும்.

# பெருமூச்சுகளின் வாக்குமூலம்

நீயாவது சம்மதம் சொல்லிவிடு
கருப்பாக இருந்தாலும் கவலையில்லை
குட்டையோ நெட்டையோ
கட்டிக்க தயாராக இருக்கேன்

குதிரையில் வரும் என் ராஜகுமாரனின்
குளம்படி ஓசைக்காக
காத்திருந்து அலுத்துவிட்டது

குலமகளாய் பிறப்பெடுத்தும்
தலையெழுத்தை நொந்து கொள்ளும்
விதைக்கப் படாத தரிசு நிலமாய்
விலை போகாத மருமகள் நான்

கன்னங்களால் தேய்ந்த சாளரக் கம்பிகள்
கருணை மனுபோட்டு காத்திருக்கின்றன
எனக்கே எனக்கான துணைவன்
வரமாட்டானா என்று

தாபங்கள் இரைதேடும்
தகிக்கும் போராட்டங்கள் – என்
தாவணிக்கனவுகளை
தலையணைகள் சாட்சி சொல்லும்

புண்ணான மனசு பூரா
புன்னகையை அழுத்திப் பூசி
பெண் பார்க்கும் பரீட்சைக்காக
தயாராகும் வேதனை அப்பப்பா

தலையாட்டும் பொம்மைகளுக்கு முன்னால்
கைகூப்பி நின்றதை நினைக்கையில்
கம்பளிப் பூச்சி ஊருது உடம்பெல்லாம்
கையாலாகாத்தனத்தை எண்ணி
கண்ணும் கலங்குது
பாலைச் சுடுமணலாய்

பதம் பார்க்கும் இரவுகள்
காலை வருடும் கனவுகள்
காலை வாரும் நனவுகள்

இன்னுமா ஆகலை
ஊசிமுனைக் கேள்விகள்
கூச வைக்கும் பார்வைகள்
எவ்வளவு நாளைக்குத்தான் சகிப்பேன்
கனவில் வந்த இளவரசன் கூட
தன் மகளுக்கு வரன் தேடுகிறான்
காதலை யாசிக்கும் எங்களுக்கெல்லாம்
வரன் என்பதும் கிட்டா வரம் தானோ

தீண்டக் காத்திருந்த இளமை
மீண்டும் வருமோ நானறியேன்
தாண்டக் கூடாத வயதை
தாண்டிக் கொண்டிருக்கிறேன் இப்போது

அக்கினிச் சுவாலைக்குள்
அடைக்கப்படும் யௌவனம்
வெட்க வேலியைத் தாண்டி
வெளியேற முடியாத பரிதாபம்

இவளுக்கென்றே வாய்த்தது
அவலாக அரைபடும் அவலம்
பகட்டுக்கு விலைபோகும் உலகில்
பகடைக் காய்களா நாங்கள்

நீயாவது சம்மதம் சொல்லிவிடு
கருப்பாக இருந்தாலும் கவலை இல்லை
குட்டையோ நெட்டையோ
கட்டிக்க தயாராக இருக்கேன்.

**கம்மல்துறை இக்பால்**

''யார் பார்த்த வேலையிது?''

கோபத்துடன் அதட்டலாய் வந்த மனைவியின் வார்த்தைகளைக் கேட்டு சற்று துடுக்குற்றேன்.

அதே வார்த்தைகள் அதே அதட்டல் முன்பொரு முறை கேட்டது அவன் நினைவுகளில் நிழலாடியது.

இருபது வருடங்களுக்கு முன் தனது வீட்டில் அம்மாவின் கொந்தளிப்பு சகல நாளங்களும் அடங்கி

''இல்லைங்க அடுத்த மாசம் ஸ்கூல் லீவுல நானா குடும்பம் எல்லாம் வாரேன்டிருக்காங்க. மேசை விரிப்பும் நல்லாவே பிஞ்சி தொங்குது அதெல்லாம் கொஞ்சம் சரி பண்ணனும். நான் காசு சேர்த்து தாரேன் நீங்க எடுத்து வந்து மட்டும் தாங்க'' என்ற உம்மாவிடம்,

''சரி சரி'' என்று ஒருவித சலிப்புடன் பதில் அளித்தார் வாப்பா.



**ஷிபானா பரீதா - பதுளை**

# மேசை விரிப்பு

கட்டிலின் மூலையில் நானும், எனது சகோதரிகளிருவரும் நடுங்கிக் கொண்டிருந்த அந்தத் தருணம்.

''என்னங்க இன்னைக்கி டவுன் போயிருந்தப்போ அந்த பேன்ஸி கடையில் அழகான மேசை விரிப்பொன்று பார்த்தேன். வாங்கலாம்னு பார்த்தா காசு போதாம போயிட்டு. நீங்க போனா அத வாங்கிட்டு வாங்க.''

''சரி சரி அதுக்கு இப்ப என்ன அவசரம் அதைவிட எவ்வளவு தேவைகள் இருக்கு''

அடுத்து வந்த நாட்களில் தோட்டத்தில் விழும் தேங்காய்களை சேகரித்து அதை உரித்து விற்று, கம்பில் பிளேட் சொருகி முருங்கை மரத்தில் படர்ந்திருந்த வெற்றிலை கொடியில் கழுத்து வலிக்க வெற்றிலை பறித்து அதை விற்ற காசு எல்லாம் சேர்த்து ஒருவாறு மேசை விரிப்பிற்கான பணத்தை சேகரித்து விட்டார் உம்மா.

''இன்டைக்கு நீங்க டவுன் போவீங்களா?'' ''இன்டைக்கு முடியாது போககொல சொல்றேன்''.

அதிக வாகன வசதிகளற்ற அக்காலத்தில் நகரத்திற்கு செல் வதாயின் வேலை மெனக்கெட் டுதான் செல்லவேண்டும். நகரை விட்டு தள்ளி சற்று ஒதுக்குப் புறமாக இருந்தது எங்களது குக்கிராமம். அது ஒரு விவ சாய கிராமமாகும். பரந்து விரிந்த வயல்வெளிகளும், குளங்களும், பயிர் நிலங்களும், பயிர் நிலங்களை நாசம் செய்ய வரும் விலங்குகளை விரட்டுவதற்காக மரத்தின் மேல் அமைக்கப்பட்ட பரண்களும், சிற்றோடைகளும், சாதாரணமாக முற்றத்தில் நடமாடும் மயில்களும் அதி அற்புதமான கிராமத்து சூழல். நகரில் வசிக்கும் உறவினர்களுக்கும் பாடசாலை விடுமுறை நாட்களில் படையெடுப்பது எங்கள் கிராமத் தை நோக்கித்தான். எப்படியோ உம்மாவின் தினசரி நச்சரிப்பில் மேசை விரிப்பும் ஒருவாறு வீடு வந்து சேர்ந்தது. பல வர்ணங்களில் பழங்கள் பதியப்பட்டு அழகிய கரையுடன் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாக இருந்த அவ்விரிப்பு உம்மாவை கவர்ந்ததில் வியப்பேது மில்லை.

''யார் பார்த்த வேலையிது?'' உம்மாவின் அதட்டலில் நடுங் கித்தான் போயிருந்தோம் மூவரும்.

''எவ்வளோ கஷ்டப்பட்டு வாங் கினது கொஞ்சம் கூட பொறுப் பில்ல.. புள்ளைகளா பேய்களா நீங்க இன்டக்கி இரிக்கி ஒங்களுக்கு வாப்பா வரட்டும்''

உம்மாவின் கத்தல் தெருவரை ஒலித்தது. மாலையில் வாப்பா வீட் டிற்குள் நுழையும் போதே,

''பாருங்க உங்கட புள்ளைகள் செஞ்சிருக்கிற வேலைய இத வாங்க நா எவ்வளோ கஷ்டப்பட்டேன் என்டு தெரியும் தானே? '' ஏறத்தாழ உம்மா அழுதே விட்டார்.

''ஏன் என்ன பிரச்சன?''

''இங்க பாருங்க இந்த மேச விரிப்ப எப்படி பிளேடால வெட்டி வச்சிருக்காங்க என்டு''

''அல்லாஹ்... சரி விடுங்க பிறகு ஒன்டு வாங்கிப் போடுவம்''

''நீங்க சொல்லுவீங்க நாளைக்கு எல்லோரும் வருவாங்க அதுக்கி டையில எப்படி வாங்குற? பிசாசு களுக்கு நீங்க கொடுக்கிற செல்லம் தான் எல்லாம்''

உம்மாவின் கோபம் வாப்பாவின் பக்கம் திரும்பியது. வேலை விட்டு வந்த களைப்பு, உம்மாவின் காட் டுக்கத்தல் ஏற்படுத்திய எரிச்சல் அத்தனையையும் எங்களில் தீர்த்தே அமைதியடைந்தார் வாப்பா.

''மூன்று பேரும் எழும்பி வாங்கோ சாப்பிடுறதுக்கு'' மென் மை கலந்த அதிகார தொணியில் அழைத்தார் உம்மா.

''என்ன கல்ல முழுங்கின மாதிரி நிக்கிற உம்மா கூப்பிட்டது வெளங்குது தானே..வர சொன்ன எல்லாரையும்''

வாப்பாவின் அதட்டலிலும், பட்ட அடிகளின் அனுபவத்துடன்

பாய்ந்து எழுந்து ஹாலில் போய் அமர்ந்து கொண்டோம். கவளம் பிடித்த சோற்று உருண்டைகளை உம்மாவே ஊட்டி விட்டார்.

''ஏன் அப்படி செஞ்சீங்க அதை வாங்க உம்மா பட்டப்பாடு தெரியும் தானே'' உம்மா கனிவாகவே கேட்டார்.

''இல்லம்மா நாளைக்கு மச்சான், மைனி எல்லாம் வாராங்க தானே அவங்களுக்கு பரிசு கொடுக்க மேசைல வச்சுத்தான் வெட்டி செஞ்சோம், மேசை விரிப்பு வெட்டுபட்டத நாங்க கவனிக்கல''

அழுத களைப்பின் ஏக்கத்துடனே கூறினோம்

''சரி விடுங்க பரிதா இன்றைக்கு அத செலோடேப் போட்டு ஒட்டி விடுவோம். பிறகு புதுசா ஒன்டு நான் வாங்கி தரேன்'' வாப்பா எங்களின் தலையை தடவியபடியே கூறினார்.

நாங்கள் மூவரும் கிடைத்த பணத்தை எல்லாம் சிறுக சிறுக சேமித்து ஒரு புதிய மேசை விரிப்பை வாங்கி உம்மாவை ஆச்சரியப்படுத்தியது வேறு கதை.

அதன் பிறகு மேசைவிரிப்பு வருடக்கணக்காக புதிதாகவே இருந்தது. அத்தனை பக்குவமாய் பாவித்தோம். ஆனால், அன்று நடுங்கிய நடுக்கமும், இரத்தம் உறையும் அளவிற்கு ஏற்பட்ட பயமும் என்று நினைத்தாலும் நடுக்கத்தை ஏற்படுத்த தவறுவதில்லை.

''யாரித ஒடச்சது? '' மனைவியின் கத்தல்

''கத்தாதிங்க நஸ்ரா ரிலாக்ஸ் ரிலாக்ஸ். சாலுமா இங்க வாங்க இதை யாரு உடைச்சது? தெரியாம உடைஞ்சா? இல்ல சண்டை பிடிச்சு உடைச்சீங்களா?''

''யெஸ் டாடி என்ட கையால தான் ஒடஞ்சிச்சு. நான் தண்ணி குடிச்சிட்டு வைக்கப் போனேன் கை தவறிட்டு.. ஐயம். சாரி மாம்''

''ஓகே கூல் தெரியாம உடைஞ்சிட்டு தப்பில்ல பட் அத கிளீன் பண்ணாம விட்டது தான் தப்பு ''

செல்லமாக மகளைக் கடிந்து கொண்டேன் ''இந்தா இப்ப பண்றன் டாட்''

என்றவாறு வேலையில் இறங்கினாள் மகள் சாலு. மனைவியை ஆறுதல் படுத்தும் விதமாக கைகளைப் பற்றி அறைக்கு அழைத்துச் சென்றேன்.

''பேபி மா, இந்த அழிஞ்சு போற சாமான்களுக்காக கோவப்படாதீங்க ஒடஞ்சி போனா புதுசா வாங்கலாம் ஆனா புள்ளங்கட மனசு ஒடஞ்சா அத எப்படி ஒட்டிவிட்டாலும் வெடிப்பின் அடையாளங்கள் மறையாது சோ பிகெயாபுல் புரிஞ்சிருக்ன்ம்னு நெனக்கிறேன்''

தெளிவடைந்தவளாக

''ம்'' என்று புன்னகைத்துக் கொண்டு தலையாட்டிய மனைவியின் நெற்றியில் அன்பாய் முத்தமிட்டேன்.

# முடித்து வைக்கத்தெரியுமா?



ஏதேதோ எண்ணம்
எழும் போதெல்லாம்
குதறப்பார்க்கும்
மனவேதனையெல்லாம்
கடந்து வரத்தானே வேண்டும்

இந்த வையகமொன்றும்
நிலைத்து விடப்போவதில்லை
தானே
அப்போதேன்
ஓய்வில்லாதொரு ஓட்டம்
அந்தருவிகளும் ஓடைகளுமே
ஏதொரு இடத்தில் நின்றல்லவா
திரும்பும்

இங்கு யாரையும் நம்ப
முடிவதில்லை
தொலைவில் உள்ள உறவுகளுக்கு
எம் முழு இயல்புமே
வெளிப்படுத்திடுவதில்லை

எத்தனைதர கால
நேசமென்றாலுமே
மகிழ்வை மட்டுமே பகிர முடிகிறது..

அருகிருக்கும் உறவுகளிடம்
வெளிப்படையாகும் இயல்பில்
நடிப்புகளாய் ஒன்று கூட
இருப்பதில்லையே

எங்கொருப்புள்ளியில்
ஆரம்பித்து தொடரும் பாசம்
ஏதொரு நிலையில் முற்றுப்
பெற்று விட்டாலுமே
இந்த நினைவுகளுக்கு
தடைபோடுவது எவ்வாறென்று
சொல்லிட முடியுமோ

அது காற்றுவெளி போல
இடைவெளியின்றியே தொடரும்

எல்லாமே இலகாகிப் போன
நவீன செல்லடக்கால் தான்
இந்த உறவுகளுக்கெல்லாம்
சற்றென்றே நேசமும் மலர்ந்து
துண்டிப்பும் நிகழ்ந்து விடுகிறது..

**- சஹ்னாஸ் பேகம்**
**முதலைப்பாளி, புத்தளம்.**

# பெரியப்பா (சிறுகதை)

ஸ்கூலைத் தாண்டி முச்சந்தியால் திரும்பி முந்நூறு மீற்றர் அளவில் நடந்து மையவாடியின் அருகே வந்ததும் நெஞ்சு திக்கென்றது. லமீர் பெரியப்பாவின் கபுறு ரோட்டுக்குக் தென்பட்டது. உம்மா - வாப்பா, பாட்டன் - பாட்டி என குடும்பத்தவர்கள் அடக்கப்பட்டிருப்பதும் இந்த மையவாடியில் தான். ஊரை விட்டும் வேறு இடங்களுக்குச் செல்வதாக இருந்தால் இதைத் தாண்டித்தான் செல்ல வேண்டியிருக்கிறது.

இரண்டு மாதமளவில் பேச்சு மூச்சற்றுக் கிடந்த பெரியப்பா மௌத்தாகி நேற்று இரவுதான் அடக்கம் செய்யப்பட்டார்.

''நானெண்டா போறில்ல. நீங்களுக வேணுமெண்டா பெய்த்து கொங்கோ'' என பிடிவாதமாக மறுத்து விட்டார் நானா. பெரியப்பாவால் பட்ட வலியை நன்றாக அறிந்தவரல்லவா அவர்.

வாப்பா உயிரோடு இருந்திருந்தால் இதே முடிவைத்தான் எடுத்திருப்பார் என்பதனால் றிஸானா மட்டும் மையத்துக்குப் போய் வந்தாள். றிஸானாவை கணவன் விட்டுப் போய் இரண்டு வருடங்கள். சோற்றுப் பார்சல் விற்றுக் கிடைக்கும் வருமானத்தினால்தான் அவளினதும் பிள்ளைகள் இருவரினதும் காலம் கழிகின்றது.

அஸ்லம் லோயர் காணி விடய




கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்
அடுளுகம, பண்டாரகம.

மாகக் கதைக்க வரச் சொல்லியிருந்தார். அங்கே சென்றுவிட்டு, சோற்றுப் பார்சலுக்குத் தேவையான மரக்கறி இத்தியாதிகளையும் வாங்கிக்கொண்டு வீடு திரும்பும் போது தான் கபுறு கண்களில் பட்டது.

இளந்தாரி காலத்தில் பதுளை கச்சேரியில் வாப்பா வேலை செய்த அந்த நாளில் ஹாலிஎலயில் இரண்டு ஏக்கர்காணியொன்று வாங்கப்பட்டது. அரச உத்தியோகத்தராக இருப்பதனால் சட்டப் பிரச்சினைகள் எழுமோ என்ற அச்சத்தில் தனது பெயரில் எழுதாமல் சகோதரரான லமீர் பெரியப்பாவின் பெயரில் எழுதியும் விட்டார். உம்மும்மா உம்மாவுக்குக் கொடுத்திருந்த பரம்பரை நகைகளையும் விற்றே அதனை வாங்கியதாக அடிக்கடி உம்மா பெருமைப்பட்டுக் கொண்டதுமுண்டு.

வாப்பா பென்ஷன் போனதன் பின்னர் காணியைத் திருப்பித் தரத் கேட்டும் பெரியப்பா மறுத்து விட்டார்.

‘‘எனக்கு தெரீயும் தேவையான நேரத்தில எழுதி தாரதுக்கு. ஒண்ட பேருக்கு எழுதினா வித்து தொலச்சியுண்டு....’’ இப்படியாகத்தான் அவர் தொடர்ச்சியாகச் சொல்லி வந்தார்.

வாப்பா இரண்டு வருடங்கள் இருதய நோயினால் கஸ்டப்பட்டுக் கிடந்தார். படுத்த படுக்கையாக ஆறு மாதங்கள் இருந்தார். அப்போது கூட காணிப் பேச்சையெடுத்தால் மழுப்பி விடுவார். இந்த ஏக்கத்திலேயே வாப்பாவும் மௌத்தாகி விட்டார்.

இதே காலப் பகுதியில்தான் றிஸானாவை கணவன் விட்டுப் போனதும். ஹாலிஎல காணி கிடைத்தால் ஏதாவது செய்து கொள்ளலாமென்ற நோக்கத்தில், ஊர்ப் பள்ளிவாசல், ஊர்ப் பெரியவர்கள் என நியாயம் தேடி அலைந்தும் பெரியப்பா அசைந்து கொடுக்கவில்லை. நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் பார்க்கச் சென்றிருந்த போது கெஞ்சிக் கெஞ்சிச் சொல்லிப் பார்த்தும் பலனில்லை.

காணி தொடர்பாக விசாரிக்கப் போன நானாவுக்கு பெரியப்பாவின் பிள்ளைகள் அடித்தே விட்டார்கள். ஆறு மாதங்களுக்கு முன்னர் இது நடந்தது. தாத்தாமாருக்கோ மச்சான்மாருக்கோ காணி விடயத்தில் எந்த ஈடுபாடுமில்லை. அவர்களுக்கு காணிப் பங்கு வேண்டும்தான் ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டார்கள். டவுனுக்கு அருகில்தான் காணி. இன்றைய பெறுமதியில் இரண்டு கோடிக்கும் கிடைக்காது. துண்டு துண்டாக பிரித்தால் அதை விடவும் கூடிய விலைக்கு விற்கலாம்.

சட்டரீதியாக காணியைத் திருப்பிப் பெற முடியுமா என்பதைப் பற்றிக் கதைத்துவிட்டு வரும் வழிதான் இது. சனமும் அவ்வள

வாக இல்லை. மையவாடியருகே தரித்து நின்றவள் தனக்குத் தெரிந்த துஆவொன்றை ஓதிவிட்டு வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள். நடந்தவற்றை நினைக்கையில் அந்தக் குளிரிலும் அவளது மேனி கொதித்தது.

றிஸானாவின் வாப்பா ராஸிக்கின் பெற்றோருக்கு நிறைய இடங்களில் காணிகள். ஆனாலும், பிள்ளைகளுக்கு ஒழுங்காகப் பிரித்துக் கொடுக்காமலே மரணித்தும் விட்டனர். ராஸிக்குக்கு சகோதர சகோதரிகள் மூவர். குடும்பத்தில் மூத்தவர் லமீர். தாத்தாமார் இரண்டு பேரும் இருபத்தைந்து வருடங்களாக சுவீடனில் குடியிருப்பவர்கள். அவர்களைப் பொறுத்தவரை இங்குள்ள சொத்துக்கள் ஒரு பொருட்டேயல்ல. இலங்கைக்குத் திரும்பி வரும் எண்ணம் கூட இல்லாதவர்கள்.

றிஸானாவின் வாப்பா உயிரோடிருக்கையில் மூத்த மகளுக்குச் சீதனமாக தனது 'மககெதர' பங்கை எழுதிக் கொடுக்க முற்பட்ட போதே சிக்கல் புரிந்தது. முழுக் காணியும் வீடும் லமீரின் பெயரில் இருந்ததே அதற்குக் காரணம். உம்மா அதனை அவருக்கு எழுதிக் கொடுத்துள்ள விஷயம் காணிக் கந்தோர் மூலம் தெரிய வந்தது.

''ஒங்கட உம்மவாப்பா ரெண்டு பேரயும் பாணந்தொறேல லயனல்ட நொதாரிஸ் கந்தோர்ல கண்ட...'' என நண்பரொருவர் சொன்னதன் பிற்பாடே நடந்திருப்பது புரிந்தது. சுகவீனமுற்றிருக்கும் உம்மாவை ஏமாற்றி அழைத்துச் சென்று எல்லோருக்கும் சேர வேண்டிய காணியை தன் பெயருக்கு நானா எழுதிக் கொண்டுள்ளதை அறிந்து ராஸிக் மனமுடைந்து போய்விட்டார்.

ஹாலிஎல காணியையாவது திருப்பித் தந்தால் எத்தனையோ விஷயங்களை சாதித்துக் கொள்ளலாமென்ற அவரது எதிர்பார்ப்பிலும் மண்தான் விழுந்தது. தனது பெற்றோர் நடந்து கொண்டது போலன்றி மௌத்துக்கு முன்னர் பிள்ளைகளுக்கு சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டுமென்ற ராஸிக்கின் கனவு கடைசி வரை நிறைவேறவில்லை.

ஓடருக்காக பகலில் சமைத்த உணவில் எஞ்சியதைக் கொண்டு இரவுச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு, பிள்ளைகளுக்கு நாளை ஸ்கூலுக்கான ஏற்பாடுகளையும் செய்துவிட்டு கட்டிலில் சாய முற்பட்டபோது ரஸீத்மாமா வந்து கதவைத் தட்டினார். றிஸானாவுக்குள்ள ஒரேயொரு தாய்வழி உறவினர் தாய் மாமன் அவர்.

''றிஸானா மகளோ, காணிய பத்தி விசாரிக்க போன எடுத்தில எனுங்கூட கேமுக்கு வந்திட்ட...'' இது முதல் தடவையல்ல. இதற்கு முன்பும் பெரியப்பாவிடம் மாமா தூது சென்ற சந்தர்ப்பங்களில் அடி

தடிக்கு வந்ததுமுண்டு. இன்று அவரது பிள்ளைகள் இருவர் அடி தடிக்கு வந்திருக்கிறார்கள்.

வாப்பாவின் மரணத்துக்குப் பின்னர், எல்லாச் சொத்துக்களையும் எடுத்துக் கொண்டு குடிசையொன்றை அமைத்துக் கொள்வதற்காகவேனும் ஆக ஆறு பேர்ச்சஸ்ஸையாவது தரும்படி கெஞ்சிக் கேட்டும் பெரியப்பாவுக்கு ஈவிரக்கம் வரவில்லை.

இப்போது அவளிருப்பது கூலி வீட்டில். முற்பணம் இல்லாமல் மாதக் கூலிக்கு ஊரில் வீடு கிடைத்ததே பெரிய விஷயம்தான். வாப்பாவின் மரணத்துக்குப் பின்னர்' மகசெதர'யில் இருக்க விடவில்லை. தொல்லை தாங்க முடியாமல் அங்கிருந்து வெளியேற வேண்டி வந்தது. அதற்குப் பிறகு அவர்கள் வைத்ததே சட்டம் என்றாகிவிட்டது. மரங்களில் ஆயும் தேங்காய் அனைத்தையுமே பிடுங்கிக் கொள்வார்கள்.

பெரியம்மா கூட றிஸானாவை வீதிகளில் கண்டால் முறைத்துப் பார்ப்பதும் வழக்கமாகி விட்டது. அவரது தங்கச்சியும் ஒருமுறை கடைத்தெருவில் வைத்து வலியச் சண்டைக்கு வந்திருக்கிறாள்.

ஹாலிஎல காணியை வாங்கும் போது அதனை மாமா பெயரில் எழுதும்படி உம்மா எவ்வளவோ வற்புறுத்தியும் வாப்பா மறுத்து விட்டாராம்.

''ஏண்ட கூடப் பொறப்புக எனக்கு அநியாயமோ செய்யப் போற?'' உம்மாவை மடக்குவதற்காக வாப்பா அன்று சொன்னதை நினைக்க எரிச்சல் எரிச்சலாக வந்தது.

மதரஸாவில் ஹிப்ளு செய்யும் மகனுக்கு மாதாமாதம் பணமனுப்ப வேண்டும். இந்த ஒரு வருடத்திலேயே பதினைந்து ஜுஸ்உ பாடமாக்கி விட்டான். குடும்பக் கஷ்டத்துக்காகப் பிள்ளையை இடை நிறுத்திவிட முடியாது. ஹிப்ளுக்கு பிறகு ஆறு வருடங்கள் கிதாபு ஓதவும் வேண்டும்.

பெண்பிள்ளைகள் இருவரும் பார்த்திருக்க மளமளவென வளர்ந்து விடுவார்கள். அதற்குப் பின்னர்தான் ஆயிரம் செலவுகள். அதுவரை படிப்பு, ஓதல், டியுஷன் என எத்தனையோ.

நானாவிடம் வசதியில்லை. தாத்தாமார் இருவரும் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. மாமாவும் தொழிலில்லாத நோயாளி.

''போஸ்ட் ஒபீஸ் ஊட்டு கூலியேம் தனியா புழுங்கிய. என்ன அநியாயமன்? அனந்திர சொத்த தின்னிய...'' எண்ணப் பறவை கடந்த காலம், இறந்த காலம் இரண்டையும் நினைத்து எங்கெங்கோ பறந்தது. வந்த அசதியில் தூங்கியும் விட்டாள்.

'மகசெதர'யில் பிள்ளைகளுடன்

அவள் குடியிருக்கிறாள். ஹாலிஎல காணியைப் பெரியப்பா எழுதித் தந்துவிட்டார். அதை விற்றுக் கிடைத்த பங்குக்காசு நாற்பத்தைந்து இலட்சம் ரூபாவில் மகள்மார் இருவருக்கும் நகை செய்யப்பட்டது. மகனுடன் உம்றா செல்வதற்காக எயாபோட்டுக்குச் செல்ல வேன் வந்திருக்கிறது. வழியனுப்புவதற்காக வந்த பெரியப்பா முஸாபஹா செய்துவிட்டு, வாப்பும்மா வழியில் வந்த பேருவள காணிப் பங்கையும் எழுதித் தருவதாகக் கூறிவிட்டு தானும் வேனில் ஏறிக் கொள்கின்றார்''

அந்தப் பத்து நிமிடக் குட்டித் தூக்கத்தில் இப்படியொரு கனவா!? கனவுகள் நனவாகுவதற்கு பெரியப்பா மீண்டும் வர மாட்டாரே என்பதை நினைக்க சிரிப்பு வந்தது.

''யாஅல்லாஹ். அடுத்தவங்கட காணிகள எடுத்துகொளிய ஆள்கட கபுறுகள நெசுக்கியெண்டு நீ செல்லியிருச்சிய. பெரியப்பட கபுற வெளிச்சமாக்கி வெச்சிடு றப்பே. பாவங்களயெல்லம் மன்னிச்சிடு றப்பே...'' நிறைந்த கண்ணீருடன் பெரியப்பா பெயரில் யாஸீன் ஓதுவதற்காக றிஸானா வுளூ செய்யப் போனாள்.

# அவசியம்...

மக்கொனையூராள்



காலம் சுழலக்
காயங்கள் நிகழ
துரோகச் சுழியில்
துன்புற்றுத் துஞ்ச
வலியே வாழ்க்கையாய்ப்
பொருதும் யுத்தத்தில்
பூவோடு முள்ளுக்குமே
என் முத்தங்கள்!

நன்றி மறந்து
தூக்கியெறிந்து
நியாயம் சிதைத்து அநீதி
இழைக்கும்
சுயநல மாந்தர்
வாழ்ந்திடும் தேசத்தில்
சுற்றி இருப்ப தெல்லாமே
வேசங்கள்

புன்னகை பறித்து
முட்களைப் பதித்து
முயற்சி தடுத்துத் தடைகள்
விதிக்கும்
மனிதர் உள்ளத்தில்
உள்ளதோ வஞ்சம்
தினமும் பொறாமையே
அவரிடம் தஞ்சம்

வீழ்ச்சியில் மீண்டு
முயற்சியில் நீண்டு
சோதனை தாண்டிச்
சாதனை புரிந்திட
செய்வாய் உனக்கு நீயே
வசியம்
மெய்யாய் இனி அதுவே
அவசியம்!

''ரீச்சர் உங்கள அதிபர் அலுவலகத் துக்க வரட்டாம்'' காரியாலய சிற்றூளியன் செய்தியோடு நின்றான். ''இப்போ எனக்குப் பாடமே... பாடத்த முடிச்சிற்று வாறனே...''

''ஒங்களத் திருத்தவே ஏலாது. DEOவும் காத்திருக்கார்''

விசயம் புரிந்து போகவே பிள்ளை களுக்கு சைகை காட்டிவிட்டு பின்னால் நடந்தாள். அலுவலகத்தில் அதிபர் பிரதியதிபர் DEO (கோட்டக்கல்விப் பணிப்பாளர்) பிள்ளையின் பெற்றோர் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செய லாளர் ஆகியோர் இருந்தனர். அதிபர் காட்டிய கதிரையில் அமைதியாக உட் கார்ந்தாள்.

''இவங்க யாரெண்டு தெரியுமா ரீச்சர்?'' DEO கேட்டார். ''ஓம் சேர் ஜௌ ஸான்ட பேரண்ட்ஸ்''

''ஒங்க மேல இவங்க மனித உரிமை மீறல் வழக்கு பதிவு செய்யப் போயி ருக்காங்க. அவங்க பதிவு செய்யாம என்ன விசாரிக்க அனுப்பிரிக்காங்க''

''மனித உரிமை என்டா என்ன சேர்? பொய் சொல்றது. களவெடுக்கிறது, சக மாணவர்கள துன்புறுத்துறது...இதெல் லாமே மனித உரிமைகள்தானா சேர்?'' அனைவரும் சிரித்தனர்.

''எம்புள்ளமேல திருட்டுப் பழியப் போடுறா இந்த ரீச்சர். நீங்கள்லாம் சிரிக் கீங்க. என்ன நியாயம் இது?'' சீறினார் பையனின் தந்தை.

''வெய்ற்... சேர்தான் விசாரிச்சிட்டி ருக்காரே... கொஞ்சம் பொறுமையா இருங்க...'' என்றார் அதிபர்.

''என்ன மண்ணாங்கட்டிப் பொறுமை. விசாரிக்கிற லச்சணம்தான் தெரியுதே. உறுக்கினா மூத்திரம் பறக்கணும். இது தெறாவுற மாதிரிக் கேட்டா எப்பிடி சொல்லுவா?''

# பழி சுமக்கும் தேவதைகள்



## (சிறுகதை)

**சம்மாந்துறை மஷூறா**

**மருதமுனை.**

''ஐஸே... கெட் அவுட்... உங்கட அநா கரிகமான பேச்சில தெரியுது உங்கட பிள்ள எப்பிடி இருக்குமெண்டு...போங்க போய் வழக்குப் போட்டுக்குங்க...பிரின்ஸிபல் சேர் பையன சிறுவர் சீர்திருத்தப் பாடசா லைக்கு அனுப்புற வழியப் பாருங்க'' என கோபத்தில் இரைந்தார் DEO.

''இந்த மனிசனுக்கு ஒரு எழவும் தெரியா. எங்க எப்பிடி கதைக்கிறண்டும் தெரியா. புள்ளயப் பழுதாக்கிற நீங்கான். வாய மூடிட்டு பேசாம இருங்க....'' என கணவன் மீது எகிறினாள் பிள்ளையின் தாய்.

''எக்ஸ்யூஸ்மீ....'' என்றபடி பொலி சார் இருவர் உள்ளே வந்து உட்கார்ந்தனர்.

தரம் ஒன்பது மாணவன் ஜௌஸான் திருடினதா அவர்ட கிளாஸ் ரீச்சர் மரியம் டீன் வீண்பழி சுமத்தி அவமானப்படுத் தினதா என்ரி போடப்பட்டிரிக்கி... ஆஹ் இந்தா இருக்காரே என்ரி போட்ட தகப் பனாரு'' என்று பொலிஸ் உத்தியோகத்தர் கூற, ''ஓம் Sir... அததான் இப்ப எங்கட DEO சேரும் விசாரிச்சிட்டிருக்கார். இவங் கதான் மிஸிஸ் மரியம் டீன் ரீச்சர். எங்கட பாடசாலையில மிகத் திறமையாப் படிப் பிக்கிற கண்டிப்பான ஒரு ரீச்சர் இவங்க.''

''ஓ...ஐசே... DEO சேர்... நான் இவங் கள விசாரிக்கிறது உங்களுக்கு டிஸ்றப் இல்லயே...?

''தாராளமா விசாரிங்க... உங்க விசா ரண எனக்கும் உதவியாதானிருக்கும்...'' என்றார் DEO பொலிஸ்காரர் மரியம் ரீச்சர் பக்கம் திரும்பினார். ''என்ன ரீசசர்... எந்தப் பதட்டமுமில்லாம தெளிவா இருக்கீங்க போல.. உங்கள விசாரிக் கலாமா?''

''தாராளமா சேர்! குற்றவாளிகள்தான் குழம்பணும். நான் ஒரு ரீச்சர். பிள் ளைகள்ட முரண் நடத்தைகள சீராக் கிறதும் என்ட கடமதான். அந்த டியூட்டிய நாங்க சரிவர செய்யலன்னா பொலிஸ் நிலையத்தில் குற்றவாளிக் கூண்டுகள் போதாமப் போயிருக்கும்''

''நீங்க சொல்றது சரிதான் ரீச்சர். இவங்க பையன் உங்க ஹேன்ட் பேக்ல மூவாயிரத்தது ஐநூறு ரூபா காசு திருடினதெண்டு நீங்க பொய்க் குற்றச்ச ாட்டு சுமத்தியிருக்கிறதா நியாயம் கேட்டு என்ரி போட்டிருக்காங்க. இதுக்கு உங்க விளக்கம் என்ன?''

''இன்ரவெல் டைம் சேர். கிளாஸ்ல பிள்ளைகளும் இல்ல. நானும் இல்ல. இன்ரவெல் முடியிற டைம்லதான் கிளா சுக்கு திரும்பினன். பத்தாம் ஆண்டுப் பொம்புளப் புள்ளயள் ரெண்டும் என் னோட வந்திச்சுகள். திருத்தி வச்ச கொப் பிகள கொண்டு போறதுக்காக.

வழமைக்கு மாறா கதவு சாத்தியிருந் திச்சி. கூட வந்த பிள்ளைகள்தான் என்ன முந்திட்டுப் போய் கதவ திறந்து கொப்பிகள எடுத்துட்டு போனாங்க. உள்ள ஜெளசான் நிண்டாரு. மேசையில தூசு தட்டுற மாதிரி நடிச்சிட்டு நிண்டாரு.''

''கதவ சாத்திட்டு என்ன பண்றாய் எண்டு கேட்டுட்டு விட்டுட்டன். என்ட ஹேன்ட் பேக் திறந்தும் கிடந்திச்சி. ஒரு வேள நான்தான் சிப் மூட மறந்திட்டனோ என்டு நினைச்சிட்டன். பிள்ளைகளுடைய பேக்ல கை வச்சிரிக்கலாம் எண்டுதான் சந்தேகப்பட்டன். ஆனா அவர ஒண்டும் கேட்கல. சரியில்லதானேனு விட்டுட் டன்''

''வீட்ட போய்தான் பார்த்தன். சைட் பக்கெட்ல இருந்த மூவாயிரத்தது ஐநூறு இல்ல. இவர்தான் எடுத்திருப்பார்னு தெரியும். அடுத்த நாள் ஸ்கூல் வந்தும் அவர நான் ஒண்டும் கேட்கல. அன்றைக்கு அவர் எனக்கு வலிந்து உதவினாரு. நேரத்தோட ஸ்கூல் வந்து கிளாஸ்ரூம் கிளீன் பண்ணினாரு. வைற்போர்ட் கிளீன் பண்ணினாரு. எனக்கு குடிக்க தண்ணி எடுத்து வச்சாரு.

எனக்கு உறுதியாயிற்று. இன்ரவெல் டைம்லகூட வெளியிறங்காம என்னோ டயே நிண்டாரு. அப்பவும் நான் ஒன்றுமே கேட்கல...''

''ஆனா எப்பிடி ரீச்சர் அவர் எடுத்ததக் காணாம...?''

''அப்பிடிக் கேளுங்க சேர், அவங்க காசு துலைஞ்சதுக்கு எம்புள்ள மேலயா பழியப் போடுவாங்க..?'' ''பல தடவ அவர் எடுத்து புடிபட்டிரிக்காரு சேர்''

''ரீச்சர் பொய் சொல்றா சேர்..எம் புள்ள இன்னொருத்தர்டய தொடவே மாட்டான். நான் எம்புள்ளய அப்பிடி வளர்க்கவுமில்ல'' என்று எகிறினார் தந்தை.

''ரீச்சர் மூவாயிரத்தது ஐநூறு இவர் தான் எடுத்த எண்டு வேறெதும் ஆதாரமி ருக்கா?''

''ஓம் சேர்! அடுத்த நாள் பாடசா லை வந்ததும் இன்ரவெல்லுக்கு பிறகு அந்த ரெண்டு பெண் பிள்ளைகளும் வந்து கேட்டிச்சிகள். உங்கட ஹேன்ட் பேக்லயிருந்து நேற்று காசு காணாம போச்சுதாண்டு. என்ட பேக்க ஜெளஸான்

திறந்தத அவங்க கண்டிருக்காங்க. யாருக்கும் இத தெரியப்படுத்த வாணாம்னு சொல்லிட்டன். பிறகு கன்ரீன் நடத்துற நாநாவ விசாரிச்சன். ஆயிரம் ரூபா குடுத்து மாத்தி கன்ரீன்ல ரொட்டி வாங்கி தின்னவராம். இவங்க ரெண்டு பேருக்கும் தனித் தனியா கோல் எடுத்து கேட்டன். கன்ரீனுக்கு குடுத்து விட்ட காச துலைச் சிட்டாராம் எங்கிட்ட காசு கேட்கிறாரு எவ்வளவு குடுத்துவிட்டீங்கனு கேட்டன். ரெண்டு பேருமே ஐம்பது ரூபா குடுத்ததான் சொன்னாங்க''

''இல்ல சேர். ரீச்சர் எங்களுக்கிட்ட கேட்கவேயில்ல என இருவரும் ஏகோபித்த குரலில் கூறினர்''

''சேர் பேரண்ட்ஸ்தான் பிள்ளைய பிழையா வழி நடத்துறாங்க. இதக் கேளுங்க சேர் அவங்களோட நான் பேசினது போன்ல ரெகோட் ஆகியிருக்கு'' டீச்சர் போன் ரெகோட் ஐ கொடுத்ததும் பேரென்சின் முகங்கள் கறுக்கத் துவங்கியது. போன் ரெகார்ட்டை கேட்டு விட்டு பொலிசார் பெற்றோரை முறைத்தனர்.

''உங்கட பிள்ளைக்கு நல் வழியக் காட்ட உங்களால முடியாட்டாலும் பரவால நல்வழி காட்ற ரீச்சர்ஸ் மேல இப்பிடித்தான் பழி சுமத்துவீங்களா?'' என இரைந்தார் DEO. இருவரும் தலை குனிந்தனர்.

''இந்தாங்க சேர் கிளாஸ்ரூம் லொக் புக். இவங்கட மகன் பதின்மூன்று தடவைகள் திருடி பிடிபட்டு பெற்றாரக் கூப்பிட்டு அதிபர் முன்னிலையில அட்வைஸ் பண்ணியனுப்பி இருக்கன். அதிபரும் பெற்றாரும் ஒப்பமிட்டிருக்காங்க. ரெட் மார்க் வச்சிருக்கிறத வாசியுங்க சேர் இவங்கட பிள்ளட திருட்டு வேலைகள நான் கண்டுக்காம விடணும் எண்டு இவங்க எதிர் பார்க்காங்க அதனாலதான் என்னப் பழிவாங்க ட்றை பண்றாங்க''

''இப்ப நாம என்ன முடிவு செய்யலாம்... சொல்லுங்க...'' என அதிபரை வினவினார் பொலிஸ்காரர்.

''நான் இவ்வளவு நேரமும் குறுக்கிடாம அமைதியா கேட்டுட்டிருந்தன். ரீச்சர் சரியா விளக்கம் தருவா எண்டு எனக்கு தெரியும். நேர்மையா கடுமையா வேல செய்யிற ஒரு ரீச்சர இந்தப் பாடசாலை இழக்க ஏலாது. எனவே நான் ஒரு கெம்ப்ளைன் தாறன். பிள்ளைய தவறா வழி நடத்தினது மட்டுமில்லாம ஒரு சிறந்த ஆசிரியைய மன உளைச்சலுக்கும் ஆளாக்கினதுக்காக இவங்க நஷ்ட ஈடு தரணும்...''

''சேர்.. சேர்.. அல்லாஹ்வுக்காக மன்னிச்சிருங்க சேர், புள்ளப் பாசத்தில இப்பிடிப் பண்ணிடம் சேர் புள்ள அவமானப்பட்டு வாறது...'' ''மடத்தனமா கதைக்கப்படா நீங்க. வகுப்பில கூட ஒரு பிள்ளைக்கிம் வெளங்காமதான் ரீச்சர் நடவடிக்கை எடுத்தா. எனக்கும்கூட தெரியா. நீங்கதான் நாறடிச்சதே. எத்தன தடவ உங்கள வாண் பண்ணிஇருக்கம். நீங்க கண்டுக்கவேயில்ல'' கையில் புத்தகப் பையுடன் சிற்றூளியர் பதட்டமாக வந்தார்.

''சேர் ஜெளசான்ட புத்தகப் பைய கொண்டு வரச் சொன்னீங்க...'' பறிச்சிக்கிட்டு வாற கணக்கு சேர் மறிச்சி மறிச்சி என்ன எடுத்துட்டு வரயே உடல்ல. கடைசில எனக்கு கல்லால எறிஞ்சிட்டு ஸ்கூலுக்கு வெளிய ஓடிட்டான். இங்க பாருங்க ரெத்தம் வருது. இந்தாங்க புத்தகப் பை. உள்ள ஏதோ வில்லங்கமிரிக்கி. அதான் இந்தப்பாடு படுத்திரிக்கான். நான் பைக்ல போய் ஆளப் புடிச்சி ஏத்திட்டு வாறன்''

பிள்ளையின் தந்தையும் எழுந்தார். தடுக்கப்பட்டார். உங்க கையாலயே உங்க மகன்ட புத்தகப் பைய கீழ கொட்டி செக் பண்ணுங்க என்றார் DEO. புத்தகப் பையினுள்ளிருந்து போதை மாத்திரை சிரித்தது. பட்ட பின்னால் வரும் ஞானம் யாருக்கும் உதவாது.

# ஆத்ம திருப்தி

**கவிதைகள் எழுதுவதால்
காசி பணம் சேர்வதில்லை
புவிமேலே வாழ்வோர்கள்
பலன்பெறவே
எழுதுகின்றோம்**

**பெரும் பெரும்
புலவர்களெல்லாம்
பொருளாதாரம்
தேடவில்லை
கருப்பொருளைத் தேடித்தேடி
கவிதையாக வடித்தார்கள்**

**வலிகளை வரிகளாக்கி
வாழ்க்கைக்கு உரியதாக்கி
இலக்கிய மருந்தாக்கி
இலகுவாகத் தருகின்றோம்**

**தெரிந்ததைச் சொல்வதற்கு
தேர்ந்தெடுத்த பாதையிது
புரிந்து வாழ்வில்
சேர்ப்பதற்கே
பாடம் புகட்டும் மேதையிது**

**சிந்தனையைச் சீர்தூக்கி
செதுக்கி யெடுத்தவைகள்
சந்ததிக்கும் உதவுமென்றே
சரித்திரத்தில் சேர்க்கின்றோம்**

**புத்தகங்கள் வெளியிட்டு
பணக்காரனாவதில்லை
தத்துவத்துவத்தைச் சொல்லிவைத்து
திருப்தியதில்
காணுகின்றோம்**

**பேரும் புகழும்
பூஷணமும்
பொன்னாடையும்
பசி தீர்க்கப் போவதில்லை
பணக்காரன் ஆவதில்லை**

**அழுத்தம் திருத்தமாக
அத்தனையும்
சொல்லுவதால்
எழுத்தாளர்கள் எல்லோரும்
ஏழைகள்தான் எந்நாளும்**

**ஊக்கங்கள் உதிக்கின்ற
உண்மையை மதிக்கின்ற
ஆக்கங்களைத் தந்துவிட்டு
ஆத்ம
திருப்தியடைகின்றோம்**

---

**கவிஞர் ஜனதா லத்தீப்**

---

# வான்தொடு வரமே

**நுஸ்மியா அப்துல்கரீம்,
போருதொட்ட.**



எண்ணம் உயர
மகனேவாழு
கண்கள் குளிர
மறையைச்சாரு

இம்மை மறுமை
மேல்வழிபோக
இன்னல் வரினும் நேர்வழி
வாழ்க

உண்மை யின்றி
அநாதையாகும்
தன்மை நீங்கு
அதுமேலாகும்

உம்மி என்றாய்
உரிமையுடனே
பண்ணிய தவமிறை
கருணையுடனே

எளியவள் மடியில் திறந்தாய்
கண்ணை
வலியவன் அருளால்
வசதியும் உண்மை
அன்னை ஹாஜரை அவரது
மகனை
இன்றும் பேசுது அழகிய
பொறுமை

எத்துயராயினும் மறைந்தே
செல்லும்
நித்தியமானவன் நினைவே
செல்வம்



# இலங்கையின் கடல் மலை ரகசியமும் சீனாவின் ஆய்வுக் கப்பலும்

அஸீஸ் எம். பாயிஸ்

அண்மையில் சீனாவுக்கு சொந்தமான ஆய்வு கப்பலான சிஎன்எங் ஹோங் -03 (Xian Yang Hong 03 – Research/Survey Vessel) இலங்கையின் கடற்பரப்பிற்குரிய அபனேசி நிகிடின் (Afanasy Nikitin) என்ற கடல் மலையை அண்மித்து பயணித்தமை சர்வதேச கப்பல் போக்குவரத்து தரவுகள் மூலம் உறுதியாகி உள்ளது.

இலங்கையின் மண் கண்ட அடுக்கிற்குரியதென கருதப்படுகின்ற பல பில்லியன் டொலர் பெறுமதியான கொபோல்ட் (Cobalt) அடங்கிய இந்த கடல் மலையை ஆய்வு செய்வதற்காக இந்தியா சர்வதேச கடல் அடிவார அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தது, சர்வதேச கப்பல் போக்குவரத்து தரவுகளுக்கு அமைய சீனாவுக்கு சொந்தமான சிஎன்என் ஹோங் 3 (Xian Yang Hong 03 – Research/Survey Vessel) கப்பல் வங்காள விரிகுடா கடற்பரப்பில் அண்மையில் உலாவந்துள்ளது. இந்தியாவை அண்மித்த கடற்பரப்பில் இருந்தவாறு இந்த கப்பல் இந்தியாவை உளவு பார்ப்பதாக சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் இந்த கப்பல் வங்காள விரிகுடாவரை பயணித்த விதத்தை பார்க்கும்போது இந்த கப்பல் அபனேசி நிகிடின் Afanasy Nikitin கடல் மலை திசையில் இருந்து பயணித்தமை உறுதியாகின்றது. கப்பல் போக்கு

வரத்து தகவல்களை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது 14 நாட்களுக்கான வரையறுக்கப்பட்ட தரவுகளுக்கு அமைய 14 நாட்களுக்கு முன்னதாக சீனக் கப்பல் அபனேசி நிகிடின் (Afanasy Nikitin) கடல் மலையிலிருந்து சுமார் 600 கிலோ மீட்டர் தொலைவில் இருந்துள்ளது.

சர்வதேச நியமங்களுக்கு அமைய ஒரு நாட்டின் கடலுக்கு அடியில் உள்ள நிலப்பரப்பின் எல்லையாக மண்கண்ட அடுக்கு கருதப்படுகின்றது இதற்கமைய அபனேசி நிகிடின் (Afanasy Nikitin) கடல் மலை இலங்கைக்கு உரித்தானதாக உள்ளது. இந்தியாவில் இருந்து 1350 கிலோ மீட்டர் தொலைவில் அபனேசி நிகிடின் (Afanasy Nikitin) கடல் மலை அமைந்துள்ளதுடன் இலங்கையில் இருந்து அந்த மலை 1050 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்தியா 15 வருடங்கள் இந்த மலையை ஆய்வு செய்வதற்கு அனுமதி கோரியிருந்ததுடன் அதற்காக ஐந்து லட்சம் டொலர் கட்டணத்தையும் செலுத்தியுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை ஆராய்ந்த சர்வதேச கடல் அடிவார அதிகார சபை இந்த மலை வேறொரு நாட்டின் மண் கண்ட அடுக்கில் அமைந்துள்ளதால் இந்தியாவின் வேண்டுகோளுக்கு அனுமதி வழங்க மறுத்ததாக தெரியவந்ததுள்ளது.

மிகவும் பெறுமதியான கொபோல்ட (Cobalt) படிமம் உள்ளிட்ட கனிமங்கள் நிறைந்த அபனேசி நிகிடின் (Afanasy Nikitin) கடல் மலை உள்ளிட்ட மண் கண்ட அடுக்கின் உரிமை தொடர்பாக 2009ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் தேதி இலங்கை ஐக்கிய நாடுகள் சபையிடம் தகவல்களை சமர்ப்பித்திருக்கிறது. மேலும் 2010 மே மாதம் பத்தாம் தேதி இந்தியா அது தொடர்பான தமது தரப்பு விடயங்களை சமர்ப்பித்தது. இந்த பின்புலத்திலேயே சீனாவின் ஆய்வுக் கப்பல் இந்த பிராந்தியத்தில் பயணித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன

அபனேசி நிகிடின் (Afanasy Nikitin) கடல் மலையானது 3000 சதுர கிலோமீட்டர், 1158 சதுர மயில் பரப்பில் அமைந்துள்ள 150 பாறைகளைக் கொண்ட கடல் மலையாகும். இதில் கொபோல்ட் (Cobalt), நிக்கல், மங்கனீஸ், செப்பு உள்ளிட்ட கனிமங்கள் நிறைந்து காணப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொபோல்ட் (Cobalt) கனிமம் ஸ்மாட் போன், லெப்டொப், மற்றும் இலத்திரனியல் வாகனங்களின் ரீசார்ஜபிள் பெற்றிகளுக்காக (Rechargeable Battery) பயன்படுத்தப்படுகின்ற ஒரு முக்கிய கனிமப் பொருளாகும்.

தகவல் : இணையத்திலிருந்து பெறப்பட்டது.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்:
**முபர்ரிஜ் நயீம் (நளீமி)**



# கதவுகளின் பின்னால்

எமது நான்கு வயது மகனின் சுகயீனம் காரணமாக அருகில் உள்ள சிறுவர் வைத்தியசாலைக்கு சென்று வருபவர்களாக உள்ளோம். இப்போதெல்லாம் நாங்கள் வைத்தியசாலையின் நிரந்தர வாடிக்கையாளர்களாகவே ஆகிவிட்டோம். இரண்டு வாரங்களுக்கு முன்னர் சத்திரசிகிச்சை ஒன்றுக்காக மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அங்கு தங்க வேண்டி ஏற்பட்டது.

இப்போதெல்லாம் ஒவ்வொரு முறையும் நான் வைத்தியசாலையை தரிசிக்கும் போதும் எனக்கு எவ்வளவு மன அழுத்தம் ஏற்பட வேண்டுமோ அதே அளவு ‘‘நன்றி உணர்வும்’’ என்னுள் ஏற்படுகின்றது. இந்த விசித்திரமான மனநிலைக்கு காரணம் அவ் வைத்தியசாலை அறைகளின் ‘கதவுகள்’ தான்...

நான் வைத்தியசாலையின் தாழ்வாரங்கள் ஊடாக நடந்து செல்கையில் அதன் ஒவ்வொரு அறையினதும் கதவுகளை கடந்து சென்றிடுவேன். சில போது சத்திர சிகிச்சை நிபுணர்கள், குழந்தைகளது முகங்களை மீள் உருவாக்கும் பகுதிகளின் ஊடாகவும்; சில போது நெருப்பில் எரிந்த குழந்தைகளுக்கு சிகிச்சை செய்யும் பகுதியின் ஊடாகவும்; சில போது பெரியவர்களைக் கூட அச்சமூட்டும் கேன்சர் போன்ற பெரும் நோயால் அவதியுறும் குழந்தைகளின் அறைகளினூடாகவும் என ஒவ்வொரு நாளும் விதவிதமான கதவுகளைக் கடந்து செல்கிறேன். அதுவரை எல்லோரையும் போல நானும் கதவுகளை சாதாரணமாகத்தான் கடந்து சென்று கொண்டிருந்தேன்.

ஒரு தடவை வார்ட் ஒன்றை கடந்து செல்கையில், மரணத் தருவாயில் இருந்த ஒரு குழந்தையின் அறையைக் கடக்க நேரிட்டது. அக்குழந்தை ஏராளமான குழாய்கள் பொருத்தப்பட்ட நிலையில் பிரமாண்டமான மருத்துவ இயந்திரங்களுக்கு மத்தியில் மயங்கிய நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது. அக்குழந்தையின் பெற்றோரைப் பார்த்தேன். அவர்கள் அக்கு

ழந்தையின் நிலையை நினைத்து கலங்கியவர்களாக ஆழ்ந்த சிந்தனையில் எங்கோ வெட்டவெளியொன்றை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். தொடர்ந்து நடந்தேன்.

நான்காம் தளத்தில், Catacombs கடந்து சென்றேன். அங்கு அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தைகளோடு அவர்களது பெற்றோர்களும் இருந்தனர். அவர்கள் அங்கு கழிக்கும் ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு பகலும் வாரங்களைப் போலும் மாதங்களைப் போலும் நீளமாய் இருந்தன. அவர்கள் தங்களது குழந்தையின் அடுத்த கணம் பற்றிய நம்பிக்கையை இழந்தும் கூட ஏதோ ஒரு நம்பிக்கையை இறுக்கமாக பற்றியிருந்தனர். நான் தொடர்ந்தும் நடந்தேன்.

சுமாராக இரவு ஒரு மணி இருக்கும். வரவேற்ப்பறைக்குள் நுழைந்தேன். அங்கு ஒரு குடும்பம் காத்திருந்தது, அவர்களது குழந்தையை பரிசோதித்த வைத்தியர் சிகிச்சை அறையை விட்டு வெளியே வந்தார். அவர் அக்குழந்தையின் நிலவரத்தை விளங்கப்படுத்தினார். ‘‘ஒரு வேட்டைத் துப்பாக்கி வெடித்து உள்ளது, குழந்தையின் முகம் நன்றாக சேதமடைந்துள்ளது. இன்னும் ஏராளமான சத்திர சிகிச்சைகள் செய்ய வேண்டியுள்ளன. வாழ்நாள் முழுவதும் சேதமடைந்து விடும். வாழ்நாள் முழுவதும்... ஏன்?’’ அவர்களது பேச்சின் ஒரு சில பகுதிகள் என் காதில் விழுந்தன. இனிவரும் காலங்களில் அக்குடும்பம் இன்னும் எத்தனை வைத்திய சாலை கதவுகளை தட்ட வேண்டும் என்பதை எண்ணிய வண்ணம் ஓர் ஓரமாய் அமர்ந்தேன்.

பின்னர், அமைதியாக எழுந்து நடந்து ஆரம்ப சிகிச்சைப் பிரிவின் கதவை அடைந்தேன். அக்கதவின் பின்னால்தான் எனது மகன் மெது மெதுவாக குணமடைந்து கொண்டிருக்கின்றான். ஆச்சரியம் என்னவென்றால் எனதும் என் மகனினதும் நிலை கண்டு நான் மன அழுத்தத்தில் மூழ்காது நன்றியுணர்வின் மீது மிதக்க ஆரம்பித்து விட்டேன்.

என் பிள்ளை அனுமதிக்கப்பட்ட அறையின் கதவுகளை விட மிக மோசமான பல நூற்றுக்கணக்கான கதவுகள் இங்கு இருக்கின்றன. ஆயினும் அக்கதவுகள் ஏதும் நான் திறக்க வேண்டிய கதவு அல்ல. அவற்றுள் அனுமதிக்கப்பட எவ்வளவு நேரம் ஆகும் என்று சிந்தித்த என்னில் நன்றியுணர்வு மேலிட்டு விட்டது.

உங்கள் முன் தாளிடப்பட்ட கதவுகளை திறப்பதற்கான பலத்தை தருமாறு இறைவனிடம் பிரார்த்திக்கும் போதெல்லாம், அவன் உங்களை காப்பாற்றியவற்றிக்காக நன்றி கூற மறந்து விட வேண்டாம்.

# ரோசம்கெட்ட விவசாயி

(குறுங்கதை)

ஹாரிஸ் முஹம்மட், ஓட்டமாவடி

கல்குடா எனும் ஒரு விவசாய சமூகத்தின் குடும்ப தலைவன் 50 வயது நிறைந்த கந்தசாமி. அவனை ஏசி கொண்டே காதல் செய்யும் கண்ணம்மா அவனது மனைவி. ஆசைக்கும் ஆஸ்த்திக்கும் என எல் லாமுமாக ஒரே மகள் என சராசரி விவசாயியின் வாழ்வாதார சூழலை தளமாக கொண்ட ஒரு எதார்த்த நகர்வு.

மாரிப் போகம் விவசாயம் செய்ய ஆசைப்படும் கால போகத்தில் தோற்ற கந்த சாமி மனைவியை நோக்கி தலையை சொறிந்தவனாக கந்தசாமி ''விதப்பு சீசன் வருது டீ''

''அந்த வெதப்பு தொழிலும் தே வல ஒண்டும் தேவல, அண்டண் டக்கி கூலிக்கு வயித்த கழுவ ஒழச்சா போதும் சும்மா கெடங்க''

''இல்லடீ இந்த முற மட்டும் ஒரு தரம் செஞ்சி பார்ப்பமே டீ''

''ஒவ்வொரு வருசமும் இப்புடி சூது விளயாடுறாப்ல போய் கடனப் பட்டு வெள்ளாமைக்கு செலவழிச் சுப்போட்டு மொத்தத்தையும் அரிசி ஆலை காரனுக்கும், மழ தண் ணிக்கும் குடுத்துப் போட்டு வந்து தலைய கவுட்டு போட்டுட்டு இருப் பாய்''.

''இல்லடீ இந்த வருசம் மம்மிசு மாயில் காக்கா வயல ஒழவு அடிச்சி தாரண்டு செல்லிருக்காரு, பசளை யும் அரசாங்கம் தரும், எண்ணெ கலன மட்டும் வாங்க காசி வேணும் டீ, வெதநெல்லும் அரவாசி காசிக்கு வாங்கலாம்''.



‘‘சொல்லி எப்ப நீ கேட்டு இருக் காய் கெட்டுப்போறவனுக்கு புத்தி வாய்கிறலயாம் செத்துப் போறவ னுக்கு மருந்து வாய்க்கிறலயாம் செரி செரி மகள்ட காதுல மட்டும் ஒரு குண்டு மணி அளவு கெடக்கு அத அடகு வச்சி என்னத்தெண்டா லும் பண்ணு’’

மகளின் காதில் கிடந்த சிறிய தோட்டை வங்கியில் வைத்து பண மாக்கிக் கொண்டு வேலையை ஆரம்பித்தான் கந்தசாமி.

வயலில் கால் பதித்து விவசா யிக்கே உரிய கர்வத்துடன் உழவு முடிந்த கையுடன் புழுதி விதைப்பு விதைத்து மழையை காத்துக் கிடந் தான்.

நாட்கள் நகர விதை பூமியை உடைத்து வெளியில் வர அதனை ஒரு பிரசவ தாய் போல ஆசையுடன் பார்த்து ரசித்தான் கந்தசாமி.

காலங்கள் நகர பயிர் பருவம் குடலை ஆகி குடலை காயாக மாறி பச்சை மஞ்சளாகும் போது அறு வடை காலத்தில் இரவில் பன் றிக்கும் யானைக்கும் பகலில் குரு விக்கும் என நாட்களை ஒதுக்கி னான்.

காதல் வயப்பட்ட இளைஞனை போல அறுவடை காலத்தில் விவ சாயி கனவு காண்பது இயற்கையே.

மாரிபோகம் என்பதால் அவ்வப் போது தேவைக்கு பெய்து வந்த பருவ மழை அறுவடை நேரமெனப் பார்த்து ஆரம்பித்து ஒரு நாள், இரண்டு நாள், மூன்றாவது நாள் என தொடர உப்பட்டியை கூட கரை சேர்க்க முடியாமல் கதறி அழுது கண்ணீர் வடித்தான் கந்த சாமி தொழில் இம்முறையும் நஷ் டமே மிஞ்ச வீடு திரும்பினான். அடகு வைத்த நகை அறுதி ஆனது.

காலங்கள் கடக்க மீண்டும் ரோசம் கெட்டவனாய் கால போகம் ஆரம்பிக்க மீண்டும் முதலில் இருந்து கண்ணம்மாவிடம் தலை யை சொறிந்து கொண்டு நின்றான் கந்தசாமி.

## நானும் அவர்களும்

ஒவ்வொரு வெளிவாசிகளும்
வெவ்வேறு நிறத்தைச் சார்ந்தவர்கள்
வாழ்வின் மீது
அர்த்தம் தவிர்த்தவர்களாகின்றனர்
தண்டித்து விடுவதன்
மிகப் பெரும்
சாதனையை நிகழ்த்தி
ஒரு கண்ணால் அழுது
மறு கண்ணால்
அமைதியடையும் அறிவு
விடு விடு என்று
ஓய்வுக்கு அழும்
இருதயத் துண்டுக்கு
இடிச் சப்தங்களை
கொண்டு வரும் கனவுகள்
நான் அவர்களை
வெறுக்கவில்லை
அவர்கள் என்
விருப்பத்திற்குரியவர்களும் அல்ல...

**அக்கரைக்குயில் ஹிம்சானா**

# தப்புக் கணக்கு

கிண்ணியா
ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்

(குறுங்கதை)



பாஸ்கரன் அறிவிலும், செல்வத்திலும் சிறந்து விளங்கியதால், அவ்வூர் மக்கள் எல்லா விசேசங்களிலும் பாஸ்கரனை அழைத்துக் கொள்வார்கள். அவரும் எதுவித மறுப்புமின்றி மக்களைச் சந்தோசப்படுத்தி, அன்றைய பொழுதைக் கல கலப்பாகக் கழித்துச் செல்வார். இது ஒரு சிலருக்கு மிகவும் வெறுப்பாகவே இருந்தது. அவரை வாய்க்கு வந்தபடி வசைபாடுவார்கள்.

அலுவலகங்களிலும், பொதுச் சொத்துக்களிலும் சுரண்டிச் சொகுசாக வாழ்வதாகக் கூறுவார்கள். இத்தனையும் கண்டும் காணாதவராய், கேட்டும் கேட்காதவராய்ச் செல்வார்.

ஒரு நாள் துஷாந்தன், பாஸ்கரனுடன் நேருக்கு நேர் மோதினான். கண்டபடி திட்டினான். பாஸ்கரன் எதுவுமே பேசாது புன்முறுவலுடன் சென்றார்.

இது துஷாந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு ஏசியும், அம்மனிதன் சாதுவாகச் செல்கிறாரே..! எல்லோராலும் இவ்வாறு இருக்க முடியாது. பரம்பரைப் பணக்காரன். அறிவில் உயர்ந்தவன். எளிமையானவன். யாரையும் பகைத்தது கிடையாது. நான் தான் சேர்வாரோடு சேர்ந்து கெட்டு விட்டேனோ..? மனசுக்குள் கேள்விகள் தோன்றி மறைந்தன. வீட்டுக்குச் சென்றவன் கடுமையாக யோசித் தான்.

அப்போது, சுகவீனமுற்ற நிலையிலிருக்கும் அவனுடைய தந்தை, துஷாந்தனை அழைத்தார். ''இஞ்சவா மகன்..! நான் சொல்றதைக் கேள்..! நமது குடும்பத்தில் நீயே மூத்தவன். உனக்குப் பின்னால் ஐந்து பிள்ளைகள். அவர்களையும் காலா காலத்தில் கட்டிக் கொடுக்க வேணும். அவர்கள் வாழ்வதற்குத் தேவையான வீடு வாசல்களைக் கொடுக்கனும். எங்கே போறது..?''

''நமக்குப் பக்கத்தில் காணித் துண்டொன்று விற்பதாகச் சுதாகரன் சொன்னான். அவற்றை வாங்கினால் பேருதவியாக இருக்கும். பணத்துக்கு எங்கே

செல்வது..? பிள்ளைகளும் வளர்ந்திட்டாங்க. உனக்கும் உழைக்கிற வயசில்ல. இத நெனச்சு.. நெனச்சுச் சரியாக் கவலைப்பட்டேன்''.

''அப்போ தான் பாஸ்கரனிடம் சென்று ஒரு மாதத்திற்குள் திருப்பித் தருகின்றேன் 5000/- ரூபாய் தாங்க எனக் கேட்டேன். உடனே தந்து உதவி செய்தார். அப்பணத்திலேயே இக் காணித் துண்டை வாங்கி மூன்று பிள்ளைகளுக்கும் கொடுத்தேன். நாட்கள் வாரங்களாக வாரங்கள், மாதங்களாக மாதங்கள், வருடங்களாகச் சென்றனவே தவிர, நான் அவரிடம் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கல்ல. கொடுப்பதற்கும் என்னிடம் பணம் இல்லை.

அவருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றல்ல. பாஸ்கரன் பணத்தைத் திருப்பிக் கேட்கவுமில்ல. எனக்கு இது பெரியதொரு பாரமாகவே இருக்கிறது. மகனே..! நீ இதை எப்படியாவது அந்தக்கடனை பாஸ்கரனுக்கு தீர்த்து விடு அல்லது காணியை அவர் பெயரில் எழுதிக் கொடுத்துவிடு என்றவாறு இறந்து விட்டார்.

துஷாந்தனுக்கோ அவரிடம் சென்று எவ்வாறு கதைப்பது..? என்ன முகத்தோடு அவரைப் பார்ப்பது..? விடை தெரியாது திண்டாடினான். தந்தைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியாக வேண்டும். வருவது வரட்டும் என்றவாறு பாஸ்கரனைத் தேடி, அவன் வீட்டுக்குச் சென்றான்.

முதலில் மன்னிப்புக் கேட்டான். ''அன்று உங்களின் மேன்மை தெரியாமல் வாய்க்கு வந்தபடி திட்டினேன் என்னை மன்னிச்சிடுங்க சேர்''. அப்பா உங்களிடம் பல வருடங்களுக்கு முன்னர் 5000/- ரூபாய் ஐக் கடனாக வாங்கி அதைக் கொடுக்க முடியாமல் போன தற்கான வருந்தினார். அந்தக் கடனை என்னை தீர்க்கச் சொன்னார் அல்லது காணித் துண்டை உங்க பெயரில் எழுதுமாறு இறப்பதற்கு முன் என்னி டம் கேட்டுக் கொண்டார்.

''நான் பல வருடங்களுக்கு முன்னர் கொடுத்துதவிய பணம். உங்க அப்பாவுக்காகவே கொடுத்தேன். தேவையில்லை. காணியை உங்க சகோதரிகளுக்கு எழுதிக் கொடுங்கள்'' என்றார்.

துஷாந்தன் எவ்வளவு எடுத்துக் கூறியும், பாஸ்கரன் மறுத்து விட்டார். ஒரு நல்ல மனிதனைச் சமூகம் எவ்வாறு குற்றம் சாட்டுகிறது..? சொத்து சுகங்களைக் கண்டு கழித்தவனுக்கு ஊரார் சொத்தில் ஆசை கிடையாது. அவரால் அள்ளிக் கொடுக்க முடியுமே தவிர, கிள்ளி எடுக்க விரும்ப மாட்டார். நானும் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டேன். இறைவா..! என்னை மன்னித்து விடு..! என்று உள்ளம் உருகினான்.

அன்றிலிருந்து பாஸ்கரனை யாராவது தவறாகப் பேசினால் விட்டுக் கொடுக்கவே மாட்டான்.

புறம் பேசும் கூட்டத்தாரிடமிருந்து விலகியே இருந்தான். பாஸ்கரனைத் தப்புக் கணக்குப் போட்டவர்கள், தம் தவறை நினைத்து மனம் வருந்தினர். தீவிரமாக விசாரிக்காது அடுத்தவரைக் குறை கூறக் கூடாதென வாழ்வில் கற்றுக் கொண்டனர்.

## அபூ ஹாமித்

சாஜித் அலி, வளர்ந்து வரும் தளக் கோல மற்றும் முன்னட்டை வடிவ மைப்பாளர்.

மீள்பார்வை ஊடக மையத்தில் பக்க வடிவமைப்பாளராக பணியாற் றிய சாஜித் அலி சம்மாந்துறை யைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தளக் கோலம் மற்றும் அட்டை வடிவ மைப்பு போன்றவற்றில் தனித்து வமாய் தன்னை அடையாளப்படுத்தி வருகிறார். இவரின் அண்மைய முன் அட்டைகளின் வடிவமைப்பு வாசகர் களின் கவனத்தை ஈர்த்தவை."Don't judge a book by it's cover"


ஆங்கில மொழியிலே சொல்லப் படுகின்ற மிக முக்கியமான பிரபல மான பழமொழி ஒன்றுதான் இது. ஒரு புத்தகத்தை அந்த புத்தகத்தின் முன் னட்டையை வைத்து மதிப்பிட முடி யாது. மதிப்பிட முனையவும் கூடாது என்பதுதான் இதன் அர்த்தம்.

அதே நேரம் 'ஒரு பானை சோற் றுக்கு ஒரு சோறு பதம்' என்பதற்கு ஏற்ப ஒரு புத்தகத்தின் உள்ளடக்கத் தை முன்னட்டை பளிச்சென சொல் லிவிடும். புத்தகம் வாசகர்களது கை களுக்கு சென்று விடுவதற்குள் முன் னட்டை சமூக ஊடகங்கள் வழியாக வாசகர்களை சென்றடைவதுண்டு. முன்ட்டையின் தரத்தை வைத்து நூல் பற்றிய ஒரு பார்வையை உரு வாக்கி விடலாம்.


எனினும், நவீன உலகிலே ஒரு புத்தகத்தின் பெறுமதியை பெறுமா னத்தை அந்தப் புத்தகத்தின் முன் அட்டை துல்லியமாக சொல்லிவிடும்.

ஒரு புத்தகத்தின் முன்னட்டையை விட அதன் உள்ளடக்கம், கனதி, சொல்ல வருகின்ற விடயதானங்கள், சொல்லுகின்ற மொழி போன்றன மிக முக்கியம்.

அதிலும் குறிப்பாக ஒரு மொழி பெயர்ப்புப் புத்தகமாக இருக்கும் பட்சத்தில் பல போது மூல நூலை விட மொழிபெயர்ப்பானது அதனு டைய மொழிபெயர்ப்பு பிரதியின் தரம் காரணமாக முதன்மை இடத்தை பெற்றுக் கொள்ளும். ஆனால் இந்த









இரண்டுக்கும் அப்பாற்பட்ட வகையில் ஒன்றில் மூல நூலாசிரியர் முன்னுரிமைப்படுத்தப்படுவதோடு அல்லது மொழி பெயர்ப்பாளர் முன்னுரிமைப் படுத்தப்படுவதோடு பேசப்படாத ஒரு நபராக முன்னட்டையைத் தயாரிப்பவர் அமைந்து விடுகின்றார்.

ஒரு புத்தகத்தை புதிய மற்றும் பழைய வாசகர்கள் வழியாக மிக ஆரம்பத்தில் அதன் பக்கம் ஈர்த்து விடுவதில் முன்னட்டைக்கு கனதியான பங்களிப்பு இருக்கின்றது. உள்ளடக்கத்திற்கு மிகப் பொருத்தமான வகையில் அமைகின்ற முன்னட்டையானது நூலின் ரத்தினச் சுருக்கமாக அமைந்து விடும். அந்த வகையில் முன்னட்டை வடிவமைப்பு என்பது புத்தக உலகிலே மிக முக்கியமான உன்னத இடத்தை பெறுவதாக கருதலாம். தொழில் வாண்மை சார்ந்த ஒன்றெனவும் சொல்லிவிடலாம்.

ஒரு புத்தகத்தின் முன்னட்டையை தயாரிப்பதற்கு புத்தகங்கள் மீதான ஈடுபாடு அவசியம். வாசிப்பார்வமும் இன்றியமையாத ஒன்று என கருதலாம். புத்தகம் குறித்த ஆர்வம் குறிப்பிட்ட துறையில் தேர்ச்சி, நிபுணத்துவம் இற்றைப்படுத்தப்பட்ட தன்மை இயல்பான கலை ரசனை போன்றன முக்கிய இடம் பெறுகினாறன. அந்த வகையில் பேசப்படாத ஒரு நபராக திரைக்குப் பின்னால் இருந்து புத்தகத்துக்கான பரவலாக்கத்தையும் பிரபல்யத்தையும் பெற்றுத் தரக்கூடிய ஒரு நபராக புத்தக முன்னட்டையை நிர்மாணிப்பவர் அமைந்து விடுகின்றார்.

அந்த வகையில் மிகத் தரமான காத்திரமான உலகப் புகழ்பெற்ற நூல்களின் பின்னால் உள்ள நூலாசிரியரைக் குறிப்பிடலாம். அல்லது அவரை விட மொழிபெயர்ப்பாளரை கூறலாம்.

இவர்களை விட பேசப்பட வேண்டிய ஒரு நபராக பேசப்பட வேண்டிய ஆற்றல் மிக்கவராக முன்னட்டை வடிவமைப்பாளர் காணப்படுகிறார். ஆனால், துரதிஷ்டவசமாக புத்தக உலகில் புத்தக அறிமுக நிகழ்வுகளில் புத்தகம் குறித்த கலந்துரையாடல்களில் முன்னட்டை வடிவமைப்பாளர் குறித்து பேசப்படுவது மிகவும் குறைவு என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

fb id: facebook.com/arsajithali

தயாரிப்பு - உலகக் கவிஞர் சோலைக்கி

# முற்றமும் பொறவளவும்



## ஒடு

வளக்கமாக வளவின் பின்புறம்
கோடிப்பக்கமிருந்து
காலையில் புறாக்கள் பறக்கும்
தேனீர் கோப்பையுடன்,
அல்லது வெறும் ஆளாய்,
நான் புறாக்கள் பறக்கும் அழகை
பார்த்து ரசிப்பேன்.

ஒவ்வொரு தினத்தையும்
புறாக்களை ரசித்தே ஆரம்பமும்
செய்வேன்.
எனது வீட்டுக்கு அண்மையிலும்
பாடசாலை இருக்கிறது
நாட்களும் புறாக்களைப் போல
எனக்கு மிருதுவாக ஆகுவதைப்
போலவும்
நான் உணர்ந்திருக்கிறேன்.

புறாக்கள் இடம்பெயரவோ
அகதியாகவோ அல்ல
பறப்பது அதற்கு ஒரு திசை இருக்கிறது
ஒரு நிரந்தர இடம் இருக்கிறது
எனக்கு அது எங்கு இருக்கிறதென்று
தெரியவில்லை.

எனது நிரந்தர இடமும்
எங்கு அது இருக்கிறதென்றும்
தெரியாமல் இருப்பதுபோல்

இன்று காலையிலும்
புறாக்கள் பறந்தன
வானத்தில் வெள்ளைக் காகிதத்தை
கிள்ளி எறிந்திருப்பதைப்போல


தாங்கள் கடதாசிகள் என்பதை
புறாக்கள் உணர்ந்திருக்கின்றன.

புறாக்களின் பிள்ளைச் சிறகுகளுக்கே
நெருப்பு வைக்கிறார்கள்
மனிதர்கள்.

பெரும் துயரமொன்றும் மனதில்
ஒடு விழுந்திருக்கிறது. - சோலைக்கிளி

**முற்றமும் பொறவளவும், இல்லாத வீடுகள் அந்தக் காலத்தில் இல்லை. முற்றம், பொறவளவு, கோடி, கிணற்றடி இவைகள் அமைந்ததே அப்போதய வீடுகள். முற்றத்திலும் பொறவளவிலும் நாங்கள் விளையாடுவோம். ஒரு பெருமூச்சோடு இருந்த எனக்கு நண்பர் அஸீஸ் எம்.பாயிஸ் தனது கீறல் சஞ்சி கையில் முற்றமும் பொறவளவும் வாங்கித் தந்திருக்கிறார்.**

**இங்குள்ள முற்றத்தில் நான் மட்டும் விளையாடுவேன், பொறவளவில் பிறபகுதிக் கவிஞர்கள் விளையாடுவார்கள்.**
**- சோலைக்கிளி**



### அரசி

நான்
உன்னை அரசியாக்கினேன்

உயரமானவர்கள்,
உன்னைவிட உயரமானவர்கள் உண்டு
தூய்மையானவர்கள்,
உன்னைவிட
தூய்மையானவர்கள் உண்டு
அழகானவர்கள்,
உன்னைவிட அழகானவர்கள் உண்டு

எனினும்
நீ ஒருத்திதான் அரசி.

தெருக்களைக் கடந்து நீ போகும் போது
எவரும் உன்னை அடையாளம்
காண்பதில்லை
எவரும் உன் ஸ்படிகக் கிரீடத்தைக்
கவனிப்பதில்லை
எவரும் நீ மிதித்து முன்னேறும் செம்பொன்
கம்பளத்தைப்
பார்ப்பதில்லை.

எனினும்
நீ என்முன் தோன்றும்போது
என் உடலில் எல்லா நதிகளும்
ஒலிக்கின்றன
மணிகள் ஆகாயத்தைக் குலுக்குகின்றன
வாழ்த்துப் பாடல் பூமியை நிறைக்கிறது.

நீயும்
நானும் மட்டுமே
நீயும் நானும் மட்டுமே, என் அன்பே
அதைக் கவனிக்கிறோம்.



சிலி நாட்டுக் கவிஞர்
பப்லோ நெருதா -
தமிழில் - சுகுமாரன்.

பொறவளவு

### மரங்கள்

ஒரு மரம்
போன்ற அழகானதொரு கவிதையை
நான் ஒருபோதும்
காணப்போவதில்லையெனக்
கருதுகின்றேன்.

ஒரு மரம்
பூமியின் இனிய பானம் பாயும்
மார்பகத்தில்
தன் பசித்த வாயைப் பதித்திருக்கும்.

ஒரு மரம்
நாள் முழுதும் இறைவன் மேல்
விழிவைத்து
தன் இலைக் கரங்களை
ஏந்திப் பிரார்த்திக்கும்.

ஒரு மரம்
கோடையில் தன் கொண்டையில்
கருஞ்சிட்டுக் குருவிக்
கூடொன்றைச் சூடக்கூடும்
மாரியில் அதன் மார்பகத்தில்
வெண்பனி படிந்திருக்கும்.

ஒரு மரம்
மழையுடன் ஒட்டி உறவாடி வாழும்.

கவிதைகள்
என் போன்ற அறிவிலிகளால்
ஆக்கப்படும்
ஆனால் ஆண்டவனால் மட்டுமே
ஒரு மரத்தை ஆக்க முடியும்.



ஜொய்ஸ் கில்மர்
தமிழில் - க.நவம்.

# சுயம் தேடும் வண்ணத்துப் பூச்சிகள்



(சிறுகதை)

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்**
**கிண்ணியா**

பூமிக்கும் வானுக்கும் இடையே வெள்ளிச்சரம் தொடுத்திருந்த மழை. முற்றத்து கிரனைட் கற்களில் வெண் முத்து சிதறல்களாய் விழுந்து தெறித்துப் பரவியது.

மதில் ஓரங்களில் அழகாக அடுக்கி வைக்கப்பட்ட சாடிகளில் நட்டு வைத் திருந்த பூக்கன்றுகளையும், அந்த மழை நலம் விசாரிக்கத் தவறவில்லை.

வானளவாக உயர்ந்து நிற்கும் ''ரஸ்'' ''பாத்'' போன்ற கான்கிரீட் அப்பார்ட் மெண்ட் கட்டிடங்களும்...

ஒன்றிரண்டு தூரத்துப் பச்சை மரங் களும் குடை இன்றி கொட்டும் மழை யில் குளித்துக் கொண்டிருந்தன. இயற் கையை விட இனிமையான கரு உண் டோ கவிதைக்கு... என்று தோன்ற மன மோ, இயற்கையில் ஒன்றிப்போய் ரசித்துக்கொண்டிருந்தாள் சதா. சிறிது நேரத்தில் இயல்பு நிலைக்கு மாறி தன் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க ஆரம் பித்தாள்.

மழையில் நனைந்த வாறே எலக்ட் ரிக்கல் வயரில் ஆடிக்கொண்டிருந்து ஒடுங்கிய காகத்தை பார்த்த போது கடந்து வந்த கசப்பான நாட்கள் மனதில் விரிந்தது. இந்தக் காகம் போல் வாழ்ந்த நாட்களின் நினைவில் வந்தது முகம் சுளித்தவளாய்... இனி இது என் வாழ்வில் அழிக்கப்பட வேண்டிய பக் கம் என தீர்க்கமாக உறுதி பூண்டாள் சதா.

கொழும்பிலே பிறந்து வளர்ந்து தனி யார் ஆங்கில பாடசாலையில் சாதாரண தரம்வரை பயின்று, உயர்தரம் சயின்ஸ் பிரிவில் முஸ்லிம் லேடீஸ் காலேஜில் கற்று.. பின்னர், தனது ஆங்கில புலமை

தந்த உயர்வில் தனியார் ஆங்கில பாடசாலையொன்றில் ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்த நேரம் தான் அவள் வாழ்வில் இந்த கசப்பான சம்பவம் நடந்தேறியது.

பாடசாலையில் தனக்குத் தந்திருந்த வேலைகளை திறம்பட செய்வதுடன் தனது மென்மையான, அன்பான, குணத்தாலும், இனிமையான பேச்சினாலும், பிள்ளைகளுடன் அளவளாவி பாடங்கள் சொல்லிக் கொடுத்து, அங்கு அதிபருக்கும் சக ஆசிரியருக்கும் தனது வகுப்பு மாணவிகளுக்கும்... அருமையான டீச்சராகித்தான் போனாள் சதா.

கொஞ்சம் பின் தங்கிய நிலையில் இருக்கும் நான்காம், ஐந்தாம் தரம் மாணவிகளை மாலையில் வீட்டுக்கே வரவழைத்து ஃப்ரீயாக பாடம் சொல்லிக் கொடுப்பதில் தனி சுகம் அவளுக்கு.

''ஏன் பிள்ளை.. கொழும்பில் ஒரு மணித்தியாலத்திற்கு எவ்வளவு டியூஷன் பீஸ் என்று தெரியுந்தானே? ஏன் ஃப்ரீயா பாடம் சொல்லிக் கொடுக்கிறீங்க'' என்று தாயார் கேட்டால்...

''என்னம்மா எங்களது தந்தை பெரிய கம்பெனியில் நல்ல சம்பளத்துக்கு வேலை செய்து, என்னையும் தங்கைகளையும் படிக்க வைக்கும் போதே எவ்வளவு சிரமப்படுகிறார்கள்.

இந்த பிள்ளைகளின் தந்தைமாருக்கு அவ்வளவு வசதி போதாதும்மா.. அதிலும் பாடசாலைக்கும் பணம் கட்டி, மேலதிக வகுப்புகளுக்கும் பணம் கட்ட அவ்வளவு வசதி அவர்களிடம் போதாதும்மா...''

''பாவம் நான் ஈவினிங் சும்மாதானே இருக்கிறேன். பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கும் போது எனது அனுபவ அறிவும் விருத்தியாகும்'' என கூறி விடுவாள்.

இப்படி சந்தோசமாக இருக்கையில்தான் அந்த கசப்பான சம்பவம் நிகழ்ந்தது.

ஊருக்கு போயிருந்த சமயம் சதாவின் அழகையும், தங்கைகளின் அழகையும், குடும்ப அந்தஸ்தையும் கண்டு இந்த குடும்பத்தில் சம்பந்தம் கலந்து சதாவை மருமகளாக்கிக் கொள்ள பலர் விரும்பினர்.

சதாவின் தந்தையார் மகளின் திருமணத்திற்கு காலம் இன்னும் இருக்கிறது. அவள் இன்னொரு குடும்பத்துடன் சகஜமாக பழகி வரும் பிரச்சனைகளைப் சமாளிக்கப் பழகணும் இன்னும் பிள்ளை படிக்க வேண்டும் என்று ஆசைப் பட்டார்.

ஆனால், தாயாருக்கு பிள்ளை படிக்கவும் வேண்டும், உரிய நேரத்தில் பிள்ளைகளைக் கேட்கும் போதே திருமணம் முடித்துக் கொடுக்கா விட்டால், பின்னர் சிரமப்பட வேண்டியும் வரும் என்ற எண்ணம். ஆனால், உண்மையும் அது தானே... பின்னால், இன்னும் இரு பெண் பிள்ளைகள் இருக்கிறார்களே மூவரையும் வைத்துக் கொண்டிருப்பதை விட மூத்த மகளை நல்ல குடும்பத்தில் முடித்துக் கொடுத்தால் கொஞ்சம் சுமையும் குறையும்தானே.

அதன் பின், மருமகன் விருப்பப்பட்டால் மகள் மேலே படிக்கட்டுமே என்ற எண்ணம் தான் சதாவின் தாயாருக்கு. மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்ற ஒரு தாயாரின் மன உணர்வை வெளிப்படுத்தினார் சதாவின் தாயார்.

பெண் கேட்டவர்களுள், கொழும்பில் வேலை செய்யும் ஒரு மாப்பிள்ளைக்கு, நல்ல குடும்பம் ஒன்றில் சதாவுக்கு திருமணம் பேசி முடிக்கப்பட்டது.

இரு குடும்பங்களும் நன்றாக பழகிய நேரத்தில் மாப்பிள்ளை வீட்டவரிடம் கொஞ்சம் எதிர்பார்ப்புகள் அதிகமாகி போனதால், சதாவின் பெற்றோருக்கு மூச்சு முட்ட ஆரம்பித்தது.

சதாவும் கொழும்பில் பிறந்து வளர்ந்த பிள்ளையானாலும்... மிகவும் பண்பா கவும் மரியாதையாகவும் வளர்க்கப்பட் டவளாதலால் சில விடயங்களை அவ ளாலும் ஜீரணிக்க முடியவில்லை.

திருமணத்தை விடவும் தனது மேற் படிப்பு அவசியம் என்பதை மெதுவாக தனது பெற்றோரிடம் மிக அழகாக கூறிவிட்டாள் சதா. பெற்றோர் நன்கு படித்தவர்கள். குடுபத்திலுள்ள அனை வரும் கல்வித்துறையில் உயரிய இடங் களில் இருப்பதால் மகளின் விருப்பம் நிறைவேற்றப்பட்டது.

மாப்பிள்ளை வீட்டாரின் அவசர கெடுபிடிகள் தங்களுக்கு சிரமமாக இருப்பதாக சதாவின் பெற்றோர் அவர் களிடம் கூறிவிட்டனர். மெதுவாக திரு மண பேச்சு இடை நிறுத்தப்பட்டது.

ஹோமாகமவில் உள்ள தனியார் கெம்பஸ் ஒன்றில் இன்று மிகுந்த விருப்பத்துடன் படித்துக் கொண்டி ருக்கிறாள் சதா. மேலே படிக்க வேண்டும். தனது தந்தையாரை போன்று உயர் கம்பெனிகளில் நேர்மையாக உயர் பணி புரிய வேண்டும். தன் பெற்ற வர்களை தான் தலைமகளாய் நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும். தந்தை யின் சுமையை குறைக்க வேண்டும். நன்றாக படிக்கும் தங்கைகளை அவர் கள் விருப்பப்படி டாக்டராக்க வேண்டும்.

இன்னும் எத்தனையோ ஆவல்கள், ஆசைகள், கனவுகள் அவளுக்குள் பெரி தாய்...

நீண்ட நேரமாய் இரை தேடி அலைப் புற்ற பறவை ஒன்று இளைப்பாறுவ தைப் போன்று எண்ணச் சூழல்களின் தாக்கத்திலிருந்து விடுபட்டு, கனவுகள் கலைந்து.. நினைவுக்குள் நுழைந்தாள் சதா.

வெளியே பொழிந்திருந்த மழை யைப் பார்த்து அந்த சுகமான சாரலில் தன்னை மறந்து இருந்தாள் அவள்.

அப்போது ''என்னம்மா... இன்னும் ரெடியாகலையா''... கெம்பஸ் பஸ் வந் துடுமேம்மா'' என்ற தந்தையாரின் குரல் கேட்டு ''இதோ ரெடியாகிறேன் ப்பா.'' என மென்மையாக உரைத்துக் கொண் டே கெம்பஸ்க்கு வெளிக்கிட ஆயத்த மானாள் சதா.

கணவரின் கையில் டீக் கோப்பையை கொடுத்துவிட்டு... ''எத்தனை மணிக்கு நாங்கள் கிளம்ப வேண்டும்.'' என கேட் டார் சதாவின் தாயார்.

இன்றைக்கு மகளின் கேம்பஸில் பேரன்ட்ஸ் மீட்டிங். அதைத்தான் கேட் கிறார் தாயார்.

ஊரில் இருந்து வந்திருக்கும் தன் தங் கையையும் அழைத்துப் போய் மகளின் கெம்பஸை சுற்றிக் காட்டுவதாக கூறியி ருந்தார் சதாவின் தந்தையார்.

''சரி... நான் பிள்ளையை பஸ் ஸ்டாண்டில் விட்டுவிட்டு.. சின்ன வேலை ஒன்று இருக்கிறது.

முடித்துவிட்டு வருகிறேன். நீங்கள் இருவரும் ரெடியாகுங்கள்'' என்று கூறிக் கொண்டே தனது அழகிய சிவப்பு நிற காரை ஸ்டார்ட் செய்து... ரெடியாகி வந்த மகளையும் ஏற்றிக் கொண்டு மெதுவாக சாலையில் ஓட்டி சென்றார் சதாவின் தகப்பனார்.

‘‘மாமி... ம்மாவோடு வாங்க ...’’ என கூறிக்கொண்டே விடைபெற்றாள் சதா. மகளை ஏற்றிக்கொண்டு பயணம் சென்ற சதாவின் தகப்பனார்...

‘‘இந்தாம்மா உங்கள் கெம்பஸ் பஸ் பாஸ். ரினீவ் பண்ணிவிட்டேன்.’’ என்று பஸ் பாசை கையில் கொடுத்தார்.

‘‘என்னம்மா... லைசென்ஸ் எடுத் தாச்சு.. கார் ஓட்டவும் முறையாக கற்று விட்டீங்க.. கெம்பஸிலும் முதல் வருட படிப்பு முடியப் போகிறது. எனக்கும் வயதாகிக் கொண்டே செல்கிறது. திரு மணத்துக்கு மாப்பிள்ளை பார்க்கலா மா?..’’

என நைசாக பேச்சை ஆரம்பித்த தகப்பனாரை பார்த்து.. ‘‘ஏன் வாப்பா இப்படி கேக்குறீங்க, என்னோட கனவு கள் பற்றி உங்களுக்கு நல்லா தெரியும் தானே ? நான் இப்போதுதான் நன்றாக படிக்க ஆரம்பித்திருக்கின்றேன்.

பலதரப்பட்ட பிரதேச சக மாணவர்க ளுடன் பழகுவதால்.. சமூகப்பயம் தயக்கம், என்பவற்றில் என்பவற்றி லிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடு பட்டு போல்ட்டான ஒரு பேர்சனாக மாறிக்கொண்டு வருகிறேன்’’.

‘‘படிச்சு முடிஞ்சு நல்ல வேக் பண் ணனும். பெண் பிள்ளையானாலும் எனக்கும் சில குடும்பக் கடமைகள் இருக்கு வாப்பா.. அதன் பிறகு தான் எனது திருமணம்.

இன்னும் இரண்டு வருடங்கள் தாருங்கள்.’’ என இனிமையாக பேசிய, மகளின் வார்த்தையில் மனம் குளிர்ந்த வராக.. மகளின் தலையை அன்பாக தடவிக் கொடுத்தார் சதாவின் தகப்ப னார். ‘‘சரிம்மா உனது விருப்பமே எனது விருப்பமும். ஆனால், காலம் தாழ்த்தக்கூடாது’’ என்ற கண்டிஷனுடன் அழுத்தமான ஒரு புன்னகையை சிந்தி யவாறு சாலையைப் பார்த்து வண்டியை ஓட்டி சென்றார் சதாவின் தகப்பனார்.

தன் மகள் மனதளவில் சோர்ந்து விடக்கூடாது என்று பெரும் பிரயத்த னம் எடுத்து செயலாற்றிக் கொண்டி ருப்பவர் அல்லவா அவர். இருந்தாலும் அவருக்குள்ளும் பல கேள்விகள்...

கல்வி மட்டுமே தனது மூலதனமாக வைத்து கிழக்கு மாகாண கிராமப் புறத்தில் இருந்து கொழும்புக்கு வந்து தனது தொழில் வருமானத்தில் மட்டுமே 25 வருடங்களாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்.

ஊரிலிருந்து தூரத்து சொந்தத்துக்குள் திருமணம் முடித்து அதே வருடமே மனைவியையும் கூட்டிக்கொண்டு வந்து குடும்பம் நடத்த தொடங்கியவர்.

உறவுகள் அடிக்கடி வந்து செல்வார் கள். அத்தனை பேரையும் அன்பாக உபசரித்து கொழும்பில் வார கணக் குக்கு மேல் தங்க வைத்து அனுப்புபவர்.

படிப்புக்காக வரும் உறவுக்கார பிள் ளைகளுக்கு உணவு, உறைவிடம், வச திகள் அனைத்தையும் மனம் கோணா மல் செய்து கொடுப்பவர். ஊரில் வய தான பெற்றோரை கண்ணும் கருத்து மாக கவனித்துக் கொள்கிறவர். வேறு எந்த தேவையற்ற, வெளிப்பழக்கமும் இல்லை.

குடும்பம், வேலை, உறவு, பிள்ளை கள் கல்வி, என வாழும் மிகவும் பொறுப்புணர்ச்சி மிக்க குடும்பத் தலை வர் அவர். மனைவியோ ஒருபடி மேல் எல்லோரையும் ஒற்றை ஆளாக நின்று சமாளித்து அழகாக குடும்பம் நடத்து பவர். அவர்களுக்குள்ளும் எத்தனையோ

கஷ்டங்களும்.. சுகவீனங்களும் பிரச்ச னைகளும். அதை வெளிக்காட்டவே மாட்டார்கள் அன்பான தம்பதியினர்.

மகள்மார்களின் படிப்பு தொடர்ந்து கொண்டிருந்ததால்... அடுக்கடுக்காக வளர்ந்து நிற்கும் மூன்று பெண் மக்க ளுக்கும் திருமணம் முடிப்பது... வீடு கட்டுவது எப்படி?.. என்ற கேள்விக்குறி யுடனான சிந்தனை சதாவின் தகப்ப னாரை பெரிதும் வாட்டிக் கொண்டிருந் தாலும் ...

உடல் நிலையில் ஏற்பட்டிருக்கும் தொற்றா நோய்களும் சேர்ந்து எல்லா சராசரி தகப்பன்களுக்குமுண்டான தூக்க மின்மையும், சிந்தனையும் இவருக்கு மட்டும் என்ன விதிவிலக்கா?

தனது சம்பாத்தியத்தில் கொழும்பில் சொந்தமாக வீடு வாங்கிக்கொண்டதே பெரிய விடயம்.

இறைவன் நமக்கான பாதைகளை சரியாகத்தான் அமைத்திருக்கின்றான். அதன் வழியே நாமும் நேர்மையாக பயணிப்போம். நல்லதே நடக்கட்டும் என்று உள்ளத்து உணர்வுடன் பேசிக் கொண்டே தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொள்வார் அவர்.

தனது மனைவியையும் தங்கையை யும் ஏற்றிக் கொண்டு ஹோமாகம கேம்பஸ்க்கு பேரெண்ட்ஸ் மீட்டிங் காக பயணித்துக் கொண்டிருந்த சதா வின் தந்தையார் மகரகம தாண்டி போய்க் கொண்டிருக்கும் போது, தனது மனைவியை பார்த்து

''ஏம்மா... மகள் தொடர்ந்து படித்து முடித்து தான் கல்யாணம் என்கிறாள். என்ன செய்யலாம்? எனக்கும் வயசா கிறது.'' என மெதுவாக மனைவியிடம் பேச்சை ஆரம்பித்தார். மனைவியோ பிள்ளை'' படிக்கும் போதே மாப் பிள்ளை பார்த்து திருமணம் முடிப் போமே... அவளால் முடிந்தால் மேலும் படிக்கட்டும். இல்லாவிட்டால் அவளது கணவன் விருப்பம். அடுத்தடுத்து இரு வர் இருப்பதால் கொஞ்சம் யோசி யுங்கள்.'' என்றார் சதாவின் தாயார்.

இதற்கிடையில் பயணம் கெம்பஸை நெருங்கி விட, வெளியே அக்கிராமத் தின் அழகையும் இயற்கை காட்சிக ளையும் ரசித்தவாரே பயணித்துக் கொண்டிருந்த தங்கை.. மஹிந்த ராஜ பக்ஸ கல்லூரியின் அழகைப் பார்த்து வியந்து அதைப் பற்றி பேசியதில் மற்ற பேச்சு அத்துடன் நின்று போனது.

தங்கையாருக்கு அந்த ஏரியாவை பற்றி அதன் டெவலப் பற்றியும் விளக்கி பேசிக்கொண்டே கெம்பஸ் கேட்டை வந்தடைந்தனர்.

மனைவியையும், தங்கையையும் இறக்கிவிட்டு காரை பார்க் பண்ண சென்றார் சதாவின் தகப்பனார்.

மனைவியும், தங்கையும் தங்களது அடையாள அட்டையை முன் கேட்டில் பதிவு செய்து உள்ளே நுழைந்தனர். குறு கிய காலத்திற்குள் ஹோமகமவில் உரு வாக்கப்பட்ட அந்த தனியார் கேம்பஸ் இயற்கை வனப்புக்களால் நிரம்பி வழிந் தது.

சீராக நாட்டி வெட்டப்பட்ட அழகிய பூச் செடிகளும், மரங்களும், பிரம்மாண் டமான கட்டிடங்களும், அதனை அலங்கரித்துக் கொண்டிருக்கும் கொடி தாவரங்களும் பார்ப்பவர்களை மட்டு மல்ல...

அங்கு கற்கும் மாணவர்கள் மனதை யும் கொள்ளை கொண்டு விடும் என்ப தில் எந்த சந்தேகமும் இல்லை.

இரண்டு மாடி கட்டிட அழகிய நூலக சாலையை வியந்து ரசித்தவாரே மீட்டிங் நடக்கும் கட்டிடத்தின் உள்ளே நுழைந்த போது, சதாவின் அழகிய சிரிப்பு பெற்றவர்களையும் மாமியையும் வர வேற்றது. களுவாஞ்சிக் குடியிலிருந்தும், மடவளையிலிருந்தும் அங்கு வந்து ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் தனது நண்பிகளையும் தனது குடும்பத்தாருக்கு அறிமுகம் செய்து வைத்தாள் சதா.

கம்ப்யூட்டர் சயின்ஸ் பிரிவு மாணவர் களுக்கும், பெற்றோருக்குமான மீட்டிங் அந்தப் பெரிய குளிரூட்டப்பட்ட ஹா லில் ஆரம்பமானது. பேராசிரியர்கள் மாணவர்களின் கற்கை சம்பந்தமாக குறுகிய காலத்தில் கற்று, அவர்கள் அடையப் போகும் பயன்களையும் கற்றலின் பிறகு அவர்களுக்கு கிடைக்க இருக்கும் வேலை வாய்ப்பை பற்றியும் மிக அழகாக எடுத்துரைத்தார்கள்.

பெற்றோர்களின் சந்தேகங்களும் அங்கே தீர்த்து வைக்கப்பட்டன. மாண வர்களின் தகமைகளுக்கான வேலை வாய்ப்புகள் பற்றியும் அங்கு மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டது.

இதற்கு முதல் கற்ற மாணவர்கள் இப்போது செய்து கொண்டிருக்கும் வேலைகள் பற்றியும் எடுத்துரைக்கப் பட்டது.

அங்கு மாணவர்கள் மூன்று வருடத் தில் கற்றுத்தேர்ந்து வெளியேறியதும், அவர்களுக்கான உள்ளுடர்.. வெளியூர் வேலை வாய்ப்புகள் பற்றியும், மேலும் கல்வி தொடர விருப்பமானால் அதற் குரிய வழிகள் பற்றியும், சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தெளிவுபடுத்தப்பட் டது. மேலும் சில சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபடுத்திக் கொண்ட சதா வின் தகப்பனார் மகளின் கல்வி சம்பந்தமான பூரண விளக்கத்துடனும், மனோதிடத்துடனும் வெளியே வந்தார். மகளுடன் கெண்டீனில் சிற்றுண்டி அருந்தி விட்டு விடைபெற்றனர் சதா வின் குடும்பம்.

வரும் வழியில் தங்கை சதாவின் தகப்பனாரிடம் '' ஏன் நானா ?.. நானும் படித்து முடித்து ஒரு உத்தியோகத்தை தேர்ந்தெடுத்த பின் திருமண பந்தத்தில் நுழைந்திருந்தால்...

கணவனை இழந்த இன்றைய சூழலில் இன்னும் நான் ஓய்வூதியம் பெறாமல் வேலை செய்து கொண்டி ருந்திருப்பேன் அல்லவா?... எனக்கான வேதனமும் வந்து கொண்டிருக்கும்...

யாருடைய கையையும் எதிர்பார்க் காமல் வாழ்ந்திருக்கலாமல்லவா?..'' என்று கேட்ட தங்கையை வியப்புடன் ஏறிட்டு நோக்கினார் சதாவின் தகப் பனார்.

''உண்மைதாம்மா...பெண்களுக்கான கல்வி மிக முக்கியம்.. இப்போது நீயே அதை உணர்ந்திருக்கிறாய்.. எதிர்காலத் தில் நிச்சயமாக ஆண் பிள்ளைகளுக்கு சமமான கல்வியை... பெண் பிள்ளைக ளுக்கும் வழங்க வேண்டியது காலத் தின் தேவையாகவே உள்ளது.'' என்றார் சதாவின் தகப்பனார்.

தங்கையின் கேள்வியின் பின்னால் இருந்த ஏக்கமும் வேதனையும் நியாய மும்; நெஞ்சில் ஈட்டியாகப் பாய்ந்தி ருந்தது. ஒரேயொரு கேள்வி சாதாவின் தந்தைக்குள் இருந்த பலநூறு கேள்வி களுக்கு விடைசொல்லிப் போனது. தீர்க்மான முடிவோடு வண்டியை வீட் டை நோக்கி செலுத்தினார்.




இழிவான மனத்தின் மணம்
சீதனம் வாங்குவதற்கு எதற்கு நூதனம்?

பட்டப்படிப்பு படித்ததால்
பந்தியில் நிற்க வேண்டுமா?
ஆதனம் கேட்டு
தன்மானம் இழக்கிறாய்
உன் பணப் பசிக்கு
படித்த படிப்பை விற்று
தீனிபோடும் கேவலம் உனக்கு.

தாகம் தீர்க்க
தட்டைப் பாத்திரத்தில்
நீரருந்தும் நிலையிது.

கற்றதை விற்று வியாபாரியாய்
மணமேடை காணலாமா?
பணத்திற்காக பந்தல் தேடலாமா?
வாழ்விழிவாக வழி தவறி போகலாமா?

அடுத்தவன் உழைப்பை
சீதனம் என்ற பெயரில் தட்டிப் பறித்து
ஆதனம் தேடும் ஆண்மையற்ற மகனே
உன்னால்
ஆணினத்துக்கே அவப்பெயர்.
வாழத்தகுதியற்ற உனக்கு
வாழ்வுதர பெண் தரும்
மடமை நீங்காதவரை
சீதனப்பசி இங்கு ஒழியப் போவதில்லை.

**திருமதி பானு ஜிப்ரி,**
**சாய்ந்தமருது.**




ஆறுதல் சொல்லத் தான்
ஆசையெனக்கு
ஓட்டை விழுந்த அவள் தாவணி
மறைத்தும் மறைக்காத மாரழகை
சில கண்கள் மொய்ப்பது தெரிகிறது

அணிலொன்றின் கூட்டைப் போல
அவள் கூந்தல்
அதை அலட்சியமாய் விட்டிருக்கிறாள்
அழுக்குப் படிந்த உடைகளையும்
அலங்கோலமாய்
தொங்க விட்டிருக்கிறாள்

கையில் இருந்த பைக்குள்
கசங்கிப் போன புகைப்படங்கள்
அடிக்கடி எடுப்பதும் முத்தம்
கொடுப்பதும்
அவளுக்கு எப்போதும் வாடிக்கை

இழந்த எதையோ எப்போதுமே
மண்ணைக் கிளறி தேடுவதால்
பாதையில் செல்லும் அனைவருக்கும்
பரிதாப அவள் செயல் வேடிக்கை

ஆறுதல் சொல்லத் தான்
ஆசை எனக்கு
ஆயினும் என்ன செய்வேன்
தெருவோரம் தானே கிடக்கிறேன்
நானுமோர் பிச்சைக்காரியாய்

**ஹுமைரா அல் அமீன்**

# நவீன நாஸ்திகத்தின் வரலாறும் அதன் எல்லைகளும்–03

அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன் (நளீமி)



பரிசோதனைக் குழாய்க்குள் கடவுளைத் தேட ஆரம்பித்த நாஸ்த்திகம், நாஸ்த்திக சித்தாந்த வடிவிலிருந்து அறிவியல் நிறுவனமயப்படுத்தப்படல் என்ற கட்டத்திற்கு அடுத்தடுத்து வந்த நூற்றாண்டுகளில் கொண்டுசெல்லப் பட்டது.

மதத்தின் எதிர்க்கருத்தியலாக முன்வைக்கப்பட்ட நவீன நாஸ்த்திகத்தின் வழியேதான் ஐரோப்பாவில் விஞ்ஞானமும் அறிவியலும் வளர்ச்சி அடைய ஆரம்பித்தன. இந்த அறிவியல் வளர்ச்சிக்கான பிரதான காரணியே நாஸ்த்திகம் தான் என்று சொன்னாலும் மறுப்பதற்கில்லை.

அதேவேளை, ஐரோப்பாவை அடிப்படையாக கொண்ட அறிவியல் வளர்ச்சிதான் இத்தகைய கடவுள் மற்றும் மத மறுப்பு மனோநிலையிலிருந்து புதிய ஆய்வுகளையும் கண்டுபிடிப்புக்களையும் மேற்கொண்டன தவிர உலகம் முழுமையான மனோநிலை அதுவல்ல. அதே போல் எல்லா விஞ்ஞானிகளும் அறிஞர்களும் நாஸ்திகத்தை ஏற்றுக் கொண்டார்களா? என்றால் அதுவும் இல்லை என்பதனை மனதில் நிறுத்தி வைத்துத்தான் இவ்வரலாற்று ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

19ம் மற்றும் 20ம் நுடற்றாண்டுகளில் நேர்மறைத் தர்க்கவியல் (Logical positivism) மற்றும் புதிய நாஸ்த்திகம் (New atheism) என்ற இரண்டு சிந்தனை வழிமுறைகளினூடடே நாஸ்திகம் அறிவியல் பரப்பில் தனக்கான இருப்பை மேலும் வலுப்படுத்திக்கொள்ள வளிசெய்யப்பட்டது.

மேற்சொன்ன இரண்டு அணுகுமுறைகளும் கடவுளை விஞ்ஞான

ஆய்வுகூடங்களில் பரிசோதனைக் காக அழைத்தன.

சமுத்திரங்கள், கோள்கள், மலைகள், ஆகாயம், அணுக்கள் என அனைத்தையும் கடவுள் படைத்ததாக சொன்னாலும் சில அறிஞர்கள் தாமாக உருவாக்கி வைத்த சோதனை முறைகளுக்குள்ளால் கடவுளை தீக்குளிப்புச் செய்யச் சொன்னார்கள்.

இந்த ''அக்னி'' பரீட்சைக்கு வராத இறைவன் இறைவனே இல்லை என அவர்கள் உரத்துச் சொல்ல தலைப்பட்டனர்.

பிரான்ஸிய சமூகவியல் அறிஞரும் தத்துவவியலாளருமான ஓகஸ்ட் கொம்ட அறிமுகப்படுத்திய பொஸிட்டிவிஸ்ம் என்ற சித்தாந்தம் கடவுள், ஆன்மா போன்றவற்றிலும் பிரயோகிக்கப்பட்டது.

அதாவது What cannot be observed does not exist எதனை அவதானிக்க முடியாதோ அது இல்லை என்ற பிரபலமான வார்த்தைகளுக்குள் கடவுள் மீதான நம்புகை என்ற விடையமும் கொண்டுவரப்பட்டது.

அத்தோடு, The verification princi ples என்று சொல்லப்படும் உறுதிப்படுத்தல் அடிப்படைகள் எல்லா விடையங்களிலும் பிரயோகிக்கப் படுதல் ஒரு கலாசாரமாக பின்பற்றப் படலாயிற்று. அதாவது எந்த ஒரு விடையத்தையும் நிரூபித்தல் அல்லது மறுத்துரைத்தல் என்பவை, பரிசோதனை அடிப்படையில் அல்லது கணிதவியல் கணிப்பீட்டு அடிப்படையில் அல்லது தர்க்கவியல் அடிப்படையில் தான் அமைந்திருக்க வேண்டும்.

மூன்று வழிமுறைக்குள்ளும் உட்படாதவை இல்லை என்ற முடிவினை பரிசாய்த் தரும். ஆக கடவுள், மறுமை, நன்மை, தீமை, வானவர்கள் என்று எதுவும் இல்லை என்பதனை இதன்மூலம் நிரூபிக்கலாம் எனப்பட்டது. என்றாலும் 20ம் நூற்றாண்டின் பின் அரைப் பகுதிகளில் Theory of languages and games எனும் Ludwig Wittgenstein சிந்தனையோடு கடவுள் விடையத்தை பொஸிட்டிவிஸ அணுகுமுறையோடு அணுகுதல் என்ற முறைமைக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது.

ஒவ்வொரு விளையாட்டிற்கும் என்றான தனியான விதிகள் உள்ளன. ஒரு விளையாட்டின் சட்ட திட்டங்களை இன்னொரு விளையாட்டில் பிரயோகிக் முடிவதில்லை. இதேபோல் ஒவ்வொரு அறிவியல் துறைக்கும் என்று பிரத்தியோகமான அணுகுமுறைகள் உள்ளன. அவற்றைக் கொண்டு மற்றொன்றில் ஆராய்ச்சி செய்ய முடியாது.

புலனறிவின் துணையில்லாமல் பௌதீகவியல், கணிதவியல், இரசாயணவியல் போன்ற துறைகளில்

ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியாது. இதேபோல் தர்க்கவியல், தத்துவம், ஒழுக்கம் போன்ற மானிடவியலிற்கு மேற்சொன்ன கற்கை முறை முழுமையாக பொருந்திப் போகாது. ஒவ்வொன்றும் இயல்பில் வேறுபாடு கொண்டவை.

இதுபோலவே கடவுள், ஆன்மா என்ற சித்தாந்தங்களை விஞ்ஞானத்தின் வழி நின்று ஆராய்ச்சி செய்ய முடியாது என்பதனை Ludwig Wittgenstein. A. Ayer போன்றவர்கள் ஆணித்தரமாக நிரூபித்தனர். இதன் பின்னால் பல ஆண்டுகளாக கடவுள் மறுப்புக் கொள்கைக்கு என்று பயன்படுத்தப்பட்ட விஞ்ஞானத்தின் வழிமுறைகள் இல்லாது ஆக்கப்பட்டன.

அறிவியலோடு மதச் சித்தாங்களை உரசிப்பார்க்கும் மதத்திற்குள்ளான கலாசார எழுச்சிஇதற்கிடையில் நாஸ்த்திக அடிப் படையிலான அறிவியல் வளர்ச்சிப் போக்கானது சில நன்மைகளை மதத்திற்கும் செய்துள்ளது என்பதுவும் ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

மத்திய காலப்பகுதியில் மதச் சித்தாங்களை கேள்வி கேட்க தலைப்பட்ட நாஸ்திகம் அதன் பின்னரான காலப்பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தின் பல நடைமுறைகளை சந்தேகிக்கத் தொடங்கின என்பதனை முந்திய கட்டுரையில் பார்த்தோம்.

இந்த சூழ்நிலையில் ஒரு கட்டத்தில் கிறிஸ்தவம் உட்பட ஏனைய பல மதங்களும் திக்குமுக்காடிப் போயின.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை கீழைத்தேயவாதத்தின் வளர்ச்சியினால் சிந்தனா ரீதியிலான சவால்களை அவர்களும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பது மறுப்பதற்கினில்லை. ஆனால் அவைகள் கிறிஸ்தவத்தின் மீதான அளவு வீரியம் கொண்டவையாக அமைந்திருக்கவில்லை.

நீண்ட காலத்தின் பின்னர் மதங்கள் சுதாகரித்துக்கொண்டன. நாஸ்திகத்தின் கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு அவர்கள் பழக்கமாகிக் கொண்டனர். பகுத்தறிவிற்கு ஒவ்வாதது என்ற விடையங்களையும் மூட நம்பிக்கைகளையும் களைந்து விட்டு மதபோதனைகளை செய்யத் தொடங்கினர். இதனால் பகுத்தறிவு இறையியல் rational theism என்ற ஒரு புரட்சி தானாக எழத்தொடங்கியது. அதன் நீட்சி இன்றுவரைத் தொடர்கின்றமை முக்கிய அம்சமாகும். குறிப்பாக கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து மதங்கள் பகுத்தறிவு இறையியல் வழிமுறையை அதிகம் பயன்படுத்தின.

21ம் நூற்றாண்டினைப் பொறுத்தவரை புதிய நாஸ்த்திகம் ஓரளவு தொழிற்படுகின்றது என்பதனை மறுப்பதற்கில்லை. றிச்சட் டோகிங்க்ஸ், சாம் ஹாரிஸ், டானியல்

டென்னட் மற்றும் கிறிஸ்தோபர் ஹிட்சன்ஸ் போன்றவர்கள் புதிய நாஸ்திகத்தின் துடதுவர்களாக உல களவில் அறியப்பட்டுள்ளனர்.

இயற்கை விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் போன்றவற்றை தமது கருத்துக்களை நிறுவுவதற்கு பயன்ப டுத்துவதோடு, மதவாதிகள் கடவு ளின் இருப்பை நிறுவுவதற்கு பயன் படுத்தும் intelligent design எனும் நுண்ணறிவுமிக்க வடிவமைப்பு எனும் கருத்தாக்கத்தை நிராகரிக் கின்றனர். இதற்குப் பகரமாக Unintelligent design என்ற எதிர்ப் பதத்தினை சாம் ஹாரிஸ் அறிமுகப் படுத்துகிறார்.

இப்போது ''புதிய நாஸ்த்திகம்'' கடவுள், மதங்கள் என்பவற்றையும் தாண்டி சிந்திப்பதாக தெரிகின்றது. மதமானது சமூகங்களின் எல்லாத்து றைகளிற்குள்ளும் புகுந்து தாக்கம் செலுத்துகின்றது. அரசியல், கல்வி, விளையாட்டு, பொருளாதாரம் என அதன் ஊடுருவல் எல்லை அற்று இருக்கின்றது. எனவே இவற்றை நீக்குவதுதான் சிறந்த உலகம் ஒன் றிற்கான ஒரே வழிமுறை என்பத னை இவர்கள் திரும்பத் திரும்ப முன்வைக்கின்றனர்.

மேலும், மதங்கள் முன்வைக்கும் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட அனைத்தும் அர்த்தமற்றவை, நிரூ பிக்க முடியாதவை என்பது அவர்க ளது பிரதான வாதப்பொருளாகும்.

மதங்களுக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டின் காரணமாக இவர் களை விமர்சிப்பவர்கள் Secular fundamentalism மதச்சார்பற்ற அடிப்படைவாதம் என வர்ணிக் கின்றனர். அதாவது மதவாதிகளைக் கடுமையாக வெறுக்கும் அடிப் படைவாதிகள் என்பதுதான் இதன் அர்த்தம்.

மதங்கள் தொடர்பான சரியான புரிதல் இல்லாமல் வக்கிரகத்தோடு அணுகுகின்றனர் என்ற கருத் தோட்டம் பாரியளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சிலர் புதிய நாஸ்த்திக வாதிகள் நாஸ்த்திகத் தினுடடாக செய்யவேண்டியதனை விட்டுவிட்டு வேறு எங்கோ விளை யாடிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற விமர்சனத்தையும் முன்வைக் கின்றனர்.

இப்பேது நவீன நாஸ்த்திகம் அதன் தீவிரமான வளர்ச்சியிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் சுருங்கி விட்டது. அதன் புதிய கொள்கை பரப்பாளர்களின் மதங்களினுட னான அணுகுமுறை அதற்கொரு காரணமாக அமையலாம்.

நவீன நாஸ்த்திகத்தின் வரலாற் றை ஓரளவு சுருக்கமாக மூன்று தொடர் கட்டுரைகளினூடாக விளக் குவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் கட்டுரைகளில் நாஸ்த் திகத்தின் உள்ளடக்கம் தொடர்பில் ஆராயலாம்.

(தொடரும்)

நான் எப்படி இருக்க விரும்புகின் றேனோ அப்படி வாழ்தல் இயலுமானால், அதுவே எனது சுதந்திரம் என்பதே எனது சுதந்திரம் பற்றிய புரிதல். நிச்சயமாக மற்றவர் மூக்கு நுனிவரை தான் நமக்கான சுதந்திரம். நமது விருப்பு வெறுப்புகள் நிச்சயம் இன்னும் ஒரு மனிதரை, ஏன் விலங்கை, இயற்கையை கூட பாதிக்காத வகையில் ஈடுபடக் கூடுமானால் நிச்சயமாக நாம் சுதந்திரமானவர்கள் தான்.

நமது சுதந்திரத்திற்கு எது தடை? நாம் விரும்புவதை பெற்றுக்கொண்டு மகிழ்வான வாழ்க்கை வாழ என்ன தான் தடை.? தனமாக இருக்கும் அல்லவா? நமக்குப் பிடித்த வாழ்வை வாழ மகிழ்ச்சி தேவை. மகிழ்ச்சி அவ்வளவு எளிதான விடயம் இல்லை. இது பல வழிகளில் கிடைத்தாலும், அது ஆரோக்கியமானதா? நிலையானதா? என்பதனை ஆழம் சென்று அவதானித்துப் பார்க்க வேண்டும். தீவிரமான தொழில் நுட்பக் கட்டுப்பாட்டில் உலகம் அமர்ந்து, சமூக வலைகளில் சிக்கி வாழ்க்கைக் கரை யைச் சேர முடியாத அளவுக்குத் தத்தளித்துக் கொண்டு, மீண்டும் மீண்டும்

கடலை நோக்கியே நீந்தி கொண்டி ருக்கின்றோம்.

# நான் எப்படி இருக்க விரும்புகின்றேன்



பிரமி - திருகோணமலை

சிந்திக்காமல் பல பதில்களை அடுக்கி விடுகின்றோம். பெற்றோர்கள் தடை, நண்பர்கள் தடை, ஆசிரியர் தடை, பணம் தடை, தொழில் தடை, நாடு மற்றும் அரசி யல் தடையென எதை எதையோ காரணம் காட்டித் தப்பித்துக் கொள்கின்றோம். இந்த தப்பித்ததில் எந்த விதமான அர்த்தமும் இல்லை. கண்ணை மூடினால் உலகம் இருண்டு விடும் என்பது போல் முட்டாள் சிந்திப்போமா! மகிழ்ச்சியினைச் சுலப மாகப் பெற்றுக்கொள்ள முடிந்தாலும், அது நிலையற்றது என்பதனை புரிந்து கொள்ள மறுத்து விடுகின்றோம். சமூக வலைத்தளம் சிறந்த தொடர்பாடல் இலகு கருவியாகும். கல்வி கற்பதற்கான பல்துறை புலமை களின் கூட்டுத்தளமாகும். வியாபார முறை நுட்பங்களின் சிறந்த கள வாய்ப்பு அது. இருந்து கொண்டே உலகை சுற்றி பார்க்கும்

அழகான முற்றுப்புள்ளித் தொடர் அது. பொழுதுபோக்குகளின் மலிவு விற்பனை சந்தை அது. எதை வேண்டுமானாலும் இயக்க, பரப்ப, சுலபமாய் சிந்திக்க, சிரிக்க பற்பல வழிகள் புதிய கவர்ச்சி நுட்பங்க ளுடன் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகிவருகின்றது.

நமது இலகுபடுத்தல்களுக்காக சமூக வலைத்தளங்களை நாம் பயன்படுத்துகின் றோமா? இல்லை சமூக வலைத்தள இயக் குனர்களின் உற்பத்தி வருமான இலகு படுத்தல்களுக்காக நாம் பயன்படுத்தப்ப டுகின்றோமா? நாம் நம்மை கேட்க வேண்டிய கேள்வி தான் இது. நமது அடைவுகளை, சாதனைகளை, வெற்றியை நாம் தான் கொண்டாட வேண்டும். நம்மை கொண்டாடுவதாக சமூக வலைத்தளம் தன்னைக் கொண்டாடிக் கொண்டிருக் கின்றது. இறால் போட்டுச் சுறா பிடிக்கும் ராஜதந்திரம் நிறைந்த சமூக வலைத்தள இயக்குனர்களின் முதலாவது முதலீடு மனித தேவைகளின் உளவியல் தான்.

மனிதனின் மனதைக் கவரும் அவ னுக்குத் தேவையானவற்றிலும் அதிகமான தேவையற்ற பொழுதுபோக்குகளை விளம் பரப்படுத்தி அறிமுகம் செய்கின்றது சமூக வலைத்தளங்கள். நேர்நிலைகளில் பொருட் களை வாங்கப் பழகிப்போன நாம் வாழ்க் கைத் துணையையும் கூட வாங்கி விடுகின் றோம். பிழை சரிகளுக்கு அப்பால் மகிழ்ச்சி யாக வாழ வேண்டும் என்ற விருப்பத்தை சமூக வலைத்தளங்கள் நிறைவு செய்வதாக நாம் நம்பிக் கொண்டிருக்கின்றோம். குழந்தை முதல் பெரிய முதியோர் வரை இப்போதெல்லாம் கடற்கரைகளையோ சிறுவர் பூங்காக்களையோ நாடுவதற்கு பதில் ஸ்மார்ட் ஃபோன்களை தான் விரும்புகிறார்கள். ''ஏன் அங்கே எல்லாம் போவான் கைக்குள்ள உலகம் விளை யாட்டு'' என போலிகளில் ஏமாந்து கொண்டு, தமது துடிப்பையும் செயல் திறனையும் இழந்து விடுகின்றனர்.

அவ்வளவு சுலபமாய் அது கிடைத்து விட்டால் அது பொருள் அற்றதாகவோ நேர விரயமாகவோ தான் நிச்சயம் இருக் கக் கூடும். நிலையான மகிழ்வுக்கு நீண்ட காலம், நீண்ட அர்ப்பணிப்பு, நீண்ட கடின உழைப்புத் தேவை. நாம் ஒரு புத்தகத்தை படித்து முடிப்பதற்குள் எத்தனை குறுக்கீடு கள், கவனச் சிதைவுகளுக்கு முகம் கொடுப் போம். அனேக மானவை சமூக வலைகளில் இருந்து தான் வருகின்றன.

சாதாரணமாக ஒரு மனிதன் மிகக் குறைந்த அளவிலான சமூக வலைத் தள பாவனையினால் அவனது உற்பத்தி திறனில் 40 விதமான அளவு இழந்து போகின்றான். இந்த சமூக வலைத்தளங் களில் அடிமையாதல், போதை மதுப்பா வனை, புகை பிடித்தல், நீலப்படங்களைப் பார்த்தல், ஏன் அதிகம் இனிப்புகளைச் சாப்பிடுதல் போன்ற அடிமையாகும் செயல்க ளுக்கு அப்பால் தீவிரமான விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

இந்தப் பழக்கங்கள் ஒரு விதமான புத்து ணர்வை உடலில் மனதில் ஏற்படுத்துவதாக நாம் உணர்கின்றோம். சிந்திப்போம் எவ்வளவு நேரம் புகைத்தல், போதைப் பழக்கம், மது அருந்துதல் மூலம் இனிப்பு சுவைத்தல் மூலம் பாலின்பம் பெறுதல் மூலம் நம்மை மகிழ்வாக வைத்திருக்க முடியும்? கையில் தீயை வைத்துக்கொண்டு எங்கேயோ சுடுகின்றது என்பது போல், கேலியாக உள்ளது. புறச்சூழலின் எல்லா விதமான தூண்டலுக்கும் நாம் செயல்படு கின்றோம். நாம் அதில் பாராட்டுப் பெற வேண்டும் என நினைத்து முதலீடு செய் கின்றோம். உதாரணமாக சமூக வலைத்த ளங்களில் புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் கருத்துக்களைப்பதிவிடுதல் மூலம் இந்த தற்காலிகமான பாராட்டுக்களில் நாம் மயங்கி நிஜத்தை தேடுவதை விட்டுவிட்டு தினம் ஒரு பதிவு அதற்கான விருப்பு வாக்குகளை பார்த்து குதூகலித்துக் கொள்

கின்றோம். இது தொடருமானால்? நீங்கள் விரும்பும் வாக்களிப்புக் கிடைக்காது விடில் இங்குதான் அபாயம்!

மற்றவர்களில் ஒப்பீடு செய்தல் நம்பிக் கையின்மை, சுய காயப்படுத்தல், தற் கொலை உணர்வுகள், தவறான பழக்க வழக்கம், தாழ்வுணர்ச்சி, தனிமை விரும் பல், கவனக் குறைவு, களைப்பு, கோபம் சோம் பல், அதீத சிந்தனை என அனைத்து வகையான தீமைகளையும் கை கோர்த்துச் சேர்த்து வைத்து நம்மை நாம் சேதப்படுத்தி விடுகின்றோம். இப்போது பாருங்கள் மேற்கூறிய அறிகுறிகள் அபாயகரமான விளைவுகளின் பின் விருப்பமான அனைத் தையும் வெறுத்து ஒதுக்கி விடுவோம். தனித்து விடுவோம்.

இப்போது நாம் மகிழ்வாக இருப்பதான விருப்பம் விரும்பியபடி வாழும் சுதந்திரம் எங்கே? இது யாரின் மீதான குற்றம்? இதற்காக யாரின் மீது குற்றம் சாட்ட முடியும்? ''நான் விரும்பும் நன்மைகளை விட விரும்பாத தீமைகளையே செய்கி றேன்'' என்ற வேதாகம வாக்கியம் நினைவு வருகின்றது.

நாம் ஒவ்வொரு தடவையும் போதைப் பாவனை, தேவையற்ற சமூக வலைத்தளப் பாவனை பாலுறவு செயற்பாடுகள் தவறான உணவுப் பழக்க வழக்கம் போன்ற தீய பழக்கங்களில் ஈடுபடும் போது, எமது உடலில் மகிழ்ச்சியை தீர்மானிக்கும் ஹார்மோன் ஆன டொப்பமினின் அளவு குறைவடைந்து கொண்டு செல்லும். நாம் அது தேவை என மேலும் மேலும் இப்பழக்க வழக்கங்களை செயல்படுத்த அதன் அளவு மேலும் குறைந்து கொண்டே போகின்றது. உற்சாகத்துக்கான இந்த ஹோமோனி இயக்கம், அமைப்பு, மற்றும் கலங்கள் பாதிப்படைந்து விடும். இந்த ஹார்மோனை உள்வாங்க முடியாத அளவு அந்த அமைப் புகள் பாதிப்படைந்து அதன் தன்மை குறைவடையும். இதனால் உற்சாகத்திற்கு பதில் சோர்வு, எதிர் உணர்வுகள், செயலற்ற தன்மை என்பனவே அதிகரிக்கும். வாழ் வை மகழ்வுடன் வாழ முன்னேற்றம் தேவை. தொழில் முதல் தேவை. இந்த நோக்கில் ஒரு விடயத்தை கவனமெடுக்கும் போது, நாம் வேண்டுமென்றே சில கவனச் சிதறல்களை வரவேற்கின்றோம். சில குறுக் கீடுகளை வரத் தூண்டுகின்றோம். நமது கட் டுப்பாடு மீறிய குறுக்கீடுகளை வெற்றி கொள்வது சிரமப்பட வேண்டிய ஒன்றுதான் ஆனால் நமது கட்டுப்பாட்டில் உள்ள சில கவனச் சிதறல்களை ஏன் தவிர்க்க முடி யாது? உதாரணமாக படிக்கும் போது சமூக வலைத்தள அமைப்புகளை கண்காணித் தல், பயன்படுத்துதல்.

நாம் நமது நினைவு நிலை கட்டுப்பாடு களை அறிவு சார்ந்த கட்டுப்பாடுகளை பயன்படுத்த தவறி விடுகின்றோம். பாருங்கள் ஒரு விடயத்தை தீயதோ நல்லதோ நாம் மீண்டும் மீண்டும் செயல் படுத்தி ஆழ்மனதில் பதித்து விட்டால், அது நாம் கட்டளை இடமுன் ஏற்படுத்திவிடும். நமக்கே தெரியாமல் தினம் அதிகாலையில் எழும் பழக்கம், புகைத்தல் பழக்கம் போன் றவற்றை உதாரணமாக கூறலாம்

அதிகரித்த வேலைப்பளு நமது கவனத்தை சிதைக்கலாம். நாம் எல்லாத் தடைகள் தாண்டியும் இலக்கை நோக்கி கவனிக்கும் போது, வெளிச் சூழலில் ஏற்படும் திடீர் ஆபத்து அறி குறிகள் கவனத்தை சிதைக்கலாம். ''உப்பு விற்க போனேன் மழை கொட்டோ கொட்டென்று கொட்டுது'' என்பது போல் இங்கு அவன் வாழ்வை உயிருடன் தக்க வைத்தலுடன் தொடர்புபடுத்துவதால் கவனச்சிதைவு தவிர்க்க முடியாதது. ஆனால், ஒரே தடவையில் பல செயல்களை செய்யும் போது, மூளை எதை செய்யும் ஒரு தடவை ஒரு செயலைத்தான் அது செய்யும். நாம் ஒரே நேரத்தில் பல வேலை செய்து முடித்ததாக நம்புகின்றோம். முற்றிலும்

அது பிரம்மை ஒன்றைக் கவனிக்க மற்ற மற்றொரு செயலை புறக்கணித்து விடும். இப்படி மாற்றி மாற்றி கவனிப்பதற்கு மூளை இடைவெளி எடுக்கும் இதுதான் நாம் பல வேலைகளை செய்ய நீண்ட நேரம் எடுப்பதற்கு காரணம். மற்றவர்களுடன் வெளியில் உலகின் தோற்றத்துடனும் நம்மை ஒப்பிட்டு ஒப்பிட்டுக் கவலைப்பட்டுக் கொண்டு இருப்ப தைத்தான் இறுதியில் அடைகின்றோம்.

இவ்வளவும் நாம் மகிழ்வாக வாழ தெரிந்தெடுத்த சுலபமான குறுகிய வழிகளின் விளைவுகளே! நமது சுதந்திரத்திற்கு தடையாக இப்பவும் வேறு இடங்களில் காரணம் தேடுகின்றோமா? என்றால் நாம் வாழ்வின் ஆபத்தான நிலையில் இருக்கின்றோம். என்பதுதான் உண்மை.

நாம் எங்கு இருக்கின்றோம் என்பதைப் பொறுத்து நம்மைப் பற்றிய எமது எண்ணம் வாழ்கின்றது. கல்வி மான்களுடன் சாதாரண கல்வியறிவு உடைய நாம் இருக்கும் போது நம் மை சற்று குறைவான கற்றவர் என மதிப்பீடு செய்கின்றோம். சிறந்த நடிகர்களுடன் சாதாரணமான நடிப் பாற்றல் உள்ள நாம் இருக்கும் பொழுது நம்மை அவர்களை விட குறைவானவர்கள். ஆகவே நாம் அதைப் பெற்றுக் கொள்வோம். நடுத் தர வசதியுடைய நாம் ஏழைகளுடன் ஒப்பிடும் போது, அவர்களை விட பண வசதி உள்ள பணக்காரர்களாக கருத கூடும். அதே நபர் பணக்காரர்களுடன் தன்னை பார்க்கும்போது தானோர் ஏழை எனவும் கருத கூடும். நமது நிலையில் நாம் திருப்தி அடைந்து கொள்ள முடியாத அளவு நாம் ஒப்பீடுகளில் மற்றவராக நாம் வாழ வேண்டும் என்ற மாயைகளிலும் இழுப்புண்டு, திணறிக் கொண்டிருக்கின்றோம். நம்மை உணரவும், நம்மை நாம் பாராட்டிக் கொள்ளவும், கொண்டாடவும், உயர்வாக நினைக்கவும் பழகிக்கொள்ள வேண்டும். உள்ளதைக் கொண்டு மகிழ வேண்டும். இல்லையேல் முயற்ச்சி செய்து இன்னும் அடைந்து இன்புற வேண்டும். எம்மைத் தாண்டி ஏதும் எங்கும் இல்லை. நினைவுகள் திடமானால் நிகழ்வென வளமாகும். சுதந்திர வாழ்வும் கைகூடும். சிறிய விடயங்களிலும் உங்களைப் பாராட்டப் பழகுங்கள் மகிழ்ச்சி அதிலும் தான் இருக்கின்றது.

---

# தாய்வேர்



மாறுபடா தன் இயல்பினூடு
இயற்கை பேரழகாய்
மிளிர்கிறது

மறுமுகம் காட்டும்
அனர்த்தங்களிலும்
போராடிப் பெறுகிறது உயிர்

அவளும் அவ்வாறு
உயிர்பெறுகிறாள்
தனது வலிகளை
இரவின் இருளுக்குள்
மறைத்தாள்
துயரங்களை அறைகளின்
சுவர்களுக்குள் புதைத்தாள்
சில நாட்களின்
அடக்குமுறைகளை
அதிகாலையில்
இறைவனிடம்
ஒப்படைத்தாள்.

மகிழ்ச்சியின் மலர்
வாசனையை
வீடெங்கும் பரவினாள்
சுற்றியுள்ள உறவுகளை
அழகிய சொற்களால்
முத்தமிடும்
பெண் எனும் இயற்கை
ஆழச் செல்லும்
விருட்சத்தின்
தாய்வேர் போல அவள்
இங்கே துயரங்கள் ஒரு
கணமேனும்
வீட்டின் மதில்களைத்
தாண்டிச்
சென்றதாக வீதிகள்
அறியவில்லை

**-அஷ்ரபா நூர்தீன்**
**பாலையூற்று திருகோணமலை**



# அவள்

எதையோ
எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றாள்
ஆனால் எதுவென்று சொல்லவில்லை
ஆழ் மனதில் இருப்பதை
ஆள்ந்தறிவதற்கு யாரும் இல்லையோ
என்னவோ

எதிர்காலம் பற்றியதா?
நிகழ்காலம் பற்றியதா?
கடந்த காலம் பற்றியதா?

என்று தெரியாமல் பார்ப்போர் தடுமாறுவது
ஒரு புறம் இருக்க
அவளின் கோலம்
அப்படியேதான் உள்ளது
இன்னும் கலையவில்லை
கலைத்திடவும் எண்ணமில்லை
ஆனால் ஏதோ ஒன்று மட்டும்
அவளின் கண்களில் தெரிகின்றது
அது என்னவாகவும் இருக்கலாம்
என நினைக்கின்றேன் தெரியவில்லை
ஆனால் எதையும் அவள்
யாரிடமும் சொல்லிட மாட்டாள்
இதுதான் அவள்

புரிய முடியாத புதிர்
புரிந்திட நினைத்தால்
முடியாத துயர்

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
**புல்மோட்டை - திருகோணமலை**

---



# அடிமையாய் ஆகிடட்டும்

**மருதமுனை முனாஸ்**

தொலைபேசி கையில் வந்து–
பெரும்
தொல்லை பேசியாய் ஆனதடா
விலைபேசி மக்கள் பணத்தை –
தினம் வீணாக்கியே கரைக்குதடா

வலையமைப்புக்கள் பலவந்து –
இன்று வாழ்க்கைக்குள் மெல்ல
புகுந்ததடா
நிலையில்லாமல் மனித
மனங்களை – தினம்
நிம்மதியின்றி அலையவைக்குதடா

சின்னப் பிள்ளைகூட சீரழிந்தே
போனதடா – கொடும்
சிறுத்தை போல் அவர் மனதும்
ஆனதடா எண்ணங்களில்
வக்கிரமே வளர்ந்ததடா – நிதம்
ஏற்றம் கண்டு அக்கிரமங்கள்
தொடர்ந்ததடா
நன்மைகள் பல
இவற்றால் என்றாலும் –
அதை நம்மவர்கள் அனேகம்பேர்
உணர்வதில்லை
உண்மைகள் உணர்ந்தே
செயற்பட்டால் – அவை
உலகோரின் உயர்வுக்கே
வழியமைக்கும்
மனிதன் கண்டு பிடித்த
தெல்லாம் – இம்
மண்ணில் நலவுகள் வந்திடத்தான்
புனிதன் என்று நாம்
வாழ்வதெனில் – இப் புதுமைகள்
நமக்கே அடிமையாய்
ஆகிட்டும்.

# மறுமை நிழல் பெறும் இளைஞன்

அகமட் பிஸ்தாமி

பெரு மூச்சொன்றை விட்டப டியே சாளரத்தினூடாக தனக்கு முன்னால் உள்ள வீதியை உற்று நோக்கினான் அவன். நேற்று மிகவும் பிந்திய இரவில் வீடு வந்த களைப்பில் உடனே கண் அயர்ந்து தூங்கிவிட்டான் போலும். இரவு உணவைக்கூட உண்ண வேண்டும் என்று அவனது மனது சொல்ல வில்லை. அவ்வளவு களைப்பு அவனை கசக்கிப்பிழிந்திருக்க வேண்டும்.

இந்த நவீன உலகில் அத்துனை வசதி வாய்ப்புகள் இருப்பினும் அவன் உறங்குவது அந்த இத்துப் போன பாயில் தான். நிம்மதிப் பெருமூச்சுடன் உறங்கினான். அதிகா லைத் தொழுகைக்கான அழகிய பாங்கொலிதான் அவனை தட்டி எழுப்பியது. சந்தப்ப துஆவை மொழிந்தவனாக எழுந்து குளியல றைக்கு சென்று சுத்தமாகி அழகிய முறையில் வுழூ செய்து கொண்டு இமாம் ஜமாஅத்தை நழுவ விடா திருக்க பள்ளிக்கு விரைந்தான்.

பள்ளியில் ஜமாத்தாக தொழு வது 27 மடங்கு நன்மையை பெற்றுத்தரும் என்பதை அவன்



அறிந்தே வைத்திருந்தான். வேலைப் பளுவின் காரணமாக இஷாதொழு கையை ஆற அமர ஜமாத்துடன் தொழ முடியாமல் போனது அவனுக்கு ஒருவித கவலைதான். பாதி இரவு நின்று வணங்கிய நன்மையை இழப்பது பேரிழப் பல்லவா? அதனை நிவர்த்திக்க ஸுபஹ் தொழுகையை சரி நிறை வேற்றி மன நிறைவு காண முயற் சிக்கிறான் போலும். இப்படி தொழுவதால் மீதி இரவில் நின்று வணங்கிய நன்மையை சரி ஏன் விடுவான் என்று நினைத்திருப் பான்.

அவனை வளர்த்து உருவாக்கிய பெற்றோர் அருள்பாளிக்கப்பட்ட வர்கள் தான். இவனது துஆக்கள் நிச்சயம் அவர்களது கப்ரில் பயன்கொடுக்கும். ஸாலிஹான பிள்ளை இவன்.

கடந்த வாரம் ஜூம்மா குத்பாவிலும் இமாம் மிம்பரில் இருந்தவாறு ''ஸுபஹ் தொழு கையை தொழுதவனை அல்லாஹ் பொறுப்பேற்கிறான்'' என்ற ஹதீ ஸை செவிமடுத்தது அவனுக்கு நினைவு வந்தது. அதனால் தான் அவன் பெற்ற அந்த சிறு அறிவினை தினமும் வாழ்வில் செயற்படுத்த துடிக்கிறான்.

ஆம், ஆதிலைப்போல ஏழைக் குடும்பம் ஒன்றில் பிறந்த ஓர் இளைஞனுக்கு தனது முள்ளந் தண்டை முறிக்கும் குடும்பச் சுமை கள் ஏற்றப்பட்டால் அதனை இறக்கிவைக்க அல்லாஹ் மட்டும் தான் இருக்கிறான். எனவே தான் அவன் ஏனைய இளைஞர்கள் போலன்றி வித்தியாசமானவனாக இருக்கிறான்.

ஏனையவர்களைப்போல் அவ னால் ஆடிப்பாடி அனுபவிக்க, வேடிக்கை பார்க்க முடியாது. தனது தொழில் முயற்சிகளுடன் தன்னைப்பாதுகாக்கும் அல்லாஹ் வின் தொடர்பையும் அவன் பேணி வருகிறான். அதனால்தான் பொருளாதார சுமைகளுக்கு மத்தி யிலும் இறைவனை அண்டி வாழ்வதை பெருமையாக கருது கின்றான். ஸுபஹ் தொழுகையின் முந்திய இரண்டு சுன்னத்துக்க ளையும் அவன் விடுவதில்லை. உலகம் அதன் வஸ்த்துக்களை விட மேலானதல்லவா? அந்த இரண்டு மெல்லிய ரகாத்களும். அதனை இழப்பவர்கள் முட்டாள்கள். பக லெல்லாம் அரட்டையடித்து சூரிய ஒளி முதுகிலும் பித்தட்டிலும் படும் வரை உருண்டு பிரண்டு இரவெல்லாம் குறட்டை விட்ட வாறு போர்த்தி உறங்கும் மனி தர்களை விட இவன் வித்தியாசமா னவன் மேலானவன்.

ஆதிலின் சிந்தனைகள் சாள ரத்தின் வழியே அருகிலுள்ள பெருந்தெருக்கருகில் ஒட்டியிருந்த சிறுவீதியின் குறுக்காலும் மறுக் காலும் காலைமுதல் விளையாடும்

வாலிபர்களை நோட்டமிட்டன. அங்கு விளையாடுவது சிலர். சுற் றிச்சூழ இருந்து வேடிக்கை பார்ப் பது பலர். தத்தமது உள்ளங்கை களை விட விசாலமான நவீன கையடக்க தொலைபேசிகளில் தன் னந்தனியே விளையாடுவதும் விகாரமாக சிரிப்பதும் விரல்க ளுக்கிடையே சிகரட்டை பற்ற வைப்பதுமாக இருந்தன அந்தக் காட்சிகள். அத்தனைபேரும் தொ ழில் செய்யும் வயதில் இருந்த கட்டிளமைப்பருவ இளசுகள். ஆதில் தனது பால்ய கால சிந்த னைகளுக்கு அடிமைப்படுகிறான்...

நினைவுகள் அலை மோதின.... மத்ரஸா விட்டு வந்ததும் விளை யாட்டு உடை அணிந்து மைதானத் துக்கு சென்று சக நண்பர்கள் சகிதம் விளையாடிய பொழுதுகள் நினைவுக்கு வந்தன. ''மாலை முழுதும் விளையாட்டு'' என்ற பாரதியின் கவிவரிகளும் நினை வுக்கு வந்தன அவனுக்கு. வியர்த்து வடிய விளையாடி களிப்புற்று உடலை தெம்புடன் வைத்திருப் பதில் பேரானந்தம் கண்ட நாட்கள் அவை, வாழ்ந்த இளமைக்கால அழகிய பசுமையான நினைவுகள்... ஆண்டாண்டு காலமாய் முன்னோர் கள் பேணி வந்த கிராமிய விளை யாட்டுக்கள் இப்போது எங்கே? உடல்களைப்பை போக்கும் பாரம் பரிய விளையாட்டுகள் இப்போது எங்கே? இனிய குதூகலங்களுடன் கழிக்கும் பொன்மாலைப் பொழு துகள் எங்கே? என்று தன்னைத் தானே வினாத் தொடுத்தான்.

நவீன உலகு மனிதனை மொத் தமாக வாங்கிவிட்டுள்ளது. அதுவும் இலவசமாக வாங்கியுள்ளது. அவ னை சிந்திக்க விடாது தடுத்துள்ளது. அவனை சிறைப்பிடித்து சிந்திக்க விடாமல் இரும்பு வேலியிட்டுள் ளது. அவனுக்கு சிந்திக்கவும் நேரமில்லை. செயல்படவும் ஆசை யில்லை. தன்னை சீர் திருத்தும் எண்ணமும் இல்லை. ஆத்மீகம் காய்ந்து வரண்டு வற்றி விட்டது. சுயநலம் வாழ்கிறது. அதி பயங்கர உலகில் தன்னை அழிக்க விடாது ஓரளவு பாதுகாத்துள்ள அல்லாஹ் வுக்கு நன்றி கூறியவனாக தனது அலுவலக மேசையை விட்டும் எழுகிறான்.

இன்னும் சற்று நேரத்தில் மஃரிப் அதான் ஒலித்துவிடலாம். தொழுது விட்டு வீடு சேர ஆயத்தமாகி மாலை நேர பிரார்தனைகளை மொ ழிந்தவனாக கையொப்பமிட்டு வெளியேறுகிறான். அதான் ஒலிக் கிறது. அதனோடு சேர்த்து ''சிக்ஸர்'' என்ற உரத்த குதூகல ஓசையும் வானை பிளக்கும் இளையவர்களின் கைகளின் கரகோச ஒலியும்; பின் னாலுள்ள மைதானத்திலிருந்து வந்து சங்கமிக்கிறது... அவன் பள்ளியை நோக்கி நடக்கிறான்.. மஃரிப் ஜமாத்தை அடைய...

(பெயர் முதல் யாவும் கற்பனை)

# வசந்ததீபன் கவிதைகள்

## 01. நிசப்தத்தின் நுண் கணம்

மனிதன் மகத்துவமானவன் என்பது
மாறாத் தீராக் கனவு
இருளுக்குள் பூ
மேகத்துள் மின்னல்
கருவிழியைச் சுற்றி
வெண்விழிப் படலம்
மறக்கும் அன்பு
கடந்து போகும் நேசம்

காற்றில் புற்கள்
முறிந்து போகாது
எதிரே சாவு வீடு
கதவுகளை திறக்க முடியவில்லை
ட்ரம்பெட்டிலிருந்து
துக்க வெள்ளம் இசையாய்
பாய்ந்து கொண்டிருந்தது

பறித்த பூக்களிலிருந்து
பிணநாற்றம் வீசுகிறது
காம்புகளிலிருந்து உதிரம் வழிகிறது
அழுகை காற்றில்
அனலாய் தெறிக்கிறது

முற்போக்கு பிற்போக்கு
தற்போக்கு புறம்போக்கு
போக்குகள் பலவிதம்
கண்ணாடிச் சில்லுகள்
வெயிலில் பிரகாசித்தன
கன்னங்களில் கண்ணீர்த் துளிகள்
சேம்பிலைத் தண்ணீராய் பளபளத்தன

சிதறிப்போனது
பிஞ்சு இருதயம்
வலியைப் பற்றிப் பேசாதீர்கள்
வலி நிவாரணிகளைப் பட்டியலிடுங்கள்
வலியால் குமைந்து
போயிருக்கிறது நெஞ்சம்.

## 02.கனவுகள் மெய்ப்படட்டும்

காலங்கள் இனிமை பூக்கட்டும்
இன்றும் என்றும்
இன்பமே உடன் வரட்டும்

அவளை மனுசியாய் நினைக்கவில்லை
அவளை பெண்ணாய் நடத்தவில்லை
அவள் அவனை ஆணாய் அல்ல
சவமாய் மதிக்கிறாள்

இவனை அவன் காலை வாரினான்
அவனை இன்னொருவன் வீழ்த்தினான்
எவனுக்கும் இல்லை
வெற்றி நிரந்தரமாய்

மழை வருகிறது
வெயில் வருகிறது
பிறப்பு வருகிறது
மரணமும் வருகிறது.
அலைகடலில் சிறுபடகு
அல்லாடும் பெருங்கனவு
அகப்படுமா?

தொலைவான புது வாழ்வு
வாதைகள் நீங்கட்டும்
சாதனைகள் நிகழட்டும்
சண்டமாருதமே எழட்டும்

சிறுமி சீட்டியடிக்கிறாள்
சிட்டுக்குருவி கீச்கீச்சென்கிறது
களிப்புப் பாடல் ஒலிக்கிறது

நதியில் பூக்கள் மிதக்கின்றன
சந்தங்களை நீரலைகள் இசைக்கின்றன
சந்தோஷங்களைப் பாடியபடி
நதி பயணிக்கிறது.

பழச்சாற்றில் ஊறிய ரொட்டித்துண்டுகள்
பட்டினியோடு கனவுகள் திரிகின்றன
பூக்களின் நெடி மவுனத்தில் படர்கிறது
தனியாக நடந்து வருகிறாள்
வெறி நாய்கள் அவளை மறித்துக் கடிக்கின்றன
காமிரா ஒன்று படம் வரைகிறது.

# காகிதக் கடிதங்கள்

எங்கே அந்த அழைப்பிதழ் கடிதங்கள்?
எங்கே அந்த தூதுக்கடிதங்கள்?
எங்கே அந்த வாழ்த்துக்கடிதங்கள்?
எங்கே அந்த காதல் கடிதங்கள்?
எங்கே அந்த பேனா நண்பர்களின் நேசக் கடிதங்கள்?

காணாமல் போய்விட்டதா?
இல்லை நிச்சயமாக அவைகளுக்கான
மதிப்புக்கள் மறுக்கப்பட்டு எழுதப்படாமல்தான்
போய்விட்டது.

அன்று திருமண அழைப்புகள் கடிதங்களாக பரிமாறப்பட்ட காலமது.
ஆனால், இன்றைய திருமண அழைப்புக்கள் எல்லாம் உறவுகளை
இணைய உலகில் தொலைத்து தொலை தூர தொலைபேசிகளிலே
அழைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு அரசர்களின் கோரிக்கைகளும் தூதுச்செய்திகளில்
அனுப்பப்பட்ட பாரம்பரியம் மறைத்தொழிக்கப்பட்டு இன்று ஈமெயில்
என்னும் மின்னஞ்சல் மூலமாக மின்னில் மிதக்கவிடப்படுகின்றது...

வாழ்த்துக்கூறிய பல கடிதங்கள் இன்றும் கூட நம் வாழ்வில் கடிதம்
என்றால் இப்படி தான் இருக்கும் என இன்றைய நவீன
கலாசாரத்தவர்களுக்கு உதாரணம் காண்பிப்பதற்காக சிலரின்
நினைவகங்களில் பாதுகாக்கப்படுகின்றது.

காதலுக்கான முதல் சந்திப்புக்களையும், காதலின் காதலினது
சித்தாந்தங்களையும், ஏன் காதலையும் கூட அன்று கடிதங்களே
அழகாக்கியது.

இன்றும் கூட கடிதங்கள் உயிருடன் தான் இருக்கின்றன. எதற்காக
என்றால் தவிர்க்க முடியாத சில அரச தேவைகளுக்காக...

**ஆஷிக் ஹூசைன்**
**ஹெம்மாதகம.**

பௌஸான் முகைதீன்

# அதிபர் என்னும் ஆலமரம்

ஒழுங்கின்றி கிடக்கும்
மரங்களின் சாம்ராஜ்யம்
காடு என்பேன்....
ஒழுங்கின்றி கிடக்கும்
மனிதர்களின் ராஜ்ஜியம்
சமூகம் என்பேன்...

சமூகத்தை செதுக்கவல்ல
சிற்பி என்றால்
பள்ளி என்பேன்....
பள்ளிக்குள் பெரிய மரம்
அதிபர் என்பேன்

அதுதான்
அதிபர் என்னும் ஆலமரம்
வகிபாகம் என்னும்
விழுதுகள் விட்டு
விசாலித்து நிற்கும்
பெரிய மரம்

மாணவர், ஆசான்
ஊரவர், பெற்றோர்
யாவரும் ஒதுங்க
கல்வி நிழல் கொடுக்கும்
பள்ளியின் பெரிய மரம்
சிறு தூறலாய், மழையாய்
காற்றாய், பெரும் சூறாவளியாய்
எதிர்ப்புகள் வந்த போதும்
தலைமைத்துவ பண்புகளால்
சாய்ந்து போகாத
சரித்திர மரம்...

கிளியும் புறாக்களும்
காகமும் குயிலும்
எது வந்தமர்ந்தாலும்
நிழல் கொடுத்து
இடம் கொடுத்து
உணவூட்டி, உணர்வூட்டி
வாழ்வுக்கு, வழியமைக்கும்
இந்த மரம்

வவ்வால், கழுகு போல்
வஞ்சகர்கள் வந்த போதும்
வாரி வரவழைத்து
வழிப்படுத்தும் நல்ல மரம்...

வளங்களை நிர்வகித்து
வாழ்வது மட்டுமல்ல
நம்பி வந்தோரையும்
வாழ வைக்கும்
வல்ல மரம்...

சொல்லால் செயலால்
ஏன் பொல்லால் கூட
அடிவந்த போதும்
கிளை ஒடிந்துபோகாது
பண்புகளால் கிளை பரப்பி
நிற்கும் பெரிய மரம்
அதிபர் என்னும்
ஆலமரம்....

மரம் என்பது
அஃறிணை அல்ல
உயர்திணை தான்
என்றுரைத்த
கவிக்கோவின் கவி வரிபோல்
அதிபர் என்னும் ஆலமரம்
ஆண்டாண்டு காலம்
புகழோடு நிழல் கொடுத்து
நீடித்து நிலைக்கட்டும்.

# இரவுகளைத் திருடாதீர்கள்



ஹிஜாஸ் அகமட்
சாய்ந்தமருது

இதயம் இருளாகிவிட்டதென்று
இரவுகளில்
நீங்கள் வடிக்கும் இந்தக்
கண்ணீர்
இங்கு யாருக்கும்
தெரிந்துவிடப்போவதில்லை..

மனம் வருந்தி நீங்கள்
அழுவதினால் மட்டும்
இந்த மனித துரோகிகள் –
நண்பர்களாகவும்
எதிரிகள் –
உறவினர்களாகவும்
ஏமாற்றுக்காரர்கள் –
நேசத்தவர்களாகவும்
ஒருபோதும் மாறிடப்
போவதில்லை..
அம்பும் வில்லும்
கொன்றதற்காய்
அழுதுகொண்டிருக்கறீர்கள்,
அங்கே எய்தவன் இன்னும்
நிம்மதியாய் தானே
உறங்கிக்கொண்டிருக்கிறான்?

உங்கள் மகத்தான
கண்ணீரை
மதிப்பேயற்ற
ஏமாற்றத்திற்கும் இழப்பிற்கும்
வீணடிக்காதீர்கள்..

இரவுகளைத் திருடாதீர்கள்.
இதயம் இருளாகிவிட்டதென்று
இரவுகளில்
நீங்கள் வடிக்கும் இந்தக்
கண்ணீர்
உங்களுக்காய் விழித்திருந்த
கண்களை ஒருநாள்
குருடாக்கி விடும்.

மென்பனி

# மீதமிருக்கும் இறந்தகாலம்

என் முன்னாள் காதலன்
அவன் திருமணத்தின் பின்னரும்
என்னைத் தேடி வந்து பேசினான்,
எங்களது பழைய காதலுக்காக,
பழகிய நாட்களுக்காக மீண்டும்
மீண்டுமாய் வருந்தினான் என்று
யாரும் யாருக்கும்
உங்கள் வாழ்வில் மீண்டுமொரு
வாய்ப்பளிக்காதீர்கள்.

அவர்கள் மெய்யாகவே
நம் காதலைத் தொலைத்திருந்தால்,
கட்டியவளின் குறைகளைச் சொல்லி
நம்மை நினைவுபடுத்த மாட்டார்கள்.
எல்லா வகையிலும் நிறைவான மகிழ்ச்சியிருந்தும்,
உன்னை எங்கோ நான் இழக்கிறேன்
என்று வருந்துபவர்கள் அரிதிலும் அரிது.



விட்டுப் போன பின் எப்போது,
எப்படி, எந்நிலையில் வந்தாலும்
உங்கள் காதலனுடன்
முன்னாள் எனும் சொல்லை
சேர்க்க மறந்தே விடாதீர்கள்.

எம் வாழ்வை விட்டு நீங்கியவர்கள்
பின்னாளில் எவ்வளவு வருந்தித் தொலைத்தாலும்,
நாம் இழந்த இனிமைகள் ஒன்றும்
திரும்பவும் வாய்க்கப்போவதில்லை.

அவர்கள் முன்னாள்
காதலர்களாகவே இருந்து கொள்ளட்டும்.
இப்போது அவர்களுக்கும்,
எனக்குமிடையில்
இறந்த காலம் மாத்திரம் தான்
மீதம் இருக்கிறது .
வேறெதுவுமில்லை.

---

ஒலுவில் எஸ்.முஸம்மில்

# சுதந்திர நிறம் சிவப்பு



மண்ணெல்லாம் மயான பூமி
மரித்தெழுந்து நிற்கிறது
மனத் திடத்தின் உறுதி.

பெண்ணென்ன பிள்ளையென்ன
கொன்றொழிக்கும் அரக்கனுக்குக்
கண்ணொரு கேடோ கயவனுக்கு.

அல்லாடும் அகதி வாழ்விலும்
அல்லாஹ் துணையென்ற
அரனே காவலென அனுதினமும்.

பொல்லார் சூழ்ச்சியிலும் திடமாய்ப்
புகழோங்கி உலகினிலே பலமாய்
நல்லார் வழிநடக்கும் போராளிகள்.

அத்தியும் செய்த்தூனும் அழகாய்ப்
பூத்த மண்ணில் இன்று
ஆங்காங்கே சஹீதுகள் பூத்திருக்கு.

சாமுக்கு வெற்றியெனச் சான்றிட்ட
சாந்த நபி வாக்கில்
சற்றும் தளர்வின்றிப் போராட்டம்.

சுதந்திரம் வெட்டுண்டு நிற்கிறது
செங்குருதி வடிகிறது மண்ணில்
வீழாத கொடியேந்தி வீரம்.



# “சீயட தொளகாய்”

**தௌபீக் முஹம்மது நவீத்**
**புல்மோட்டையூரான்**

கெம்பஸ் லீவு விட்டா போதும் ஊருக்குப் போறது புதுசு இல்லயே ஆகையால் பெற்றா (கொட்டுவ) சந்தை வழியாக இரு பக்கமும் பராக்கு பாத்துட்டே நடந்து SLTB பஸ்லதான் போறது வழக்கம்; இன்றும் அப்படியே நடந்து சென்றேன். ‘‘போட்டு இருந்த சேட்டில் பாதி தேய்ந்து விடும்’’ அந்த அளவிற்கு ஒருவரை ஒருவர் நெருக்கிக் கொண்டே கடந்து செல்வார்கள் அது வழமை தான்.


அங்கே பலரும் பல மெட்டுக்களில் தங்களது விற்பனை பொருட்களை கூவிக் கூவி விற்பனை செய்யத் துடிப்பார்கள். அதில் பிரதானமானது ‘‘லாபாய்’’ ‘‘லாபாய்’’ என்ற வார்த்தைகள் எப்போதும் காதில் குத்திக் கிழிக்கும் எல்லாம் கேட்டு சலிப்படைந்தவனாய் நடந்து கொண்டிருந்தேன்.

‘‘புத்தா ரம்புட்டான் சீயட தொளகாய்’’ அங்கே உருக்கமான ஒரு குரல், கம்பீரமான ஒரு குரல், வைராக்கியம் நிறைந்த ஒரு குரல் அந்த குரலின் சொந்தக்காரியின் தோற்றம் இந்தக் காட்சியை கண்ட பிறகு எல்லோரையும் போல என்னால் அந்த உருவத்தைக் கடந்து செல்ல முடியவில்லை நின்று கொண்டேன். வேறு எதையும் கேட்கவில்லை நூறுரூபாய் கொடுத்து ரம்புட்டான் வாங்கிக் கொண்டேன் உடனே அந்த தாயின் முகத்தில் ஆயிரம் விளக்குகள் பிரகாசிக்கும் ஒரு புன்னகை ஒன்றைப் அந்த புன்னகையில் ஆயிரம் அர்த்தங்களைக் கண்டு கொண்டேன்.

தான் பெற்று வளர்த்த மகனோ மகளோ கைவிட்ட பிறகும்கூட சோர்ந்து போகாமல் நெஞ்சில் வைராக்கியத்தோடு எழுபது எழுபத்தைந்து வயது இருக்கும் இந்த வயதிலும் நின்றபடி தடி ஒன்றை ஊன்றிக் கொண்டு மற்றைய இளைஞர்களை விட தனித்துவமான குரல் ஓசையில் தனது ரம்புட்டானை விற்பனை செய்வதற்காக போராடிக் கொண்டு இருக்கும் அந்த தாயின் வலிமையோடு இருக்கும் வலியை கண்டு கொண்டேன் அந்த இடத்தை விட்டு என்னால் நகர முடியவில்லை கண்கள் கலங்கியது இருந்தும் நானும் புன்னகைத்து விட்டு நகர்ந்து சென்றேன்.

வேறு ஒன்னுமில்லை, அந்த தாயின் வயதிற்கு ஆயிரம் வலிகள் இருந்தாலும்கூட விடாமுயற்சியோடு போராடும் போது நாம் எல்லாம் எம்மாத்திரம் வலிகள் எல்லாம் நம்மை செதுக்குவதற்கே மாறாக முடக்கிவிட அல்லவே பெற்றோரை போற்றுங்கள் உங்களுக்கும் பிள்ளைகள் உண்டு முதுமை உங்களுக்கும் உண்டு நாளை இதே நிலை தான் உங்களுக்கும்...

***(அனுபவப்பகிர்வு)***



# மனித உளவியல்

**ஸைபா கானம் முகம்மட் றாபி**
(Dip.in.psych) **பாலமுனை.**

இன்றைய நூற்றாண்டில் விஞ்ஞானம், தொழிநுட்பம் ஆகிய துறையில் எவ்வளவுதான் வளர்ச்சி கண்டிருந்தாலும் இன்றைய காலத்தில் ஒரு மனிதனின் தனிப்பட்ட சொந்த வாழ்க்கையில் ஏற்படும் துன்ப துயரங்களையும், மன அமைதி இன்மையும் உள மற்றும் நடத்தைக் கோளாறுகளும் அதிகரித்த நிலையிலேயே உள்ளது. இந்த விஞ்ஞான யுகத்தில் மனித உளவியலுக்கான சரியான நோக்கத்தை நிவர்த்தி காண முடியாமல் உள்ளது.

அன்பு, பொறுமை, மகிழ்ச்சி, சுய மதிப்பு, சமூக ஒழுக்கம் போன்ற மன நிறைவான வாழ்க்கையை அமைக்க முடியாமல் மனநலம் குன்றி உள்ளார்கள்.

உளவியல் எனும் போது ஆங்கிலத்தில் psychology என கூறுவது உண்டு. அதில் psyche (சைகி), Logos (லோஜஸ்) என்றும் கிரேக்க சொல்லில் பிறந்தது. சைகி என்பது ஆன்மாவும், லோஜஸ் என்பது அறிவியலும் ஆகும்.

உளம் என்பது அறிவியலினூடாக அறிய முடியாத ஒரு விடயம். உளவியலானது மக்கள் தன் நடத்தை பற்றியும் பிறர் நடத்தை பற்றியும் கூறும் போது தெளிவு பெற்றுக் கொள்ள முடியும்.

அறிவியலாளர்களால் உளவியலுக்கு பல வரையறைகள் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் ஒரு மனிதனின் நடத்தையை கொண்டு தான் உளவியலை அறிந்து கொள்ள முடியும். உளவியலானது ஒரு மனிதன் பிறந்து அவன் மண்ணில் மடியும் வரை அவனது ஒவ்வொரு பருவத்தினாலும் அறிந்து கொள்ள இயலும். உளவியலை பல பிரிவாக பிரித்தும் காண இயலும். ஆனால் இன்றைய காலத்தில் மனித உளவியல் மிக முக்கியமான ஒன்றாகும்.

மனித உளவியல் அவர் அவரின் நடத்தையை வைத்து உணரக் கூடிய ஒரு வகை பண்பு. உளவியல் இயல்பான மனிதர்களிடம் நிகழும் உளநடத்தை மற்றும் உளச் செயல்கள் பற்றி ஆராய்கிறது. இவ்வாறு அறிந்து அவர்களுக்கு ஏற்பட்டுள்ள உளக்கோளாறுகள் மற்றும் மனநோய்க்கான சிகிச்சைகளும் செய்யக் கூடிய முறையில் இன்றைய மருத்துவத் துறை காணப்படுகிறது.

ஒவ்வொருவரின் உள்ளமும் பல வகையான மனக்கோளாறில் உள்ளது. ஒவ்வொருத்தரினதும் உள்ளமும் வெவ்வேறு வகையான உளவியல் மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலைமையே ஆகும். அவர்களது உள்ளம் வெவ்வேறு உளவியல் பிரச்சினைகளிலும் வேறுபட்டதாக அமையும். அவர்களது திறன், மனப்பாங்கு, சுயசிந்தனை இவ்வாறான பல விடயத்திலும் மாற்றம் காணக்கூடியதாக இருக்கிறது.

மனநோய், மனம் குன்றிய, மனக் கோளாறு உடையவர்களை கண்டு பிடித்து அவர்கள் எவ்வாறான நிலைமையில்

உள்ளவர்கள் என்பதை அறிந்து அவர்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்பளித்தவாறு அவர்களின் பக்கம் அவர்களுடைய ஒவ்வொரு பேச்சிற்கும் முக்கியத்துவம் அளிக்கும்போது அவர்களுடைய மனநிலையை நம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். அப்போது அவர்களின் உளவியல் சார் பிரச்சினைக்கு எம்மால் தீர்க்கக்கூடியவாறும் இருக்கும்.

இவ்வாறான உளப் பிரச்சினைக்கு உள்ளாவதன் காரணம் யாதெனில், அவர்கள் தன்னுடைய குடும்பத்தை இழந்தவராகவோ, குழந்தையை இழந்தவராகவோ, கணவன் சண்டை சச்சரவு செய்ததாலோ அல்லது கணவன் விவாகரத்து செய்ததாலோ அல்லது தனிமையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவராக இருந்ததாலோ மனஅழுத்தங்களிற்கு உள்ளாகி அவர்களாகவே அவர்களை மறக்கிறார்கள். நாட்டில் ஐம்பது சதவீதமானோர் இவ்வாறான மனநிலை குன்றியவர்களே.

இத்தனை பிரச்சினைக்கும் சரியான தீர்வே மனநோய்க்கான மருத்துவத்தை நாடுவதால் தீர்த்துக் கொள்ள வழிவகுக்கும். ஆனாலும் அவர்களோடு நல்ல உறவொன்றை கட்டியெழுப்புவதன் ஊடாகவும் குறைத்துக் கொள்ள முடியும் என்பதே நியதி.

---

# மனித மகத்துவம்



**காத்தான்குடி றுஷ்தா**

மனிதமெனும் மகிமை
மண்ணிலே
மறைந்துபோச்சு
தேடியும் கிடையாமலே
துளியுமின்றி
தொலைந்துபோச்சு!

கண்முன்னே கோர
நடத்தைகள்
கயவரால்
அரங்கேற்றமாச்சு
சின்னஞ் சிறிய
பிஞ்சுகளும்
சுக்குநூறாய் சிதைந்து போச்சு!

பெற்றெடுத்த உறவே
பாரமாய்ப் போச்சு
முதியோர் இல்லங்களே
தஞ்சமென்று ஆச்சு!
மானிடரின் நெஞ்சம்
மதி கெட்டுப் போச்சு
மோகத்தில் எல்லாமே
பாழாகிப் போச்சு !

உயிர்களின் மதிப்பு
அறியாமலே போச்சு
சந்தியிலே போட்டு
சரித்து வீழ்த்தியாச்சு!
உதவும் குணமோ
உயிரற்றுப் போச்சு
உள்ளன்பு வைத்தும்
உபத்திரமாய் ஆச்சு!

அயலாரைத் தூசித்தல்
அடைமொழியாய்ப் போச்சு
அசல் எது நகல் எது
அறிவதும் கஷ்டமாச்சு!
இரக்க உணர்வோ
இல்லாமல் போச்சு
ஈகை குணமும்
இல்லை என்றாச்சு!

மனங்களில் மனிதம்
மரணித்துபோச்சு
திரும்ப விதைத்தே
திருத்த வேண்டியாச்சு!
மகத்துவம் பேணுதலே
மனித தேவையாச்சு
மனிதனாய்த் திகழ
மனம் தேவையாச்சு

# கீறலுக்கு வாழ்த்துக்கள்!

கீறல் சஞ்சிகையே - உனது
கூறல் அத்தனையும் - மனதில்
ஆறுதல்  தருகிறது
ஆற்றலும் வருகிறது

காலாண்டு சஞ்சிகையாய் - உனைக்
காலமெல்லாம் காணவேண்டும்
கருத்தாழம் மிக்கதொரு
கலைப்பொக்கிஷமாய்  பேணவேண்டும்

அகிலத்து மக்களெல்லாம்
ஆக்கங்களை வாசித்து
மகிழ்ச்சியால் நிறைய வேண்டும்
மனக்கவலைகள்  மறைய வேண்டும்

கவிதைகளை கட்டுரைகளை
கதைகளை வெளிக்கொணர்ந்து
கவிஞர்களை கலைஞர்களை
கௌரவிப்புச் செய்கின்றாய்

இலைமறை காயாக
இருளுக்குள் இருக்கின்ற
இலக்கியத் திறமைகளை
இகத்தினிலே பரப்புகின்றாய்

இலக்கியத்தின் திறமைகளை
இளைய தலைமுறைக்கும்
இன்றியமையாக் களமமைத்து
இடமளித்து இணைக்கின்றாய்

சொல்லவேண்டி இருப்பதனை
சமூகத்திற்குச் சொல்வதற்கு
பல வழிகளை உள்ளடக்கி
பாதை திறந்து கொடுக்கின்றாய்

பகீரதப் பிரயத்தனம் செய்து
பாரபட்சம் இல்லாமல்
பிரபல்யப் படுத்தியதில்
புகழ்தேடிக் கொடுக்கின்றாய்
இலக்கியப் படைப்பெல்லாம்
இதயத்தின் வெளிப்பாடு
தொலைத்திடும் துயரங்களை
தாங்கிவரும்  வரிகளோடு

தகுதி தராதரம் பார்க்காது
திறமைக்கு இடமளித்து
ஆக்கங்கள் அத்தனையும்
அரங்கேற்றும் சஞ்சிகையே

கடல் கடந்து வாழ்வோர்க்கும்
களமாக  அமைந்திருந்து
இடங்கொடுத்து இணைப்பதுவும்
ஈடில்லாச் சேவையதே

வரிக்குமேல் வரியெழுதி
விருது  பெறும் காலத்தில்
சரித்திரம் படைத்திருக்கும் - கீறல்
சஞ்சிகையை உள்ளத்தால்
வாழ்த்துகிறேன்

அயலவர்களின் ஆக்கங்களை
அழகாகப் பிரசுரித்து வெளியிடும்
சுய நலமே இல்லாத - கீறல்
சஞ்சிகையை சிறப்பாக வாழ்த்துகிறேன்

மீறல்கள் இல்லாமல்
மக்களுக்குப் புரியவைக்கும்
கீறல் சஞ்சிகையே - உனை
கௌரவித்து வாழ்த்துகிறேன்

பிரதம ஆசிரியர்
பாயிஸ் அவர்களுடன்
ஆத்ம திருப்திக்காய்
அரும்பணியாற்றுகின்ற
அனைவரையும் வாழ்த்துகிறேன்

வையகம் உள்ள வரை
வாழ்கவென வாழ்த்துகிறேன்

**கவிஞர் ஜனதா லத்தீப்**

# முர்ஷிதா ஷிரீன் கவிதைகள்

**(சம்மாந்துறை, இலங்கை)**




எதை பார்க்கிறோம்..
யாரை பார்க்கிறார்
என்பதான பல கேள்விகள்
எழாமலில்லை.
விழி பிதுங்குவதாய்
விடை கிடைத்தும்
என் ஓரப்பார்வை ஓயவே இல்லை

ஒழிந்து கொண்டு
பூப்பறிப்பதை எண்ணி
முகத்தை முக்காடிட்டு
முத்துக் குளித்தல்
கறுப்பிற்கு கைவந்த கலையாக இருக்கும்
காட்டிக் கொள்ளாமல்
கடிந்து கொள்ளல்
ராஜ தந்திரத்தின்
இன்னுமொரு யுக்திதான்.

யுகம் கடந்த உளறல்கள் ஒவ்வாமையாகி
கறுப்பு கண்ணாடியே
காவல் என
பிடிப்பில்லா சிநேகங்களுடன்
பித்தனாக பிரபஞ்சத்தில்
தலைக்கனம் தலைக்கேற
கெடுபிடியான
கிறுக்கலுடன்
எடுப்பெடுத்து இயம்புதல்
இன்னாரெனச் சொல்லும்
அகிலம் துறந்த ஆத்மாக்களின்
அடைவு கண்ட
இவ்வுலக நிதர்சனம்.

## மழையில் மறந்த காலங்கள்

கருமேகம் புடைசூழ இருண்டு
பளிச்சிடும் மின்னலால் வானம்
முழங்கிடும் போது
படகாய் பரிணமிக்கும்
வீசி எறியப்பட்ட
கடதாசிகள்.

மழையில் நனைந்தே
கடதாசி கப்பலுடன்
புழுதி வாசம்
நுகர்ந்து மகிழ்ந்த நொடிகள்
ஈரமாய் இன்னும் கொட்டிக் கிடக்கிறது
இதயத்தின் ஓரங்களில்.

உப்புக் கருவாடும்
செத்தல் மிளகாயும்
எண்ணையில் பொரியல் ஆகி
சுடு சோற்றோடு
சின்னவெங்காயம் சேர்த்துண்ட ருசி
நாவினிலதான் இருக்குது இன்னும்.

புதினா தேநீர்
கித்துள் கட்டியுடன்
பலசேதி சொல்லும்
இளமை கடந்த
இருப்பின் பக்கங்களில்
மழையில் நனைந்த
காலக் கிறுக்கலில்
அழியா பொக்கிஷமாய்
இன்னும் இவை அனைத்தும்.



# இதயமும் கருவுறும்...!

**பாத்திமா சில்மியா** (Rehna Writes)
**மாவனல்லை.**



கூடிக் கும்மாளமிட்டுக்
குதூகலிக்க வேண்டிய
திருமண வீட்டில் - அவள்
மட்டும் கூனிக் குறுகியவளாய்.

வைப்பிலிருக்கும் வலிகளும்
இறக்கை கட்டிப் பறக்கும்
சிநேகிதங்களின் ஒன்று கூடலில்
அவள் மட்டும் வாய்விட்டுப்
பேச அஞ்சியவளாய்.

வாய் நிறையப் புன்னகைத்து
வாழ்த்திட வேண்டிய
உறவினர் வீட்டு வளைகாப்பில்
அவள் மட்டும் தலை காட்டத் தயங்கி
மௌனத்தில் திளைத்தவளாய்.

தனித்திருக்கும் நாட்சுவருக்குள்ளும்
அவ்வெதிரொலிகளில்
சிக்கித் தவித்துக் கண்ணீரிலும்
பெரு மூச்சொன்றிலும்
அத்தனையும் முடக்கிக் கொள்ளும்
பெண்மையாய் அவள்.

இத்தனை பிரளயங்களும்
அவள் தாயெனும் அந்தஸ்தை
அடையத் தவறிய
ஒற்றைக் காரணத்தினால்.

நிஜத்தில் தாய்மையிழந்தவர்கள்
எவரெனில்
கடுகளவேனும் ஈரமற்று
ஈனமான சுடு சொற்களால் அவளை
நொறுங்கச் செய்யுமவர்களன்றி
முட்ட முட்டக் குனியும் அவளல்ல.

ஈரைந்து மாதங்கள்
கருவை சுமந்தவளுக்கு
பிரசவம் ஒரு நாளில் எனில்
கரு சுமக்கத் தவறிய அவளுக்கு
கடமையாய் தினம் தினம் பிரசவம் தான்.

---

# இச்சையுள்ள மச்சானுக்கு என் துயரச் சொல்லிருங்கோ...

**ரோஷான்.ஏ.ஜிப்ரி**

வயசு ஒழுப்பம் மூத்து தலப்பிள்ள
வாடி நிக்கு
வரன் ஒண்டத்தேடி மச்சான்
புறியத்துக்கு காத்திருக்கு
இளப்பாற இடம்தேடி இழவடிச்ச
உசிர் இரிக்கி
தலப்பாரம் கொறயிமெண்டு
தகப்பன் உளம் ஏங்கி நிக்கி

ஏழ வழித்தோன்றல் அதனால்
இல்லாமை தானிரிக்கி
வாழ வழி கேட்ட வண்ணம்
வாசலில புு+த்து நிக்கி

கையில் மருதோன்றி
கார்குழலில் கரு’’ மை’’
காத்து உயிரொன்று
கண்ணிருண்டு இதுதான் மெய்

நஞ்சை புஞ்சை நல்நிலங்கள்
நாவறண்டு காத்திருக்கு
வெஞ்சினமாய் வான் உயர்ந்து
வேகவச்சி பார்த்திருக்கு
சஞ்சலத்த நெனச்சா நெக்கி
சலிப்படக்க முடியிதில்ல

கொஞ்சநாளா மனம் கெடந்து
இருளடஞ்சி விடியிதில்ல...


நெஞ்சம் உருக நினைந்தழுதல்
தான் கெதியா...?
பஞ்சப் பொறப்புக்கு பரிதவித்தல்
வீண் விதியா.... ??
கொஞ்சம் இறங்கி மச்சான்
குலவிளக்கத் தூண்டிநீங்க
மஞ்சம் ஒளிரவேண்டி
மறந்திடாம மனசு வைங்க!

# பிரதி மீதான வாசிப்புச் செயன்முறையும் விமர்சனப் பார்வையும்

**- நப்லா அன்புடீன்**

பொதுவாக இலக்கிய வகையறாக் களை வாசிப்புச் செய்கின்ற முறைமை திறனாய்வாக, விமர்சனக் கண்ணோட் டமாக, ஆய்வுச் செயன்முறையாக மேற் கொள்ளப்பட்டு வருவது நோக்கத் தக்கது. காலத்திற்குக்காலம் கலை வடிவங்களிலும், இலக்கியத்திலும் மாற்றங்கள் ஏற்படுவது போல் பிரதி மீது முன்வைக்கப்படும் வாசிப்பு முறை மையிலும் மாற்றங்கள் நிகழ்ந்திருப் பதை அவதானிக்க முடியும்.

இது பிரதியினை வாசகன் எவ்வாறு புரிந்து கொள்கிறான் என்பதை அடிப்ப டையாகக் கொண்டது. எனது பாடசா லைக் காலத்தில் தமிழ் இலக்கியப் பாடப்புத்தகங்களில் ஒரு சிறுகதை அல்லது கவிதை ஒன்றைப் படித்த பின்னர் வழங்கப்படும் வினாக்கள் - 'இதிலிருந்து ஆசிரியர் கூற விளைவது என்ன?' என்பதாக அமைந்திருக்கும். இதற்கான விடையமைப்பு பற்றி ஏற்க னவே கற்பிக்கின்ற ஆசிரியர் கலந்து ரையாடியிருப்பார். எனவே, மாணவர் கள் அனைவரிடமிருந்தும் ஒரே மாதிரி யான விடையே எதிர்பார்க்கப்படும். படைப்பிலிருந்து மாணவர்கள் புரிந்து கொள்ளும் விடயம் பற்றிய சுதந்திரக் கருத்தியல் முன்வைப்பு மாணவர்களிட மிருந்து எதிர்பார்க்கப்படுவதில்லை. இது ஒரு வகையான ஒப்பித்தல் கல்வி முறைமையாக அமையும். ஆனால், சுயாதீன நிலையிலிருந்து வாசிக்கின்ற ஒரு வாசகனும் ஒரே வகையான பொருட்கோடலைத்தான் பெற்றுக்



கொள்கிறானா? என்ற வினா எனக்குள் எப்போதும் இருக்கும். இதற்கும் அப் பால் ஒவ்வொரு பிரதியாளனையும் தனியாகச் சந்தித்து, 'இந்தக் கவிதையில் அல்லது இந்தச் சிறுகதையில் நீங்கள் எதைக் கூற வந்தீர்கள்? என்று சொல் லுங்களேன்'. எனக்கேட்டுக் கொண்டி ருக்க முடியாது.

ஆக, எழுத்து, வாசிப்பு என எல்லாமே நுட்ப முறையினைக் கோரும் செயற்பாடுகளாகவே அமைகின்றன. ஏனெனில், மனிதன் தன்னோடும், பிறவற்றோடும் வாழ்ந்து கொண்டிருக் கின்ற, சிந்திக்கக்கூடியவனாக இருக் கிறான்.

நவீனகால அறிவு வளர்ச்சி, 'சிந்திப் பதையே மனித இருப்புக்கான ஒரே அங்கீகாரமாகக் கொள்கிறது'. பின் நவீனச் சிந்தனைப் பரப்பு மனித அறிவின் வன்முறையைக் கட்டுடைத்

தாலும், சிந்தித்தலின் மூலமான விளைவைப் புறக்கணிப்பதில்லை. முழுவதுமாகப் பார்த்தால் சிந்தனையின் விளைவே அனைத்துக் கோட்பாடுகளும், கருத்தியல்களும் என எண்ணத் தோன்றுகின்றது.

மரபார்ந்த முறையில் பல்வேறு வாசிப்பு முறையியல்கள் பிரதி மீதான வாசிப்பில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இங்கு வாசிப்பு முறை எனக்குறிப்பிடுவது பிரதி மீதான விளக்க அல்லது விமர்சனக் கண்ணோட்ட முன்வைப்பினையாகும். இது பேச்சு அல்லது எழுத்து மூலமானதாக அமைய முடியும். மரபார்ந்த வழிமுறையில் விளக்க ரீதியான முறைமை, ஒப்பீட்டு முறைமை, மதிப்பிடல் முறைமை, பாராட்டு முறைமை, பகுப்பாய்வு முறைமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும். ரசனை சார்ந்து அழகியல் அம்சங்களைப் பற்றிப் பேசும் முறையியலும் இதில் உள்ள டக்கம்.

இவைதவிர, விஞ்ஞான ரீதியிலான நோக்கு அணுகுமுறைகளும் பிரதி மீதான வாசிப்பில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதாவது, சமூகவியல் அணுகுமுறை,வரலாற்று அணுகுமுறை, உளவியல் அணுகுமுறை, மொழியியல் அணுகுமுறை, உருவவியல் அணுகுமுறை, அமைப்பியல் அணுகுமுறை, பின் - அமைப்பியல் அணுகுமுறை, மார்க்ஸிய அணுகுமுறை, பெண்ணிய அணுகுமுறை, இருப்பியல் அணுகுமுறை, சூழலியல் அணுகுமுறை, விம்பமைய அணுகுமுறை எனப்பலவற்றைக் குறிப்பிட முடியும்.

பிரதி மீதான வாசிப்பில் சொல்லப்பட்ட அதே கருத்தை அர்த்தம், அனுபவம் என எதுவும் மாறாமல் உள்ளதை உள்ளவாறு விளக்கம் (Interpretation) செய்வது விளக்க முறையியல். பிரதியொன்றின் தரம், சிறப்பு, சீர்மை பற்றிய முன்வைப்போடு ‘இது இத்தகையது’ என்ற ரீதியிலான மதிப்பீடு (Evaluation) மதிப்பீட்டு முறையியலாகும். பிரதியின் பண்பு, இயல்பு ரீதியான புரிதலுக்காக இரண்டு விடயங்களை ஒப்பிட்டு அதன் கருத்து நிலைகளைக் காண்பது ஒப்பீட்டு முறையியலாகிறது. பிரதி மீது எவ்விதக் குறைகளுமின்றி நிறைவான நோக்கில் முன்வைக்கப்படுவது பாராட்டு முறைமையாகிறது.

பிரதியின் பண்புகள், கூறுகளை ஒரு அளவுகோலைக் கொண்டு பகுப்பாய்வு (Analysis) செய்வது பகுப்பாய்வு முறைமையாகும். இதுவே கல்விப்புலத்தில் பயன்படுத்தப்படும் ஆய்வு முறையியல். ஒன்றில் பயன்படுத்தப்படும் கருத்துநிலைகள், உத்திகள், மொழி நடை, தொடக்கம் - முடிவு, வர்ணனை என அனைத்தையும் ஆய்வுக்குட்படுத்துவதாக இது அமையும். இவை பிரதியின் உள்ளடக்கம் சார்ந்ததாக அமைகின்றபோது உருவம் சார்ந்து அழகியல் (Aesthetic) பார்வையில் உவமை, உருவகம், தொனி, உணர்ச்சி என உள்ளார்ந்து நோக்குவதை அழகியல் முறைமையாகவும் கொள்ள முடியும்.

இவைதவிர, முன்தீர்ப்பின் அடிப்படையில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளவற்றைக் கருத்தில் கொண்டு ‘இது இதுதான்’ என்ற முடிவுகோளலுடன் ஒரு பிரதியை அணுகி அதனை அவ்வாறே ஒப்புவித்தல், உய்த்தறி அடிப்படையில் பிரதியாளனின் வாழ்வியலோடு, சூழ்நிலைகளோடுப் பொருத்தி பிரதியை வாசிப்புச் செய்யும் முறையியலும் மரபார்ந்த முறைமைகளாக அவதானிக்கப்படுகின்றன.

இந்த வரிசையில் விஞ்ஞான அணுகுமுறைகளின் துணைகொண்டு இலக்கியப் பிரதிகள் உருவாக்கப்படு வதும், உருவாக்கப்பட்ட பிரதிகளை அக்கண்ணோக்கில் ஆய்வு செய்வதும் ஆய்வாளர்களால் பின்பற்றப்பட்டும் வருகிறது. மனிதனது சமூக இருப்பு, சமுதாய உணர்வும் இலக்கியத்தின் வழி வெளிப்படுவதால் பிரதி உருவாக்கம், அதன் அர்த்தப்படுத்தல், சமூகப்பின் னணி, சமூக நிறுவனங்கள், சமூக உறவுகள், சமூக நிலைப்பாடுகள், சமூகக் குழுக்கள், பழக்க வழக்கங்கள், கலாசாரம், சமூகப் பிரச்சினைகள், சமூக மாற்றங்கள் என சமூகம் சார்ந்த நோக் கிலான வெளிப்பாடுகள் பற்றிய கண் ணோக்கு சமூகவியல் அணுகுமுறை வாயிலாக நிகழ்த்தப்பட முடியும்.

மேலும், வரலாற்றியல் ரீதியில் காலகட்டங்களை வெளிப்படுத்தும் இலக்கியங்களை வரலாற்று நோக்கில் ஆராய முடியும். பிரதிகளின் உளவியல் அம்சங்கள் தொடர்பில் உளவியல் கண்ணோக்கில் ஆய்வுக்குட்படுத்து கின்ற போது, பிரதியுருவாக்கத்தின் உளவியல் வெளிப்படுத்துகை, பிரதியா ளனின் சுய உளவியல் பின்புலம், பிரதிக்குள் வெளிப்படுத்தப்படும் உளவியல் பண்புகள் (அல்லது பாத் திரங்கள்), பிரதியின் தனிச்சிறப்புடைய சொற்பிரயோகம், காட்சியமைப்பு, இணைப்பாக்கம், மற்றும் வாசகனில் ஏற்படுத்தும் தாக்கம் என்பனவற்றை உளவியல் கண்ணோக்கில் பேசுபொரு ளாக்கும் முறைமையும் அவதானிக் கலாம்.

எத்தகையவொரு பிரதியும் மொழி யாலானது என்ற அடிப்படையில் மொழியியல் அணுகுமுறையானது ஒலி யியல், சொல்லியல், தொடரனியியல் என பல்வேறு தளங்களில் பிரதிச் செயற்பாட்டை அணுகுகின்றது. இத னைக் குறியியல் (Semiotics) ஆய்வு நோக்கிலும் புலப்படுத்தலாம். குறியிய லானது சமூகத் தொடர்பு முறையின் அடிப்படைக் கூறுகளான குறிகள், குறியீடு, அவற்றின் அர்த்த உருவாக்கம், கருத்தியல் உருவாக்கம், உட்கூறுகள் என்பற்றை ஆய்வு செய்கிறது. குறியி யலின் நவீன ஆரம்பம் சமூகக்கோட் பாட்டாளரும், சிந்தனையாளருமாகிய ஜோன் லொக்கில் தொடங்கிறது. குறிகள் என்பவை மனிதனால் உருவாக் கப்பட்டவை. இது குறி, குறியீடு (Code), கலாசாரம் என்ற மூன்று களங்களை உள்ளடக்கியது. இது எவ்வாறு பயன்ப டுத்தப்படுகின்றது என்பதைப் பொ ருத்தே இதன் அர்ததம் வெளிப்படு கிறது.

வேறுபட்ட குறியீடுகள் எவ்வாறு உருவாக்கம் பெற்று பயன்படுத்தப்ப டுகின்றது, என்பது பற்றியும் குறியையும் குறியீட்டையும் உருவாக்கும் தளமான கலாசாரம் பற்றியதுமான ஆய்வு குறியி யலில் இடம்பெறுகின்றது. இவ்வாறு குறியியல் பிரதி மீது முழுக்கவனத் தையும் செலுத்துகின்றது.

பிரதி என்பது குறியீடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு கலாசார அமைப்பு என்ற கருத்தும் உண்டு. இதில் ஆசிரியன் வாசகன் என்ற இரு தரப்பினர் பங்குபெறுவர். குறி பௌ திகம் சார்ந்ததாக இருக்கிறது. இதனை எம்மால் காண முடியும். இதன் புறஅமைப்பு மற்றும் மனம் சார்ந்த கருத்து (அகவயம்) என இரண்டு அம்சங்கள் இதில் காணப்படுகின்றன. இதனை மூன்று விதமாக நோக்க முடியும்.

1. உருவவாதக் குறியியயல் (Formal ist Semiology): புறஅமைப்பு கருத்தியல் பற்றி இது ஆய்வு செய்கிறது.
2. அறிகைக் குறியியல் (Cognitive Semiology): குறி எதனைப் பிரதிபலிக்கின்றது அல்லது வெளிப்படும் குறியின் அர்த்தம் பற்றியதாக அமைகிறது.
3. தொடர்புக் குறியியல் (Communication Semiology): பிரதிக்கும் இதனைப் பயன்படுத்துவோருக்கும் தொடர்புக் கருவியாக இது ஆய்வு செய்யப்படுகிறது.



குறியீடுகளும் இரண்டு வகைகளில் அமைய முடியும். அதாவது நடத்தைக் குறியீடுகள் (Behaviour codes), குறிப்பீட்டுக் குறியீடுகள் (Signifying codes) என இருவகைப்படுகிறது. பொதுவான விதிகளோடு அது எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் எனப்படுவது நடத்தைக் குறியீடு எனவும், சொற்கள், ஒலிகள், தொடர்கள் எவ்வாறு அதனை வெளிப்படுத்துகன்றது என்பது குறிப்பீட்டுக் குறியீடுகளாகவும் அமைகிறது.

இவ்வாறு குறியியலின் அடிப்படையில் ஆய்வு செய்யும் முறைமை பியர்ஸ், சசூர் போன்றோரிலிருந்து தொடங்கி ரோலண் பாரத்த, யாகப்சன், பக்தின் போன்றோரால் முன்னெடுக்கப்பட்டு வந்தது. மேலும் லெவிஸ்டிராஸ், லக்கான் போன்றோரும் மொழியியல் குறித்து வெவ்வேறு விடயங்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

இதன்பின்னர் அமைப்புவாத முறையியலில் பிரதி பற்றிய கண்ணோக்கு வலுப்பெற்றிருந்தது. அமைப்பு என்பது தூலமான ஒரு கட்டுமானத்தைக் குறிக்கிறது. இதன் பண்புகளுக்கும் பரிமாணங்களுக்கும் ஏற்ப இதன் உறுப்புக்கள் மாறுபடும்.

அமைப்பியலின் அடிப்படைகள் மூன்று வகைப்படும் என பூரணச்சந்திரனின் ‘அமைப்பியலும் பின் அமைப்பியலும்’ என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

1. சசூரின் மொழி பற்றிய கோட்பாடுகள்.
2. பல்வேறு கலாசாராங்களில் காணப்படும் அமைப்பாக்க உருவகங்கள், ஆகுபெயர்கள்: இவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் லெவி ஸ்டிராஸின் மானிடவியல் கொள்கைகள்.
3. ரஷ்யாவிலும், பிராஹா வட்டத்திலும் செயற்பட்டு வந்த உருவவாதம்.

(தொடரும்...)

# பட்டபின்னே வரும் ஞானம்

**ஹப்புதளை - வை.ஜெஸ்மின்**



கள்ளென்றும், கசிப்பென்றும்
காட்டுப்பக்கம் கால்கள் போகும்
ஊட்டுக்குள்ள நீ நடத்தும்
நாடகத்தில் சிக்குண்டு
நெருப்பான மழையால்
உன் வீட்டு அடுப்பெரியும்

குடி போதை
குடிசை மிதித்தே
குழிக்குள் தள்ளும்
வாய் வயிறு பிரிக்கும்
தலைகீழாய் உலுக்கும்
அன்பென்று பாடிய வீட்டில்
அனுகுண்டு பறக்கும்

கணவன் மனைவி
சண்டை சத்தம்
தூங்கும் சிசுக்களை
தட்யெழுப்பிச் சிரிக்கும்

அழுக்குக் கசிப்பு
ரத்தத்தில் கலக்க
உனக்குள் வெடிக்கும் மத்தாப்பு
சதையோட்டில் நரம்புகள் ரத்தமிறைக்கும்

மரணத்தோடுபோராடும் உடல்
களைத்துக்கிடக்கும்
ஈரலில் ஓட்டை என்றும்
கிட்னிகள் செத்துவிட்டதென்றும்
உறவுகளே உனை ஒரு நாள்
கைவிடும்

அச்சம் துக்கம் அவமானம் என்ற
பாழாய் போன
அனுபவமே பாதிச்சாவை
தந்துவிடும் அதில்
வாழ்வு எரிந்து சாம்பலாகி
உருக்குலைந்து சீரழிவாய்.

பொண்டாட்டி புள்ள பாசம்
பொல பொலன்னு
அழுது தீர்க்கும்
பட்டபின்னே வரும் ஞானம்
இழப்பின் பட்டியலை மீட்காது

# பருவத்து கனவுகள்



காலை இளம் சூரியனை மறப்பாள்
காலை கடந்து கற்பனையில் கிடப்பாள்
குடையிருந்தும் நனைவாள்
குளிரிலும் வியர்க்கிறது என்பாள்

பசியில்லையென உண்ண மறுப்பாள்
பருகிட பாசத்தை அள்ளிக்கொடுப்பாள்
காரணமின்றிச் சிரிப்பாள் அழுவாள்
சிறுது நேரம் பேச சொல்லி
காதலனை சிறைப்பிடிப்பாள்

மெல்லிசையில் மெய்யுருகிப்போவாள்
மேகமதில் கூந்தல் விரித்து
மெல்ல இவள் கரைவாள்.

கடல் மணலில் பெயரெழுதி
கண்டு ரசித்திடுவாள்
அலையழிக்க தடம் பார்த்து
கலங்கியவள் நிற்பாள்

கையோடு கை கோர்த்து
கன தூரம் நடந்திடுவாள்
காலன் அழைக்கும் வரை
கண் திரையில் களமமைப்பாள்.

கையறுத்து காதலென்று அவன் சொல்ல
கதறி அழுது துடிப்பாள்
தேம்பித் தேம்பித் தெம்பில்லாமல்
திடுக்கிட்டு விழிக்கையிலே
கண்டதெல்லாம் கனவென்று சிரிப்பாள்.

**கவிநேசகி லத்தீப் நிஸ்மியா,**
**ஒலுவில்.**

# கீறலோடு நீங்களும் பயணிக்க...

கீறல் கலை இலக்கிய சஞ்சிகையோடு நீங்களும் இணைந்து பயனிக்கலாம்.

உங்களின் திறமைகளுக்கு களம் தர கீறல் காத்திருக்கிறது. கவிதை, சிறுகதை, கட்டுரைகள் [இலக்கியம், அறிவியல், தொழினுட்பம், உளவியல், சமூகப் பிரச்சினைகள்] பக்திகள், நூல் அறிமுகம் இவ்வாறு சகல துறைகளிலும் நீங்களும் எழுத லாம். உங்களது படைப்புகளை **075 823 8199** எனும் வாட்ஸ்அப் மூலமாக நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

கீறல் சஞ்சிகையை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள நீங்கள் விரும்பினால் ஆண்டுச் சந்தா தாராக இன்றே இணைந்து கொள்ளுங்கள்.

**பிரதி ஒன்றின் விலை ரூபா.** 350/-
**தபால் செலவு ரூபா.** 50/-
**வருடத்திற்கு 04 இதழ்கள்**
**ரூபா.** 400/- X 04 =
**மொத்தம் ரூபா.** 1600/-

வருடச் சந்தா ரூபா. 1600/- யினை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச் சீட்டினை **075 823 8199** எனும் வாட்ஸ்அப் இலக்கதிற்கு அனுப்பி வைக்கவும்.


**A.A.M.FAIZ**
**Account No : 92351549**
**Branch : Bank of Ceylon, Oluvil**

மேலதிக விபரங்களுக்கு **0776619949** என்ற மொபைல் இலக்கத்தோடு பிரதம ஆசிரியரை தொடர்பு கொள்ளலாம்.

*அன்புடன்,*
*பிரதம ஆசிரியர்.*

# ஒரு பெண்ணின் ரகசியம்

## (அனைத்து ஆண்களும் படிக்க வேண்டிய தகவல்)



ஒரு நாள், புதிதாகத் திருமணமான ஒரு இளைஞன் தன் மனைவியைக் கோவமாக திட்டி கத்திக் கொண்டிருந்தான், அவனுடைய தந்தை அவனை அழைத்து, 'நாம் போடும் கூச்சல் மற்றவர்களை பயமுறுத்தும். ஆனால், உன் மனைவியை அல்ல.' என்றார்.

உங்கள் அச்சுறுத்தல்கள் அவளை பலப்ப டுத்துகின்றன. ஒரு பெண் அச்சுறுத்தப் பட்டால், அவள் அடக்கப்படுகிறாள் என்று பெரும்பாலான ஆண்கள் நம்புகிறார்கள், ஆனால், பெண்கள் அச்சுறுத்தப்படும்போது வலிமையாக மாறு கிறார்கள். ஒரு ஆண் தன்னை அச்சுறுத்தி கத்தும்போது ஒரு பெண் அமைதியாக இருக்கலாம். ஆனால், அவள் உள்ளுக்குள் அமைதியாக இல்லை. அவள் ஆணின் பலவீனத்தை மதிப்பிடுகிறாள், அவனை எப்படி அடக்குவது, என்று மதிப்பிடுகிறாள்.

ஒரு பெண்ணின் இதயத்திற்குள் நுழையும் வழி, அவளை அச்சுறுத்தி அடிபணியச் செய்ய முயற்சிப்பதல்ல என்பது ஆண்களுக்குத் தெளி வாக புரிய வேண்டும்.

காதலும் அன்பும் மட்டுமே பெண்களை பலவீ னமாக்குகிறது. நீங்கள் ஒரு பெண்ணை உண்மையாக நேசித்து அதைக் வெளிக் காட் டினால், அவள் உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லாமல் அன்புடன் இருப்பாள். ஆனால், ஒரு பெண் தான் உங்கள் பொம்மை போல் இருப்பதை உணர்ந்தால், நீங்கள் அவளைப் பயன்படுத்த விரும்புகிறீர்கள் அல்லது நீங்கள் ஆதிக்கம் செலுத்துகிறீர்கள் அலல்து கட்டுப்படுத்துகிறீர்கள், என்றால் தன்மானம் அவளை ஆக்கிரமிக்கிறது. அவள் உடல் ரீதியாக உங்களுக்கு எதிராக நிற்காமல் இருக்கலாம், ஆனால், அவள் மன ரீதியாக உங்களுக்கு எதிராக போய்விடுவாள். ஒரு நாள், நீங்கள், அவளும், குழந்தைகளும் உங்களை அவர்களின் சொற்களைப் பின்பற்றும்படி கட்டாயப் படுத்துவதைப் பார்ப்பீர்கள் அல்லது அதை தாங்க முடியாமல் விரைவாக இறந்து விடுவீர்கள்.

பல வருடங்களுக்கு முன் கணவன் அடித்துக் கொண்டிருந்த அந்த பெண்கள் இன்று குழந்தைக ளுடன் வாழ்க்கையை மகிழ்ச்சியாக கழிக்கிறார்கள். தாய்மார்களுக்கு குழந்தை களின் அனு தாபம் இருக்கிறது, ஆண்கள் கடைசியில் தனி மையில் தவிக்கிறார்கள்.

ஆண்களுக்கு எதிராக எப்படி வாழ்வது என்பது பெண்களுக்குத் தெரியும். ஆண்களில் உள்ள 'சிங்கம்' பெண்களை பயமுறுத்துவதில்லை அல்லது அவர்களை உங்களுக்கு அடிபணியச் செய்யாது, அது ஒரு பெண்ணை வெல் வது காதல் மட்டுமே, கட்டாயப்படுத்துவதோ அல்லது அச்சுறுத் துவதோ அல்ல. சக ஆண்களை அடக்கலாம், ஆனால் உங்கள் மனைவியை அல்ல. பெண்களுக்கு இயற்கையாகவே வலிகளைத் தாங்குவது எப்படி என்று தெரியும்.

அவர்களுக்கு தைரியம் இல்லை என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் தான் முட்டாள். ஆண்களிடம் இல்லாத தைரியம் அவர்க ளிடம் உள்ளது.அச்சுறுத்தல்களை விட அன்பைக் காட்ட வேண்டும், உங்கள் மனை வியை நேசிக்கவும்!

உங்கள் மனைவியை நேசிப்பதற்கான இந்த சூத்திரம் அவளை வெல்ல உதவும். ஒரு பெண் நேசிக்கப்படும்போது, அவளு டைய அனைத்து தைரியத்தையும் உடைத்து, அவள் உங்களை கைகளில் தாங்குகிறாள். ஒரு பெண் தன்னை நேர்மையாக காத லிக்கும் ஒரு ஆணுடன் வாழ, எதையும் செய்ய முடியும்.

உங்கள் மனைவியிடம் மென்மையாகப் பேசுங்கள், அவளிடம் கத்தாதீர்கள். கூச்ச லிட்டு ஆணாக உங்கள் பலவீனத்தை ஆணவத்துடன் காட்டாதீர்கள்.

கூச்சலிட்ட ஆண்கள் எல்லாம், வாழ்க் கையின் இறுதியில் பேச ஆளில்லாமல் கூடத்தில் மூலையில் கிடத்தப்பட்டு இறுதியில் இறந்து போனவர்கள். புரிந்தால் வாழ்க்கை உங்களுடையது.. வாழ்த்துக்கள்.

அஜய்குமார் பெரியசாமி.
(முகநூல் பக்கத்திலிருந்து)

# கீறல் 10 வெளியீட்டு நிகழ்வு (26.05.2024)
# அல்–அஷ்ரப் மஹா வித்தியாலயம், மாவடிப்பள்ளி



Cover Design : Sajith Ali

இல. 59/2, பழைய தபாலக வீதி, ஒலுவில் -07 (கி.மா) த.கு.எண் : 32360 இலங்கை.